பக்கங்கள்
24

புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 18 மார்ச் 2017 | விதி : 40




**கலைப்பீட கலவரம் பரிதவிக்கும் மாணவர்கள்**



**காணி நிலம் வேண்டும்**



**ஆறாவடு**



**மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை**

# வாழ்வில் செருகப்பட்ட கறள் கத்தி



ஒளிப்படம் : யாழ் தீபன்

**'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆறாவடு

■ சயந்தன்

வெற்றி கத்தினான்.

"மரியாதையாச் சரண்டர் ஆகு. உன்னட்டைத் துவக் கில்லையெண்டு எனக்குத் தெரியும்"

தொட்டிக்குப் பின்புறமிருந்து கைகளை மேலே உயர்த்தியவாறு இளைஞன் ஒருவன் வெளியே வந்தான். வெற்றியை விட இரண்டொரு வயதுகள் கூட இருக்கலாம். முகத்தை மறைத்து தாடி வளர்த்திருந்தான். கடும் நீலத்தில் டெனிம் ஜீன்ஸ்சும், முழங்கால்களைத் தொடும் சேட்டும் போட்டிருந்தான்.

வெற்றி புன்னகைத்துக் கொண்டான். அப்பொழுதே "மூளாய் பிள்ளையார் கோயிலடி முன்றல்" என்று மனதிற்குள் குறித்துக்கொண்டான். அவன் கைகளைக் கட்டி ஏற்றிச் செல்ல வசதியாக ஏதேனும் கயிறு கிடைக்குமா என்று வெற்றி பார்வையைத் திருப்பிய நிமிடத்தில் அது நடந்தது.

சேட்டைத் தூக்கி இடுப்பில் செருகப்பட்டிருந்த பிஸ்டலை உருவியெடுத்த தாடிக்காரன், தனக்கும் வெற்றிக்கும் இடையில் ஒன்றிரண்டு அடிகள் இருக்கத்தக்கதாக வெற்றியைச் சுட்டான்.

வெற்றியிடமிருந்து முதலில் துப்பாக்கி நழுவி விழுந்தது. பிறகு வெற்றியும் சுருண்டு விழுந்தான். அவன் செத்தபிறகும் அவன் மீது குண்டுகள் பாய்ந்து கொண்டிருந்தன.

அன்றைக்குப் பொழுது சாயும் வரைக்கும் வெற்றியின் சல்லடையாக்கப்பட்ட உடல், தண்ணீர் தொட்டிக்குப் பக்கத்தில் சேற்றுப் பாத்தியருகில் இரத்தம் காய்ந்து போய்க்கிடந்தது. பிறகு இந்திய இராணுவத்தினர் அவனது உடலை ஜீப்பில் கட்டியிழுத்துக் கொண்டு போய் கேணியடியில் போட்டனர். அடுத்த நாள் காலை தேவபாலு சுடப்பட்டான்.

★★★

"ஒருக்கா உள்ளை வந்து பாருங்கோ" என்று அழைத்தான் விசாரணையாளன். இவர்கள் உள் அறைகளுக்கு நடந்தார்கள். அங்கு நிறையப்பேருக்கு விசாரணைகள் வேறுமாதிரியும் நடந்து கொண்டிருந்தன. இவன் தன்னையுமறியாமல் "பொறுப்பாளர்" என்று கூவினான். இவனது முன்னாள் பொறுப்பாளர், கைகள் பின்னால் கட்டப்பட்டு வெறும் ஜட்டியோடு தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தார். அவரை இந்தியவக்குக் கூட்டிப் போயிடுப்பார்கள் என்றுதான் இவன் நம்பியிருந்தான். "இந்திய வேசை மக்கள் நம்பவைத்துக் கழுத்தறுத்துப் போட்டாங்கள்" என்று விசாரணை இடைவேளையொன்றில் அவர் முனகியதாக, விசாரணையாளன் சிரித்துக்கொண்டு சொன்னான். பொறுப்பாளர் நிறைய இடங்களில் காயம் பட்டிருந்தார். அவருக்கு வயர்களாலோ அல்லது திருக்கை மீனின் வாலைக் கொண்டோ அடி விழுந்திருக்கலாம். உடலில் வரிவரியாகத் தழும்புகள் இருந்தன.

"ஆளைப்பாத்தா வரிப்புலி மாதிரி இருக்கென்ன..." என்றான் விசாரணையாளன். இவனில் புன்னகை கசிய முயற்சித்தது.

"உங்களுக்குத் தெரியாத ஒன்றில்லை. இவர்கள் தான் பெரிய தலைகள். இவர்களால் நாங்கள் நிறைய இழந்துமிருக்கிறோம். இவர்களைப் பற்றி எங்களுக்குத் தெரிந்ததைவிட அதிகமாக உங்களுக்குத் தெரியும். யார் யார் என்ன நடவடிக்கைகளில ஈடுபட்டவை என்ற விசயங்களை நீங்கள் தரவேணும்"

இவன் தரலாம் என்பதைப் போலத் தலையசைத்தான். அது தலையாட்டி அசைப்பதைப் போல மேலும் கீழுமாக இருந்தது. பிறகு சொல்லத் தொடங்கினான்.

"இவர்தான் இந்தியன் ஆமியைப் போகவேண்டாமென்று ஊர்வலம் ஏற்பாடு செய்தவர். சனங்களைப் பிடிச்சுக்கொண்டு வரச்சொல்லி ஓடர் போட்டவர். அதுக்கு நானே சாட்சியாக இருக்கிறேன். அதோ வாயைப் பொத்திக் கொண்டு நிற்கிறார் பாருங்கோ, அவர் எவ்வளவு ஆட்டம் போட்டவர் தெரியுமா.. திரேசம்மா என்றொரு கிழவி, இயக்கத்துக்குச் சாப்பாடு குடுத்தவ. அந்தக் கிழவியை இவர்தான் சுட்டவர்" ஒரு பொழுதில் இவன் தன்னிலை மறப்பதாக உணர்ந்தான். சொற்கள் தம்பாட்டுக்கு வேகம் கொண்டன.

"இங்க பொத்திக் கொண்டு இருக்கிறார், இவர்தான் எங்கடை பொறுப்பாளராக இருந்தவர். இந்தியன் ஆமிக்கு சப்பாத்தி சுட்டுக் குடுக்கிறதைவிட வேறை ஒண்டும் செய்திருக்காது நாய்... பிறகு பொறுப்பாளராம். ஆமி போகப் போது என்று கேள்விப்பட்ட உடனே இவரின் மூஞ்சையைப் பார்த்திருக்க வேண்டும். முழுசிக்கொண்டு திரிஞ்சது. எனக்கொரு ஆசை. இந்தக் குரங்கைக் குப்புற வளர்த்திப் போட்டு திரும்பிப்பார்த்தால் மண்டையில வெடி வைப்பன் எண்டு சொல்லி ஐந்தாறு மேல்வெடி வைக்க வேணும். கடைசி வெடியை இவன்ரை மண்டையில வைக்க வேணும்"

விசாரணையாளன் மிகச் சாதாரணமாக "அதுக்கென்ன, செய்தாப் போச்சு, நீர் எங்களோடையே நில்லுமன்.." என்றான். பிறகு "வெற்றியும் முந்தி ரெலோவில இருந்து எங்களோடை சேர்ந்த ஆள் தானே" என்று சொன்னான்.

"இவன் மிக மிகச் சாதாரணமாக "சரி" என்றான்.

★★★

மூன்று மாதங்களுக்குப் பிறகு இவனுக்கென்று புதிய பொறுப்பாளர்கள், புதிய நண்பர்கள் கிடைத்திருந்தனர். பயிற்சி நாளொன்றின் காலையில் "உங்களுக்கு ஏதாவது கருத்துக்கள் இருந்தால் சொல்லலாம்" என்ற போது இவன் "தான் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் தனது வாழ்வுக்கு ஒரு அர்த்தம் இருப்பதாக உணர்வதாகவும்" சொன்னான். தேவபாலுவை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது என்றும் சொன்னான். அப்பொழுது பொறுப்பாளர் "சில விசயங்கள் தலைமைக்கு தெரியாமல் நடந்துவிடுகின்றன. ஒரு சில போராளிகள் பிழை செய்யினம், ஆனா இயக்கம் ஒருக்காலும் பிழை விடாது" என்றார்.

★★★

பள்ளிக்கூடம் பக்கத்தில்தான் இருந்தது. ஆனால், எனக்கும் அதற்குமான தூரம் தான் அதிகமாக இருந்தது. இயக்கத்திற்கு வருவதற்கு நிறையக்காலம் முன்னரேயே நான் பள்ளிக்கூடத்தை தள்ளி வைத்திருந்தேன். படிப்பு துளியும் மண்டையில் ஏறவில்லை. எனக்கும் பள்ளிக்கூடத்திற்குமான கொஞ்ச நாட்களில் கூட பின்வாங்குகளை நான் தேடி விரும்பினேன். "பின்வாங்கன். முன்வாங்கான்" என்று மனோன்மணி மிஸ் சொல்லுவா.. அதன் அர்த்தம் கூட அப்பொழுது எனக்குச் சரியாகப் புரிந்திருக்கவில்லை. என் புத்தகப் பையில் புத்தகங்களை விட புளியம் பழங்களே அதிகமாயிருந்தன. புரொக்டர் குமாரசாமி வீட்டுப் புளியம்பழம் தெருவை மூடிப் படர்ந்திருந்தது.

அதற்குப் பெயர் தான் புளியமரமே தவிர, இனிப்புப் பழங்களையே அது உலுத்தியது. வாயைக் கூசச் செய்கிற சுவை.

பாருங்கள் பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பேசுகிற பொழுது என்னால் புளியம் பழங்களைப் பற்றியே பேச முடிகிறது. பள்ளிக்கூட வளவில் நின்ற மரத்து நெல்லிக்காய்கள், மில்கார பாலன் வீட்டு ஜம்புநாவல் என புளியம்பழங்களைப் போலவே வேறும் பல இருந்தன. பதினான்கு வயதுக்குப் பிறகு இந்தப் பட்டியலில் பாமினி என்றொரு வடிவான பெண்ணும், பவானி என்கிற இன்னொரு அழகான பெண்ணும் புதிய வரவாகச் சேர்ந்து கொண்டனர்.

பள்ளிக்கூடத்து நாட்களில் பாயும் புலி பண்டாரவன்னியனையும் மறக்க முடியாது. அதுவொரு நாடகம், என்னை விட ஒரு வயதிலும் ஒரு வகுப்பிலும் குறைந்த பொடியனொருவன், வேறு வேலையற்று அதனை எழுதியிருந்தான். காக்கை வன்னியனாக நான்தான் நடிக்க வேண்டும் என்றும் அவன் ஒற்றைக் காலில் நின்றான்.

"நாடகப்பிரதியை மனப்பாடம் செய்யும் மந்திரசக்தி எனக்கு இருக்குமென்றால், நான் ஏன் தவணைக்கொரு தடவை எல்லா ரீச்சர்களிடமிருந்தும் காதில் முறுக்கும் புறங்கையில் புற்றால் மட்டை அடியும் வாங்கப் போகிறேன்" என்று நான் மறுத்திருந்தேன். அதற்கு அவன் காக்கைவன்னியனுக்குக் கதைக்க ஒன்றுமில்லையென்றும், வெள்ளைக் காரத்துரையோடு அருகே நின்று பழரசம் குடித்தால் போதுமென்றும் மிகுதியை பண்டாரவன்னியன் - அவன்தான் - அது பார்த்துக் கொள்வான் என்றும் சொன்னான். அப்பொழுதுதான் நான் சபலப்பட்டிருக்க வேண்டும். நான் சம்மதித்தேன்.

ஆனால் கடைசி நாளன்று அந்நாளைய அரசர்கள் போல வேட்டியைக் கவட்டுக்கால் மடித்து ஒரு கோவணத்தைப் போலக் கட்டமுடியாது என்ற எனது நிபந்தனையை பண்டாரவன்னியன் எதிர்பார்த்திருக்கவில்லை. அவன் காலில் விழாத குறையாக என்னிடம் கெஞ்சிப் பார்த்தான். காக்கை வன்னியன் அசைந்துகொடுக்கவில்லை. அவன் ஜீன்சும் ரீ சேர்ட்டும் அணிந்து கொள்வதில் இருநூறு வீதம் உறுதியாயிருந்தான்.

நாடகம் தொடங்கியது. வெள்ளைக்காரத் துரையாக நடித்த விசுவலிங்கம் வெள்ளைக்காரர்களுக்கு எல்லாமே வெள்ளை என்று நினைத்திருக்க வேண்டும். வெண்ணிற தலை. வெண்ணிற மீசை, வெள்ளை நிற உடை, வெள்ளை நிற சப்பாத்து அதே நிறத்து சொக்ஸ் என்று வெளிறிப் போயிருந்தான்.

அவன் அருகே நான் மஞ்சள் நிறப் பழரசத்தை அருந்தியபடி நின்றேன். வெள்ளைத் துரையும் பண்டாரவன்னியனும் அடியடா பிடியடா என்று சண்டைப் பிடித்தார்கள்.

"போரெண்டால் புலிக்குணம், பொங்கும் இன்பக்காதல் என்றால் பூமணம்" என்று பண்டார வன்னியன் உறுமினான்.

வெள்ளைத்துரையும் விட்டுக் கொடுக்கவில்லை. "ஏய் மிஸ்டர் மன்னிப்புக் கேட்கிறாயா இல்லையா?" என்று அவன் கேட்ட இந்த இடத்தில்தான் நாடகம் திருப்பமொன்றைச் சந்தித்தது.

(வலிகள் இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஞ்ஞுகன்றன்

# மரபுவாழ்வில் செருகப்பட்ட



# கரள் கத்தி

நேரடியான போரும், அழிப்பும் ஏற்படுத்தும் தாக்கத்திற்கு நிகரானது, சனநாயக சூழல் என்று சொல்லிக் கொண்டு, மறைமுகமாக நிகழ்த்தப் படும் அடையாள அழிப்பு அல்லது புறக் கணிப்பு. தொடர்ச்சியாக இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழர் அடையாளங்கள் போரின் பின்னர் நேரடியாக அழிக்கப்பட்டோ புறக் கணிக்கப்படவோ செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மரபுரிமைகள், வாழ்வியல் அடையாளங்கள் என்பன மெல்ல, மெல்ல தமிழர் வாழ்வுநிலை யில் இருந்து தூரத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. எப்படி போர்க் காலத்தில் காவலரண்களும், போர் எல்லைகளும், மக்களை சொந்த நிலத்தில் அகதிகளாக்கி, சொந்த நிலத்திற்கு தூரமாக வைத்தனவோ அவ்வாறே மரபடையாளங்களும் தற்பொழுது தூரமாகக் கொண்டு செல்லப்பட்டு, அழிக்கப்பட்டோ, மறைக்கப்பட்டோ அல்லது உருமாற் றம் அல்லது கருத்து நிலை மாற்றத் திற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்தகாலத்தின் இருப்பு நிலையின் வரலாற்றை வாசிப்பதற்குரிய தொன் மங்களும், பண்டங்களும் அழிக்கப்படு வது மட்டுமல்ல இன்று அவை இராணுவ வலயங்களுக்குள் முடக்கப் பட்டுமுள்ளன.

வடக்கு - கிழக்கை எடுத்துக் கொண் டால், பிரதான அரசியல் நீரோட்டமா னது மைய அரசியல் கோரிக்கைகளின் பொருட்டு, உப்புக்குச்சப்பாக இராணுவ பிரசன்னத்தை மக்கள் வாழ்விடங்களில் இருந்து அகற்ற வேண்டும் என்று முன் வைக்கின்றது. ஆனால், அதற்கான அறிவார்ந்த ஆதாரங்களையோ காரணங்களையோ பிரதான அரசியல் போராட்டக்காரர்களால் முன்வைக்க முடியவில்லை. அல்லது அவர்களுக்கோ ஊடகங்களுக்கோ, புத்திஜீவிகளுக்கோ அக்கறையில்லை. மரபடையாளங்கள் இராணுவநிலைக்குள் உட்பட்டு இருக்கின்றன என்பது தொடர்பான அக்கறையும், விழிப்புநிலையும் சொந்த நிலத்தின் மக்களுக்கு இன்னும் அருட்டப்படவேயில்லை.

பொதுவாக, காலம்காலமாகவே இராணுவத்திற்கோ அல்லது ஆயுத வன்முறையில் ஈடுபடும் குழுவிற்கோ ஒரு மனநிலை இருக்கும். அது என்ன வென்றால் கடல், காடு, நிலம் எதிலும் பெரும் சுவர்களும், பெரும் கட்டடங் களும், கோபுரங்களும் கொண்ட அரண்களையும் கோட்டை கொத்தளங் களையும் அடைவது.

அங்கே, தமது இருப்பை ஏற்படுத்திக் கொண்டு, அதிகார்புலமாக அதனை மாற்று வது. மரபடையாளங்கள், தொல்லியல் பண்டங்கள், இயற்கை மரபுரிமைகள் மீது அதிகார மனநிலைக்கும் இருக்கும் பேராசை என்பதை பற்றி வரலாற்றில் ஏராளம் ஆதாரங்கள் இருக்கின்றன.

தமிழ்நாட்டை கைப்பற்றிய முஹமதி யர்கள் நேராக நுழைந்த இடம் தமிழ் நாட்டின் பெருங்கோயில்கள் தான். இலங் கையை ஆக்கிரமித்த போர்த்துக்கேயர்கள் கோட்டை கட்டியது கோயில்களையும், மரபுச்சின்னங்களையும் இடித்துத்தான். ஹிட்லரின் படைகள் ஐரோப்பா முழுவ தும் உள்ள அருங்காட்சியகங்களைச் சூறையாடின. செங்கிஸ்கான் போன்ற மன்னர்கள் பலநாடுகளின் தொல்லியல் பொக்கிசங்களை அள்ளிவருவதை பொழுது போக்காகவே செய்தனர். இது போல ஏராளம் ஆதாரங்கள் உள்ளன. இராணுவ மனநிலை அல்லது ஆயுத மன நிலை என்பது மக்களின் வாழ்வியலைப் பற்றியோ அல்லது மரபடையாளங்களைப் பற்றியோ இயல்பாகவே அலட்டிக் கொள் ளாதது, அது அதிகாரத்தை நிலை நிறுத்தும் பண்டங்களாகவே அவற்றைப்பார்க்கும். அதுவும் ஒரு பேரினவாத அரசினால் வழிநடத்தப்படும் இராணுவம் என்பது சொல்லவே வேண்டாம்.

வடக்கில் இருக்கும் இராணுவ பிரசன்னம் என்பது தொடர்ச்சியாக மரபடையாளங் களையும், தொல்லியல் இருப்பையும் அழித்துக் கொண்டும் அவற்றின் இயக்கத்தை தடுத்தும் வருகின்றன.

**அவற்றில் பிரதானமாக**

**1. மரபார்ந்த நிலங்கள் மீதான இராணுவப் பிரசன்னமும் இருப்பும்.**

**௨. இராணுவம் உருவாக்கும் புதிய நிலத்துக்கு ஒவ்வாத அடையாளங்கள்.**

**௩. இராணுவ நிலைகளாக உள்ள தொல்லியல் மரபு இடங்கள்.**

**4. இராணுவ நிலைகளுக்குள் அல்லது வலயத்துக்குள் இருக்கும் சமய அடையாளங்கள், மரபுகள்.**

**5. இயற்கை மரபுவாழிடங்களில் இராணுவப் பிரசன்னம்.**

மரபார்ந்த நிலத்தில் இராணுவ நிலைகளின் இருப்புப் பற்றிய பிரச்சினை நீண்டகாலமாகவே மக்களுடன் முரண் பட்டபடியுள்ளது. சமீபத்தில் பிலக் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, பரவிப் பாஞ்சான் போன்ற இடங்களில் உள்ள காணிகளை விடுவிக்க மக்கள் போராடி, கணிசமான காணிகளை பெற்றுக் கொண்டு, வாழ்வு நிலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

எனினும், இன்னும் விடுவிக்கப்படாத ஏராளமான காணிகள் காணப்படுகின்றன. மக்கள் தொடர்ச்சியாக போராட வேண்டியிருக்கின்றது.

(23 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத்தர வரிசை

## 01 மரண கலாய் கலாய்க்கப்பட்ட ஐஸ்வர்யா



சமூக வலைத்தளங்களில் கடந்த வாரம் முதலிடத்தைப் பிடித்தது ஐஸ்வர்யாவின் நடனம்தான்.

நடிகர் ரஜினியின் மகளும் நடிகர் தனுஸின் மனைவியுமான ஐஸ்வர்யா பெண்கள் தினத்தன்று ஐ.நாவில் பரத நாட்டியம்(?) ஆடினார். அந்த நாட்டியத்தை கலாய்த்துத் தள்ளிவிட்டார்கள் சமூகவலைத்தளப் பதிவர்கள்.

ஐ.நாவின் நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்ட அவர் இந்தியாவின் சார்பில் ஐ.நாவில் முதன்முதலாக நடனமாடியவர் என்ற பெருமையைப் பெற்றார். ஆனால், அவர் ஆடியது பரத நாட்டியம் தானா? என பிரபல நடனக்கலைஞர்கள் கேள்வி எழுப்ப, அவரது நடனத்தை நையாண்டி செய்து தெறிக்க விட்டிருக்கிறார்கள் வலைத்தளப் பதிவர்கள்.

திரைப்படங்களில் காமெடியன்கள் ஆடிய நடனத்தையும், வேறு காட்சிகளையும் செருகியும், ஐஸ்வர்யா எப்படி நடனமாடினார் என நக்கலாக வீடியோக்களை பதிவேற்றியும் மரண கலாய் கலாய்த்து விட்டார்கள். இதனால் கடந்தவாரம் முதலிடம் பிடித்து ஐஸ்வர்யாவின் நடனம்தான்.




காட்டில் ஒரு பசு வேகம.. ஓடிக்கிட்டு இருந்திச்சு அப்பா அதை ஒரு யானை வழிமறித்து என் இப்படி தலைதெறிக்க ஓடுறேன்னு கேட்டுச்சு அதற்கு அந்த பசு சொன்னுச்சாம் இந்திய அரசாங்கம் காட்டில் உள்ள அனைத்து எருமையையும் பிடிக்க சொல்லி உத்தரவு போட்டிருக்கு அதான் இப்படி ஓடுறேன்னு சொல்லிச்சு அதற்க்கு அந்த யானை நீ பசுதானே அப்பறம் என் ஓடுற என்று கேட்டுச்சு அதற்க்கு அந்த பசு சொன்னிச்சு நான் பசு என்று எனக்கு தெரியும் ஆனா அரசாங்கம் பிடிச்சதுனா நான் எருமை இல்லை பசுதான் என்று நிருபிக்க 20 வருடமாவது ஆகும் என்று சொல்ல இப்ப பசுவோட சேர்ந்து யானையும் ஓடுச்சாம்.....
கேட்டதில் பிடித்தது....

## 02 வீடு-சைக்கிள் மோதல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா கூட்டம்தான் சமூக வலைத்தளங்களில் கடந்த வாரம் முன்னிலை வகித்தது.

கூட்டத்துக்கு முன்பாக, கூட்டம் நடக்கவிருந்த ஹோட்டலை விசேட அதிரடிப்படை பாதுகாப்பு சோதனை நடத்தியது. விவாதப் பொருளான இந்த விடயத்தால் கூட்டமைப்பு ஆதரவினரும் எதிராளிகளும் கடுமையாக மோதிக் கொண்டனர்.

தமிழ் மக்களை கொன்ற விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டம் நடத்துவது வெட்கக் கேடானது எனச் சிலர் பதிந்தனர். இவ்வாறு பதிவிட்டவர்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராக அடையாளம் காட்டி, அக்கட்சியை சேர்ந்தவர்களும் முன்னர் பிரதிநிதிகளாக இருந்தபோது விசேட அதிரடிப் படையுடன் சகவாசம் வைத்தவர்கள்தான் என்று பதிலடி கொடுத்தனர் சிலர்.

ஆதரவும் எதிர்ப்புமாக பதிவுகள் பறக்க, தங்கள் நிலைப்பாடுகளையும் பலர் கருத்துக்களாகக் கொட்டினர். தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ன அடிப்படையில் கூடினர் என்றும் சிலர் விளக்கம் கொடுத்தனர். வீடு ஆதரவாளர்களுக்கும் சைக்கிள் ஆதரவாளர்களுக்கும் இடையில் நீண்ட நாளின் பின்னர் ஏற்பட்ட மோதல் இது. இன்னமும் முடிவுக்கு வராது ஓடிக் கொண்டேயிருக்கிறது.



## 03 போராளியின் தேர்தல் தோல்வி



கடந்த வாரம் தமிழ் சமூக வலைதளப் பதிபவர்களை அதிகம் ஈர்த்தது இரோம் ஷர்மிளாவின் தேர்தல் தோல்வி.

இரோம் ஷர்மிளா இந்திய அரசுக்கு சிம்மசொப்பனமாக இருந்தவர். ஆயுதப் படை சட்டத்தை மீளப்பெற வேண்டும் எனக் கோரி சுமார் 16 ஆண்டு காலம் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியவர்.

காந்தியின் வழியில் போராடியவர்களைத்தான் இந்திய அரசு எப்போதும் கண்டுகொள்வதில்லையே. இதனால் அவரைக் கைது செய்து ஏராளமான துன்புறுத்தல்களை அந்த அரசு செய்தது.

இந்நிலையில் கடந்த வருடம் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்திய ஷர்மிளா, மணிப்பூர் சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்டார். இதில் அவர் வெறும் 90 வாக்குகளையே பெற்றார்.

போராளிகளை மக்கள் மதிப்பது - கண்டுகொள்வதில்லை என முகநூலில் போராளிகள் கொண்ட கவலையால் பதிவுகள் நிறைந்துவிட்டன.

## இந்தவார மீம்ஸ் (Meme)

வளர்த்த தாயின் முதுகில் ஏறி பெற்ற தாய்க்கொரு முத்தம்.






## சுவரில் கொய்தவை

**Karthika Kadhirkamanathan**

சமத்துவம் பேணும் ஆண்களிடத்தில் பெண்ணியம் பேசுவதற்கு அவசியமேற்படுவதில்லை

**Sovin Nivos**

"நமக்காக #உயிரை விடுபவர்களை எப்படி #பிடிக்காமல் போகும்.?"

"அதனால்தான் எனக்கு #சிக்கன், #மட்டன், #மீனெல்லாம் ரொம்பப் பிடிக்கும்.."

இணையவாசிகளுக்கு https://www.facebook.com/puthuvithieditorial/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:

ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com


## பாவம் அந்தோனியார்

இந்த வருடம் கச்சதீவுத் திருவிழா ஒருகைத் தாளமாக பொலிவின்றி நடைபெற்று முடிந்திருக்கிறது. கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவின் தனித்துவமே இந்திய-இலங்கைத் தமிழர்களின் சங்கமிப்புத் தான். கடலால் பிரிக்கப்பட்ட தமது உறவுத்தொடரை ஒருநாள் திருவிழாவிலாவது மீட்டெடுக்க இரு தரப்பினரும் பயங்கரமான கடற்பயணத்தையும் தாண்டி கச்சதீவில் கால் பதிப்பார்கள். மகிழ்ந்திருப்பார்கள்.

போர் உக்கிரம் பெற்ற காலங்களில் இந்த வழக்கம் அற்றுப் போனாலும், போருக்குப் பின்னர் மீண்டும் பழையபடி களைகட்டத் தொடங்கியது. ஒவ்வொரு வருடமும் அங்கு வரும் இரு நாட்டு யாத்ரீகர்களின் எண்ணிக்கையும் ஆரோகணத்திலேயே இருந்தது.எனவே இந்த வருடம் இன்னும் அதிகமாக பக்தர்கள் வருவார்கள் என்ற அடிப்படையில் மேலதிக வசதிகள் பலவும் கச்சதீவில் செய்யப்பட்டன. சில மாதங்களுக்கு முன்னர் கச்சதீவு அந்தோனியார் ஆலயம் கூட புனரமைக்கட்டு திறக்கப்பட்டிருந்தது. புதுபொலிவுடனும், வசதிகளுடனும் பக்தர்களை வரவேற்கக் காத்திருந்த கச்சதீவுக்கு பேரிடியாக வந்து சேர்ந்தது பிரிட்ஜோவின் படுகொலை.

தமிழகம் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவ இளைஞனான பிரிட்ஜோ என்பவர் பெப்ரவரி 6 ஆம் திகதி இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் தமிழக மீனவர்கள் கொந்தளித்தனர். பிரிட்ஜோவின் சாவுக்கு நீதி வேண்டும் என போராட்டங்களிலும் ஈடுபட்டனர். அவர்களின் போராட்டத்தின் ஒரு வடிவமாக கச்சதீவுத் திருவிழாவை புறக்கணிக்கும் முடிவை எடுத்தார்கள். "மணமகள் இல்லாத கல்யாணம்ா?" இந்திய மக்கள் கலந்து கொள்ளாமல் கச்சதீவு திருவிழா முழுமை பெறுமா? எனவே இரு நாட்டு அரசுகளும் தமிழக மீனவர்களை சமாதானப்படுத்தி கடைசி நேரத்திலாவது அவர்களை கச்சதீவுக்கு வரவழைக்க பகீரதப் பிரயத்தனம் செய்தன.

நீண்டகாலம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களில் 77 பேர் திடீரென விடுவிக்கப்பட்டனர். ஆனால் என்னதான் "ஐஸ்" வைத்த போதும், தமிழக மீனவர்கள் தமது பிடியை விட்டுக் கொடுக்கவில்லை. "எமது பக்கத்தில் இருந்து பலியெடுக்கப்பட்ட கடைசி உயிராக பிரிட்ஜோவின் உயிரே இருக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் இலங்கையுடன் பேசி, இந்தியா சாதகமான முடிவுகளை எடுக்க வேண்டும்" என்பதே அவர்களின் கோரிக்கையாக இருக்கிறது. எனவே "அந்தக் கோரிக்கையை நடைமுறைப்படுத்தும் வரை தமது நிலையில் இருந்து பின்வாங்கப் போவதில்லை" என்று மீனவர்கள் கூறிவருகின்றனர்.

ஒரு மீனவனின் சாவு கச்சதீவை இம்முறை "காற்று வாங்கும் தீவாக" மாற்றிவிட்டது. அந்தோனியார்தான் பாவம். தனது மந்தைகளைக் காணாமல் அந்த மீட்பர் கவலை கொள்ள வேண்டியதாகிற்று.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



### கலைப்பீட கலவரங்கள்

## "என்னம்மா இப்பிடிப் பண்றிங்களேம்மா...?"

ஆதங்கன்

அண்மைக்காலமாக அமைதிப் பூங்காவாக இருந்த யாழ்.பல்கலைக்கழகச் சூழல், மீண்டும் தீப்பிழம்பாக கொழுந்து விட்டெரியத் தொடங்கியுள்ளது. மாணவர்களுக்கும், நிர்வாகத்துக்கும் இடையிலான முரண்பாட்டின் எதிரொலியாகக் கலைப்பீடம் காலவரையறையற்று இழுத்து மூடப்பட்டுள்ளது. கடந்தவருடம் சிங்கள - தமிழ் மாணவர்களிடையே புதிய மாணவர்களை வரவேற்பது தொடர்பான நிகழ்ச்சிகளில், கலாசார நடனம் சம்பந்தமாகத் தொடங்கிய சர்ச்சை பல்கலைக்கழகத்தை இழுத்து மூடுவதற்கு வழிவகுத்திருந்தது.

இச்சம்பவம், அதுநாள் வரை வெறும்வாயை மென்று கொண்டிருந்த அரசியல்வாதிகளுக்கும், இனவாதிகளுக்கும் அல்வா கொடுத்ததைப்போல ஆகியிருந்தது. அதுவும் சிங்கள இனவாதிகள் அதை வைத்துச் சப்பித் துப்பியது கொஞ்ச நஞ்சமல்ல. புலி, பூனை எல்லாம் ஒரேயடியாக பல்கலைக்கழகத்துக்குள் வந்துவிட்டதாகக் கூக்குரலிட்டனர்.

இதிலே குளிர்காய்ந்தவர்கள் அரசியல்வாதிகளும், பல்கலைக்கழக உயர்மட்ட அதிகாரிகளும் தான். இந்தச் சந்தர்ப்பத்தில் "சிங்கள மாணவர்களுக்குச் சாதகமாக தான் இருக்கிறேன்" என்று சொல்லி அரசபீடத்தின் நற்சாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார் துணைவேந்தர்.

"தமிழர்களுக்குரிய பல்கலைக்கழகமாக இருக்கும் தனித்துவத்தைப் பலவீனப்படுத்தும் அதிகாரத்தின் சூழ்ச்சிக்கு மாணவர்களும் தம்மையறியாமலே பலியாகிக் கொண்டிருக்கிறார்கள்" என்பதற்கான சமீபத்திய உதாரணமே "கலைப் பீட கலவரமும், இழுத்துப் பூட்டப்பட்ட பீடமும்".

"சர்வதிகாரத் தன்மை கொண்ட ஒரு அரச, இயந்திரத்தைப் போலச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது, பல்கலைக்கழக நிர்வாகம்" என்பது மாணவர்களுக்குத் தெரியாத ஒன்றில்லை. எப்போது மாணவர்கள் தவறிழைப்பார்கள்? எப்போது அதை வைத்து தமது அதிகாரத்தை நிலை நிறுத்தலாம்? எனக் கண்கொத்திப் பாம்பாக பார்த்துக் கொண்டிருக்கும் நிர்வாகத்தினை வாய்க்கப் பெற்றவர்கள் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள். ஏனெனில், தமது நிர்வாகத் திறமையினால் ஏற்படும் குறைபாடுகளுக்கெல்லாம், மாணவர்களது ஒழுங்கீனத்தைக் காட்டியே காலத்தை நகர்த்தக் கூடிய வல்லமை அவர்களுக்கு மட்டுமே உண்டு, என்ற விடயம் மாணவர்களுக்குத் தெரிய வேண்டும். கடந்த காலங்களில் நிகழ்ந்த பல கசப்பான சம்பவங்கள் இதனையே படிப்பினையாகவும் தந்திருந்தன.

பல்கலைக்கழக நிர்வாகமும் ஏதோ ஒரு பல்தேசியக் கொம்பனி போல நடந்து கொள்வதுதான் வேதனைக்குரிய விடயம். நடந்த சம்பவத்தைப் பார்த்தால் மாணவர்களைப் பழிவாங்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போலத் தெரிகிறது.

"இது எங்கள் நிறுவனம். இங்கே படிப்பவர்கள் எங்கள் பிள்ளைகள். முரண்பாடுகளை வளர்ப்பதை விடவும் மாணவர் கல்வி முக்கியம்" என்ற உணர்வு நிர்வாகத்திடம் இல்லாது போனது ஏன்? பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒரு உயர் மட்ட அனுபவம் மிக்கவராகவும், சமுதாயம் பற்றிய பூரணஅறிவு நிறைந்தவராகவும் இருப்பது அவசியம்" என்ற கருத்து இதுபோல சந்தர்ப்பத்தில்தான் வலுப் பெறுகின்றது. ஏனெனில், பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கென வருபவர்கள் அனைவரும் இளைஞர்கள். அதுவும் தற்போது வருபவர்கள் எல்லோரும் போர்க் காலத்தில் பிறந்தவர்கள். போருக்குப் பின்னால் எமது சமுதாயமானது பல வழிகளிலும் பிரச்சினையை எதிர்கொள்ளுகின்ற ஒரு சமூகமாகவே இருக்கிறது.

வாழ்வாதாரத்துக்கு மாத்திரமல்லாமல், அரசியல், பொருளாதாரம், சுற்றுச் சூழல், சுகாதாரம் என்று தொடராகப் பல இன்னல்களோடு போராடிக் கொண்டிருக்கின்ற சமூகத்திலிருந்து வருபவர்களிடம் என்ன இருக்கும்? என்ன இருக்காது? என்று அறியும் ஆற்றலை கொண்டிராத பல்கலைக்கழக நிர்வாகத்தின் குறைபாடே சகல பிரச்சினைகளுக்கும் வித்திடுவதாக மக்கள் கருதுகின்றனர். "குடும்பத்தலைவன் பொருத்தமற்றிருந்தால் குடும்பம் சின்னாபின்னப்படுவதை தவிர்க்க முடியாது" அடிக்கடி அடிதடி, சண்டை, இழுத்து மூடுவது என்று பல்கலைக்கழகம் இருக்குமானால், அது பல்கலைக்கழகமல்ல. மாறாக சுயலாபத்தை முன்நிறுத்தி ஒரு குழுமத்தால் இயக்கப்படும் வணிக நிறுவனமாகத்தான் அதைப் பார்க்க முடியும். நிலைமையை வழமைக்குக் கொண்டுவர அதிரடி நடவடிக்கையாக கல்வியை நிறுத்துவது அல்லது பல்கலைக்கழகத்தை மூடுவதை உடனடி நிவாரணி என்ற அடிப்படையில் நிர்வாகத்தின் பார்வையில் சரியென்று வைத்துக் கொண்டாலும், ஒரு பொறுப்பற்றதனமாக, கொலை, கொள்ளைகள் நடைபெற்ற இடம் போல, நாள் கணக்கில்- காலவரையறையற்று- ஒரு பல்கலைக்கழகத்தை மூடிவைப்பதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒவ்வொரு வருடமும் புகுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வு பீட ரீதியாக நடைபெறும். வரவேற்புக்கு முதல் நாளிரவு, அலங்கார வேலைகள் செய்ய சகல ஆண் மாணவர்களும் வருவார்கள். இதன் போதுதான் 'அலக்கேசன்' எனப்படும் நிதி மதுபாணங்களுக்காக ஒவ்வொரு வருட மாணவர்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். 'சீனியோரிட்டி' அடிப்படையில் இந்தத் தொகையின் பிரிபங்கு அமையும். அலங்காரம் நடைபெறுகிறதோ! இல்லையோ! மதுபான விருந்து நடைபெற்றே தீரும். அப்படி மதுவேறிய சிலருக்கு உருவேறவும் செய்யும். "அம்பியாக" இருந்த அத்தகைய சிலர் "அந்நியனாக" மாறி அட்டகாசங்களில் இறங்குவர். கடந்த காலங்களில் நீறுபூத்த நெருப்பாக மனதுக்குள் கறுவிக் கொண்டிருந்த வன்மங்களுக்கு, மறுவாழ்வு கொடுத்து அடிதடியில் இறங்கி விடுவார்கள்.

(07 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சிறப்பு பல்கலைக்கழகம்

## காலத்தின் கட்டாய தேவை

ஒவ்வொரு தேசிய இனங்களும் தங்களது மொழி, மரபு, நாகரிகம், சமயம், வரலாறு, கலை, மருத்துவம் என்று தங்களது மரபுகளைத் தற்காப்பதற்கு பல்வேறு நிலைகளிலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற் கொள்ளும். அவ்வகைச் செயற்பாடுகளில் ஒன்றுதான் உயராய்வு நிலையில் தங்களது மரபுசார்ந்த கூறுபாடுகளை ஆய்ந்து நடைமுறையில் தொடர்பானவற்றைத் தொடரச் செய்யும். அழிவின் விளிம்பில் உள்ள மரபுச் செல்வங்களை தக்கவைத்து மீண்டும் நடைமுறைப்படுத்துதலுக்கும், ஆவணப்படுத்துதலுக்கும் அடிப்படையான களங்களாக அமைபவை பல்கலைக் கழகங்களே.

பல்கலைக் கழகங்களைப் பொறுத்த வரையில் இரு வகைமையின் கீழ் அடக்கலாம். பொதுப் பல்கலைக் கழகங்கள், சிறப்புப் பலகலைக் கழகங்கள் என்பனவாம் அவை. பொதுப் பல்கலைக் கழகங்கள் என்பவை வேறுபாடுகளையுடைய பல்வேறு துறைகளையும் உடையதாக அமையும். சான்றாக இலங்கையில் கொள்வோமெனில், கொழும்புப் பல்கலைக் கழகம், பேராதனைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக் கழகம், தென்கிழக்குப் பல்கலைக் கழகம் முதலானவற்றைக் கொள்ளலாம். இப் பல்கலைக் கழகங்களில் கணிதம், இயல்பியல், புவியியல், வேதியல், மொழிப் பாடங்கள் என்பன போன்ற மேற்குலகக் கல்விமுறையும், தாயகக் கல்வி முறையும் கலந்த கலவையாகக் கற்பிக்கப்படுகின்றன, ஆயப்படுகின்றன. ஆனால், சிறப்புப் பல்கலைக் கழகங்கள் இவற்றிலிருந்து அடிப்படையிலேயே மாறுபாடுடையனவாக அமைகின்றன. அவை ஏதேனும் ஒரு மையக்கருவை அடிப்படையாகக் கொண்டு இயங்குபவை. இத்தகைய மையக் கருத்தியலுக்காகவே உருவாக்கம் பெற்று, உயர்மட்ட ஆய்வு நிலையிலும், கற்பித்தல் நிலையிலும் மையக் கருத்தியலின் அடிப்படையிலேயே நகர்பவை. சான்று காண வேண்டின், எகிப்தின் கெய்ரோ பல்கலைக் கழகம் தமிழகத்தின் தஞ்சையிலமைந்த பல்கலைக் கழகம், தெலுங்கானாவின் ஐதராபாத்தில் அமைந்த பொட்டி ஸ்ரீ ராமுலு நாயுடு தெலுங்குப் பல்கலைக் கழகம், கர்நாடகத்தின் ஹம்பியில் அமைந்த கன்னடப் பல்கலைக் கழகம், ஆமலக் கோட்டையில் அமைந்த சமஸ்கிருதப் பல்கலைக் கழகம், குஜராத்தில் அமைந்த பிரகிருதப் பல்கலைக் கழகம் முதலானவற்றைப் குறிப்பிடலாம். இலங்கையைப் பொறுத்தவரை ஒரே ஒரு பல்கலைக் கழகம் சிறப்புப் பல்கலைக் கழகமாக அமைகின்றது. கொழும்பிலுள்ள பாளி பௌத்த பல்கலைக் கழகமே அதுவாம்.

பொதுப் பல்கலைக் கழகங்களால் ஒரு குறிப்பிட்ட கருத்தியலில் முழுமையாகக் கவனம் செலுத்தவியலாததென்பதைக் குறிப்பிட்டு, அங்ஙனமாகில் சிறப்புப் பல்கலைக் கழகங்கள் எந்த வகையில் அவற்றுக்கு ஆவன செய்யும் என்பதைக் காணலாம். இதற்குச் சான்றாக இரண்டு பல்கலைக் கழகங்களைக் குறிப்பிடலாம். அவை கொழும்பிலுள்ள பாளி பௌத்த பல்கலைக் கழகம் மற்றம் தஞ்சையில் உள்ள தமிழ் பல்கலைக் கழகம் என்பனவாம்.

கொழும்பிலுள்ள பாளி பௌத்த பல்கலைக் கழகம் தங்கள் கருது கோள் நிலையில் நிறைவான பணிகளை ஆற்றி வருகின்றன. பௌத்த மதத்தின் திரிபீடக நூல்களுக்கு பாலி மொழியில் எழுதப்பட்ட பல உரைகள் தொகுக்கப் பட்டு பாதுகாக்கப்படுகின்றன. அவ் வுரைகளுக்குக் கூடுதலான விளக்கங்கள் பாளி மொழியில் எழுதப்பட்டுள்ளதோடு, சிங்கள விளக்கவுரைகளும் பல தோன்றியுள்ளன. இலக்கணத்துறை உருவாக்கப்பட்டு ஹித்த சங்கர கரகா போன்ற சிங்கள இலக்கண நூல்கள் பாளி மொழி இலக்கியங்களோடு பொருத்தி ஆயப்படுகின்றன. இலங்கை நாட்டார் வழக்காற்றிலுள்ள பௌத்த கதைகள் தொகுக்கப்பட்டு ஆவணமாக்கப்பட்டுள் ளன. பாளியிலும், பழம் சிங்களத்திலும் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் தொகுத்துப் பாதுகாக்கப்படுகின்றன. பௌத்தம் சார்ந்த ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகள் ஆயப்பட்டு ஆவணப்படுத்திப் பாதுகாத்தல், பரவலாக்கல், பதிப்பித்தல் முதலான பணிகளோடு பாலி, பௌத்த நூல்கள் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து பரவலாக்கம் செய்தல் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

தஞ்சையிலுள்ள பல்கலைக் கழகமும் தான் தொடங்கப்பட்ட 1981 ஆம் ஆண்டு முதல் தமிழியல் சார்ந்த 25 துறைகளாக வளர்ச்சியடைந்து, பல்வேறு உயர்மட்ட ஆய்வுப் பணிகளை ஆற்றியுள்ளது. சான்றுகளாக 20வகைக் களஞ்சியங்களை வெளியிட்டுள்ளது. அறிவியல் தமிழ் களஞ்சியங்கள் 17 தொகுதிகளாக வந்துள்ளன. கோயில் களஞ்சியங்கள் 4 தொகுதிகளும் வந்துள்ளன. சங்க இலக்கியச் சொற் தொகுதிகள் 2 வெளி வந்துள்ளன. வாழ்வியற் களஞ்சியங்கள் 20 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. பிற களஞ்சியங்கள் நான்கு வந்துள்ளன. இலக்கிய நூல்கள் 72 வெளிவந்துள்ளன. கல்வெட்டியல் சார்ந்து 12 நூல்கள் வெளிவந்துள்ளன. சட்டத்துறை சார்ந்து 4 நூல்களும், மருத்துவியலில் 33 நூல்களும், இசையியலில் 26 நூல்களும், நாடகவியலில் 11 நூல்களும், இலக்கணம் சார்ந்த 13 நூல்களும் தமிழ் சமூகவியச் 60 நூல்களும், மானிடவியலில் 14 நூல்களும் சுவடியியலில் 19 நூல்களும், நாட்டுப் புறவியலில் 10 நூல்களும், சிற்பவியலில் 5 நூல்களும், சமயம் மற்றும் மெய்யிய லில் 5 நூல்களும் கலைச்சொல் அகராதிகள் 11, மொழிபெயர்ப்புக்கள் 5, பொறியியல் நூல்கள் 7, அரச வெளியீடுகளாக 12 நூல்களுமாகத் தமிழ் பல்கலைக் கழகத்தால் பதிப்பித்து வெளியீடு செய்யப்பட்டன. அத்தோடு பல்வகைப் பட்ட தமிழியல் சார்ந்த பயிற்சிப் பட்டறைகளும், அறக்கட்டளை ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளும், கருத்தரங்குகளும், ஆய்வ்ரங்குகளும், தமிழ்ப் புலத்தில் தங்களது மரபுகளைக் காக்கவும், மீட்டுருவாக்கம் செய்வதற்கும் ஏற்பாக அமைந்தன. மதுரைத் தமிழ் சங்கம், உலகத் தமிழராய்சி நிறுவனம், தமிழ் வளர்ச்சித்துறை, உலகத் தமிழ் சங்கம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்பனவாகப் பெருகிற்று.

இலங்கை பாளி பௌத்த பல்கலைக் கழகத்தின் மூலம் தங்களது பண்பாட்டை யும், இலக்கிய மொழி வரலாற்றினையும், உயர்மட்ட ஆய்வுக்கு ஆட்படுத்தி வளர்த்துக் கொள்ள முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர். மேற்கண்ட யாவும் வரவேற்கத்தக்க நிகழ்வுகளே. ஈழத்தினைத் தாயகமாகக் கொண்ட தமிழரின் நிலைப்பாடுகள் தான் இவ்விடத்தில் எண்ணப்பட வேண்டிய தாகின்றது. ஈழத்துக்கென்று தனித்தனி நாட்டுப்புற வழக்குகள் உண்டுதானே? ஈழத்துக் கென்று தனித்தனி சிலம்பம் போன்ற விளையாட்டுக்களும் தமிழர் மரபு விளையாட்டுக்களும் உண்டு தானே? ஈழத்திற்கென்றே கண்ணகி வழிபாடு, சித்தாந்தம் போன்ற வழிபாட்டு மரபுகள் உண்டுதானே? ஈழத் தமிழரின் வானியல் அறிவும், சோதிட மரபும் தனித்துவமானது. நெடும்பனை ஓலை கொண்டு எழுதிய சுவடிக் கட்டுகளைக் காக்கவும், படிக்கவும், சுவடிப்புலம் வேண்டாமா? அருந் தமிழ் சுவடிகளை ஆய்வதற்கு உட்படுத்தி பதிப்பிக்க மதிப்புத்துறை தேவையில்லையோ? ஒப்பீட்டு நிலையில் பனடமொழி அகராதிகளையும், வழக்குச் சொற் களஞ்சியங்களையும் உண்டாக்க வேண்டிய தேவையில்லையோ? கூத்தின் வகைமைகளை ஆய்ந்து முறை செய்ய வேண்டாமோ? என்பன போன்ற தமிழியல் சார்ந்த பல்வேறு உயர்மட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுதலுக் கும், தமிழர்கள் தங்களது மொழி, பண்பாட்டு சமய மரபுகளைப் பாதுகாத்த லுக்கும், தமிழர்க்கென்ற சிறப்புப்பல்க லைக் கழகம் இன்றியமையாததாகின்றது.

ஏன் சிறப்புப் பல்கலைக் கழங்கள் வேண்டும். இப்போ இரண்டு பொதுப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றனவே. அதோடு பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் ஒரு தமிழ்த் துறை உண்டு.

(19 ஆம் பக்கம் பார்க்க...)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05 ஆம் பக்க தொடர்ச்சி...)

# கலைப்பீட கலவரங்கள்




# “என்னம்மா இப்பிடிப் பண்றிங்களேம்மா...?”

## விரிவுரையாளரின் ஆதங்கம்

“அரசியல் பின் புலத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகம் என்று இயங்கத் தொடங்கியதோ? அன்று தொடக்கம் எல்லாவற்றிலும் நியாயமற்ற அடக்கு முறை தோன்றிவிட்டது.

மாணவர்களும் சரி, விரிவுரையாளர்களும் சரி, பல்கலைக் கழகப் பணியாளர்களும் சரி நியாயத்தைப் பேச முடியாது வாயடைக்கப்பட்டனர். அப்படிப்பேசுபவர்கள் பல வழிகளிலும் பழிவாங்கப்பட்டனர். பழி வாங்கப்படுவார்கள் என்ற பய உணர்விலும் இருக்கின்றனர். அதையும் மீறி செயற்படுபவர்களின் வீடு தேடி, வேறு குற்றச்சாட்டுக்களுடன் பொலிஸ் அல்லது புலனாய்வுத்துறை சார்ந்தவர்கள் வருவர். இது நடைமுறையிலிருந்த விடயம்.

இதைவிட முன்பு விரிவுரைக்குப் பின்னால், மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்குமிடையே நல்ல முறையிலான உறவுநிலை பேணப்பட்டது. ஆனால் தற்போது உள்ள விரிவுரையாளர்களில் பலர் அத்தகைய நடைமுறையைப் பேணாதவர்களாகவும், அதை ஒரு கௌரவக் குறைவு போலவும் கருதுகின்றனர். நீண்டகாலமாக பல்கலைக் கழகத்தை பாடசாலை போல கருதுகின்ற செயற்பாடே இத்தகைய மோசமான விளைகளை ஏற்படுத்துகின்றது. சின்ன சின்ன விடயங்களில் கட்டுப்பாடுகளை விதிப்பதுவும், தேவையற்ற விடயங்களில் துணைவேந்தர் தலையிட்டு தனது மதிப்பைக் குறைத்துக் கொள்வதுவும், இப்படிப்பட்ட சிறுபிள்ளைத்தனமான விடயங்கள் தான். அதற்காக மாணவர்களை நான் நியாயப்படுத்த வரவில்லை.

யாழ். பல்கலைக் கழகம் முன்பு போல ஒரு சமூகம் சார்ந்ததாக இல்லை. சமூகச் செயற்பாட்டுக்குரிய நிறுவனமாக முன்பிருந்தது. அது இல்லாது போய்விட்டது. சமூகப் பண்பாளர்களை உள்ளே அனுமதிப்பதில்லை. சமூகம் சம்பந்தமாக நடத்தவிருந்த பல நிகழ்வுகளைக் கடைசி நேரத்தில் தடுத்து நிறுத்திய பல குற்றச்சாட்டுக்கள் இந்த நிர்வாகத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. யாழ்.பல்கலைக் கழகத்தின் பண்பாட்டை நல்ல முறையில் வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையை ஒரு சந்தர்ப்பமாக எடுத்து அதைச் செய்தால் ஆரோக்கியமாக இருக்கும்”



ஆளில் கை வைத்தால் அது பின்னொரு நாளில் தாங்கள் “அம்பியாக” இருக்கும் சமயத்தில், அடிவாங்கியவன் ஆட்களோடு வந்து கும்மியெடுத்து விடுவான் என்ற பயத்தில், பெரும்பாலும் தூஷண வார்த்தைகளைப் பறக்க விட்டு, அருகிலிருக்கும் மேசை, கதிரை, கல்லாசனம், தண்ணீர் பைப் என்பவற்றைத்தான் இந்த ‘வெல்கம் பார்ட்டி அந்நியன்கள்’ துவம்சம் செய்வார்கள்.

இந்தமுறையும் வரவேற்பு உபசார நிகழ்வு (வெல்கம் பார்ட்டி) கலைப் பீடத்தால் மார்ச் 11 ஆம் திகதி நடத்த ஏற்பாடாகியிருந்தது. முதல் நாள் வழக்கம் போல “அலக்கேசன்” பணத்தில் அமளியாக சோமபான விருந்தும் நடந்தது. விருந்தின் நடுவே மாணவர்கள் சிலருக்கும், விரிவுரையாளர்கள், மாணவ ஆலோசகர் என்போருக்கிடையே வாய்த்தர்க்கம் தோன்றியது. இந்த நிலையில் இரவு 8 மணி வரை நிற்கவே மாணவர்களுக்கு அனுமதி எனவும், அதற்குப் பின்னர் நின்றால் நடக்கும் விளைவுகளுக்கு தாம் பொறுப்பில்லை எனவும் மாணவ ஆலோசகர் சொல்லி விட்டு அகன்று விட்டார்.

விடிந்தது. ஆயிரக்கணக்கில் செலவழித்து, கலியாண வீட்டுக்கு போவது போல சோடனை, சொக்கட்டானோடு வந்த மாணவர்களுக்கு காத்திருந்தது அதிர்ச்சிச் செய்தியொன்று “கலைப்பீட வரவேற்புபசார நிகழ்வை நடத்த முடியாது” என்பதே அது.

“நிர்வாகத்தின் இந்தத் திடீர் முடிவுக்கு என்ன காரணம் என்று விசாரித்த போது, சொல்லப்பட்ட காரணம் இன்னும் புதிதாக இருந்தது. “விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் ஆய்வுகூடக் கண்ணாடிகள், முதல் நாளிரவு அடித்து நொருக்கப்பட்டுள்ளன. அலக்கேசன் பணத்தில் குடித்த மாணவர்கள்தான் இப்படி கண்ணாடிகளை உடைத்து விட்டார்கள். அதனால்தான் இந்த முடிவு” என்றனர். ஒரு சில மாணவர்கள் போதை தலைக்கேறி செய்த அட்டகாசத்துக்காக சுமார் 2500 மாணவர்கள் மீதும் தன் பழிவாங்கலை நிர்வாகம் செய்திருந்தது. உணவு தொடக்கம் இசைக்குழு வரை எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகி, விழாவுக்கு மாணவர்களும் வந்த பின்னர் இப்படி “திடு திப்பென” அனுமதி மறுப்பை நிர்வாகம் வெளிப்படுத்தியதால் என்ன செய்வதென்று மாணவர்கள் திகைத்தார்கள்.

உண்மையில் ஆய்வுகூடக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டமை பாரதூரமான ஒரு செயல்தான். ஆனால் இதைப் போல பல பாரதூரமான செயல்கள் முன்னரும் நடந்திருந்தன. அப்போதெல்லாம் இப்படி அதிரடியாக “வெல்கம் பார்ட்டியை” நிர்வாகம் நிறுத்தியதில்லை. மாறாக உரிய விசாரணைகளை முன்னெடுத்து தவறு செய்த மாணவர்களுக்குத் தண்டனையாக வகுப்புத்தடை [illegible] விதிக்கப்பட்[illegible]. அப்படியான நடைமுறை எதுவுமே பின்பற்றப்படவில்லை. “முதல் நாளிரவு கலைப்பீட மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்துக்குள் இருந்தார்கள்” என்ற காரணத்தையும், “அவர்களில் சிலர் போதையில் இருந்தார்கள்” என்பதையும் வைத்துக் கொண்டு அவர்கள்தான் குற்றவாளிகள் என எழுந்தமானமான முடிவுக்கு வருவது முட்டாள்தனம். ஒரு பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அது அழகுமல்ல. சிலவேளைகளில் மாணவர்கள் மீது வீண்பழி சுமத்தவென வேறுதரப்புகள் கூடக் கண்ணாடியை அடித்து நொருக்கியிருக்கலாம். “யார் இந்த இழிசெயலைச் செய்தார்கள்?” என விசாரணைகளின் மூலம் நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியும். ஏனெனில் அந்தச் சமயத்தில், பாதுகாப்புக் கடமையில் இருந்த உத்தியோகத்தர்களுக்கு குற்றவாளிகள் யாரென்பது தெரிந்திருக்கும். 27 மாணவர்கள் இந்தச் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் என பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தரப்பு பெயர் விபரங்களோடு நிர்வாகத்திடம் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. எனினும், கண்ணாடியை உடைத்தது யார்? என்று தமக்கு தெரியாது எனவும், இரவு நின்றார்கள் என்ற அடிப்படையிலேயே குறித்த 27 பெயர்களும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மாணவர்களுக்கு நிகழ்வில் பங்கேற்கத் தடையை விதித்து, நிகழ்வை நடத்த விட்டிருக்கலாம். ஆனால் “செம்மனச் செல்வியின் கதையில் சிவனுக்கு விழுந்த அடி எல்லோருக்கும் விழுந்ததைப் போல”, ஒரு சில மாணவர்கள் செய்த குற்றத்துக்காக ஒட்டுமொத்த மாணவர்களும் பழிவாங்கப்பட்டனர். இதே வேளை வரவேற்பு நிகழ்வுக்கு நிர்வாகம் தடை போட்டவுடன், துணை வேந்தரின் வீட்டுக்கு சென்று அவரிடம் நிலைமையை விளக்கி, நிகழ்வை நடத்த அனுமதி கோரக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரும் பிரதிநிதிகளும் சென்றதாகவும், ஆனால் “பல்கலைக் கழக விடயம் சம்பந்தமாக எதுவும் என்னால் பேச முடியாது. தொடர்ந்தும் வீட்டு வளவுக்குள் நின்றால் பொலிஸைக் கூப்பிடுவேன்” என்று துணைவேந்தர் விரட்டியடித்தார் என்றும் கூறப்படுகிறது.

ஆக மொத்தத்தில் மாணவர்களுடன் பேசி பிரச்சினையைத் தீர்க்க நிர்வாகம் தயாராக இருக்கவில்லை. என்ன விதத்திலேனும் அவர்களை இம்சைக்குள்ளாக்குவதிலேயே அது குறியாக இருந்திருக்கிறது.

பல லட்சம் ரூபா செலவில் ஏற்பாடு செய்யப்பட்டு, 2500க்கும் அதிகமான மாணவர்களும் வந்துவிட்ட நிலையில் எப்படி நிகழ்வை நிறுத்துவது? அதனால் நடப்பது நடக்கட்டும் என்று நிர்வாகத்தின் [illegible] மாணவர்கள் தன்னிச் [illegible] வரவேற்பு நிகழ்வை நடத்த முற்பட்டனர். அதன்போதும் நிர்வாகத்தினர் குறுக்கிட்டு தடை செய்ய முனைந்தனர். ஆனால் மாணவர்கள் மசியவில்லை.

அதனால், மறைமுகமாக நிகழ்வை நிறுத்த நிர்வாகம் பல்வேறு தடைகளைப் போட்டது. போதியளவு உணவு உள்ளே கொண்டுவர அனுமதி மறுக்கப்பட்டது. நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டது. மின்சார விநியோகம் தடைப்பட்டது. வாயில் கதவு பூட்டப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு இராணுவ முற்றுகைக்குள் சிக்குண்டது போல மாணவர்களின் நிலை மாறியது. ஆனாலும் வெளியில் ஒரு மின்பிறப்பாக்கியை கொண்டு வந்து, மின்னிணைப்பை ஏற்படுத்தி நிகழ்வை மாணவர்கள் நடத்தினர்.

இதற்கிடையில் பொலிஸில் போலி முறைப்பாடு ஒன்றை நிர்வாகம் செய்திருந்தது. “பிரதான வாயிலை மாணவர்கள் பூட்டி யாரையும் வெளியே செல்ல அனுமதிக்காமல் வைத்திருக்கிறார்கள்” என்பதே அந்த முறைப்பாடு. அதை விசாரிக்கவென வந்திருந்த பொலிஸ் அதிகாரி நிலைமையை நேரில் கண்டுவிட்டு “இப்படியான பொய் குற்றச்சாட்டை செய்திருக்கிற துணைவேந்தர் மீது நீங்கள் சட்ட நடவடிக்கை எடுங்கள்” என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். மிகப் பெரிய இழுபறிக்குப் பின்னர் வாயிற் கதவின் பூட்டு அகற்றப்பட்டு, மாணவர்களும், மாணவிகளும் அங்கிருந்து வெளியே செல்ல வழி கிடைத்தது. அதன் பின்னரும் நிர்வாகத்தின் ஆத்திரம் அடங்கவில்லை. “சட்டத்துறை, இராமநாதன் நுண்கலைத்துறை என்பன தவிர்ந்த கலைப்பீடத்தின் சகல கல்வி நடவடிக்கைகளும் காலவரையறையற்று உடனடியாக நிறுத்தப்படுவதாகவும், விடுதிகளில் இருந்து உடனடியாக மாணவர்கள் வெளியேற வேண்டுமெனவும், அத்துடன் கலைப்பீட மாணவர்கள் ஒன்றியமும் கலைக்கப்படுகிறது எனவும்” நிர்வாகம் அடுத்த கட்டத் தாக்குதலை தொடுத்தது.

ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதி மேற்பார்வையாளர்களுக்கு “விடுதியில் எவரையும் மாலை 6 மணிக்குப் பிறகு தங்க அனுமதிக்க வேண்டாம். உடனடியாக அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவும்” என கண்டிப்பான தொனியில் நிர்வாகம் உத்தரவிட்டது. இதனால் அச்சப்பட்டு மாணவர்களும், மாணவிகளும் மாலை 4.30 மணியளவில் விடுதிக்குத் திரும்பி அரக்கப் பரக்க உடமைகளை எடுத்துக் கொண்டு புறப்பட முற்பட்டனர். ஆனால் ஒரு சிக்கல். அந்த நேரத்தில் புறப்பட்டால் மட்டக்களப்பு, மலையகம் போன்ற பகுதிகளுக்கு நடுச்சாமத்தில்தான் போய்ச் சேர முடியும். இதனால் மாணவர் தலைவரின் ஆலோசனைப்படி இராமநாதன் வீதியின் ஓரமாக மாணவர்களும், மாணவிகளும் தங்குவது என முடிவெடுக்கப்பட்டது.

(08 ஆம் பக்கம் பார்க்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07 ஆம் பக்க தொடர்ச்சி...)

# கலைப்பீட கலவரங்கள்...

எந்தவித அவகாசமும் கொடுக்காது மாணவர்களை விரட்டினால் அது பெரும் சிக்கலை ஏற்படுத்திவிடும் என்பதை உணர்ந்த நிர்வாகம் "இரவு மட்டும் தங்கலாம். விடிந்தவுடன் போய்விட வேண்டும்" என கொஞ்சம் பிடியைத் தளர்த்தியது. தற்போது இந்தப் பத்தி எழுதப்படும் போது முதலாம் மற்றும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன. இதே சமயம் கலைப்பீடப் பீடாதிபதி நடுநிலைப் போக்கில் இருந்தார் என்றும்" நிகழ்ச்சியை மாணவர்கள் நடத்தட்டும், விசாரணைகள் நடத்தப்பட்டு நிரூபிக்கப் படும் பட்சத்தில் அதற்குரிய தண்டனையை குற்றம் செய்தவருக்கு வழங்கலாம்" என்று தெரிவித்தார் என்றும் மாணவர் தரப்பில் கூறப்படுகின்றது. ஆனாலும் கலைப்பீடம் சார்ந்தவர்களும் மாணவ ஆலோசகர்களும் பழிவாங்கும் நோக்குடனே செயற்படுகின்றனர் என மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கண்ணாடி உடைப்பு என்ற பாரதூரமான சம்பவத்துக்கு, அதைச் செய்தவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை கொடுக்கப்பட வேண்டும். அதில் எவருக்கும் மாற்றுக் கருத்துக்கள் கிடையாது. மாணவர்கள் செய்தது தவறு என்றால், அதற்காக ஒட்டு மொத்தக் கலைபீட மாணவர்களையும் சிறைக்கைதிகள் போல ஒருநாள் முழுவதும் நடத்திய நிர்வாகத்தின் செயல் மகா தவறு. தவறு செய்தவர்களை மகா தவறு செய்தவர்கள் எப்படி தட்டிக் கேட்க முடியும்?

அண்மையில் ஒரு பல்கலைக்குள் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது மாணவர்கள் நுழைவாயிலைப் பூட்டி, வைத்தனர். அப்போது "இது மனிதாபிமானமற்ற செயல்" என துணைவேந்தர் சொல்லியி ருந்தார். அது ஊடகங்களிலும் காணொலி யாக வந்திருந்தது. இப்போது அதே துணை வேந்தரின் உத்தரவுப்படி, 2500 மாணவர் களை உள்ளே வைத்துப் பூட்டியது எந்த வகையில் மனிதாபிமானம்? என்றும் சிலர் கேட்கிறார்கள்.

மாணவர்கள் தவறு செய்ய, நிர்வாகமோ தவறின் மேல் தவறு செய்துள்ளது. இந்தச் சம்பவத்துக்கு காரணமான மாணவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதில் மாற்று நிலைப்பாடு இல்லை. ஆனால் அது சரியான முறையில் இடம் பெற வேண்டும். இதற்கு நிர்வாகம் ஆவன செய்ய வேண்டும். இதை விடுத்து மாணவர்களை அரசியல்வாதிகளின் குரூர விருப்பங்களுக்காகப் பழிவாங்கக் கூடாது. சரியான முறையில் விசாரணை இடம் பெற்று, உரிய தண்டனை வழங்கப்பட்டாலே பல்கலைக்கழகத்தின் மீதும் அதன் நிர்வாகத்தின் மீதும், மாணவர்களுக்கும், மக்களுக்கும் மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். இதன் மூலமே எமது அடுத்த தலைமுறையும் சீரான வழியில் நடக்கத் தலைப்படும். அதை விடுத்து, "மாணவர்களை மிஞ்சும் வகையில், தவறு செய்யும் நிர்வாகத்தால் எப்படி நாளைய இளையவர்களை ஆளுமை மிக்க பட்டதாரிகளாக உருவாக்க முடியும்" என்பதே தமிழ்ச் சமூகத்தின் கவலை.

# பேராசையோடு காத்திருத்தல்...!



"இயற்கையோடு இயைந்த வாழ்க்கைக்கும், இயற்கையோடு முரண்பட்ட வாழ்க்கைக்கும் இடையே இருக்கும் இடைவெளிகளை நிரப்புதல் என்பது பேராசைதான். ஆனால், அந்தப் பேராசைக் கனவோடு காத்திருத்தல் அப்படியொன்றும் பெரிய குற்றமுமல்ல."

**கதிர்**

சில மாதங்களுக்கு முன்பு என் மடிக்கணினித் திரையில் சேமிக்கப்பட்ட படம் ஒன்று அழிபடாமல் அடம் பிடித்து ஜீவித்திருக்கிறது. கணினி முகப்புத் திரையை ஒழுங்குபடுத்தும் சமயங்களில் எல்லாம் அந்தப் படத்தை நீக்க நினைத்து தோற்றுப் போயிருக்கிறேன். இத்தனைக்கும் அந்தப் படம் காணக் கிடைக்காத படம் என்றோ, ஆகச் சிறந்த படம் என்றோ சொல்லிவிட முடியாது.

அது ஆங்கில தினசரி கட்டுரை ஒன்றில் வெளியாகியிருந்த படம். பார்த்தவுடனே என்னைச் சுண்டியிழுக்கும் ஒரு வசீகரத் தன்மையைக் கொண்டிருந்தது. படத்தில் இருக்கும் இடம் மலைப் பகுதியாகவோ, மலையடி வாரமாகவோ இருக்கலாம். அழகிய ஓடையொன்று சலசலக்கிறது. கரைகளாய் இருபக்கமும் நீண்ட பசும் புற்களினாலான புதர். ஓடையின் நடுவே மேடாக இருக்கும் ஒரு சிறிய இடத்தில் ஒரு ஆணும் பெண்ணும் அமர்ந்து கொஞ்சம் காய்கறிகளை, கிழங்குகளை நீரில் அலசி சுத்தம் செய்யும் காட்சிதான் அந்தப் படம். அவர்கள் இருவரின் முகங்களும், அவர்கள் ஏதேனும் வடகிழக்கு மாநிலத்தைச் சார்ந்தவர்களோ அல்லது தென்கிழக்கு ஆசிய நாட்டைச் சார்ந்தவர்களோ என நினைக்கத் தோன்றுகிறது.

மிகச் சுருக்கமாகச் சொல்ல வேண்டு மென்றால், ஒரு ஆணும் பெண்ணும் ஒரு ஓடையில் தம் காய்கறிகளைக் கழுவுகின்றனர். மேலோட்டமாகப் பார்த்தால், இந்தக் காட்சியில் அப்படி என்ன பெரிசா இருக்கு எனும் எண்ணத்தோடு எளிதாக கடந்து போய்விடக்கூடிய ஒன்றுதான். ஆனால், சற்று உற்றுப் பார்த்தால் அந்த நீரின் தூய்மையும், காய் கறிகளின் "ஃப்ரெஷ்னஸ்" என்று சொல்லும் புத்துணர்வுத் தன்மையும், அதில் இருக்கும் மலர்ச்சியும், அந்தச் சூழலும் நம்மில் பெரும்பாலானோர் தொலைத்துவிட்ட ஒன்றென்பது புரியும்.

நம்மில் எத்தனை பேருக்கு இப்படி முழுக்க முழுக்க இயற்கைச் சூழலில் விளையும் காய்கறிகளை, தானியங்களை, பழங்களை, கிழங்குகளை எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு இன்றைக்கு இருக்கின்றது? மனிதன் மாற்றியமைத்த நிலம் தவிர்த்து மற்ற இடங்களில் தானாய் முளைக்கும் எல்லாத் தாவரங்களும் அதனதன் போக்கில் செழிப்பாகத்தானே இருக்கின்றன. அவைகளுக்கு யாரேனும் நீரூற்றுகிறார்களா? உரம் வைக்கிறார்களா? களை எடுக்கிறார்களா? பூச்சிக்கொல்லி தெளிக்கிறார்களா? எதுவும் இல்லை. ஏனெனில் எல்லாச் செடி கொடி தாவரங்களும் இயற்கையின் பிள்ளைகள். எங்கே மனிதன் தன் முயற்சியென்று, தன் விருப்பதிற்கேற்ப உருவாக்கினானோ அப்போதிலிருந்து நீர் பாய்ச்ச, உரம் போட, களை எடுக்க, பூச்சி அழிக்க என தேவைகள் பெருகின. அந்தத் தேவைகளோடு பெரும் பேராசையைப் பிசைந்து நிலத்திலும், நிலத்திலிருந்து விளைவதிலும் முடிந்த வரையில் நஞ்சை சேர்த்துக் கொண்டு நோய்களை வரவழைத்துக் கொண்டு, பச்சை வர்ணம் அடித்த, வியாபாரம் நுணுக்கம் மிகுந்த இயற்கை அங்காடித் தேடுகிறோம். இதழ் வழியாக இயற்கை, இயற்கை செய்த பாவங்களுக்கெல்லாம் பரிகாரம் செய்வதுபோல் அலைந்து கொண்டிருக்கிறோம்.

இப்படி காய்கறிகளையும், கனிகளையும், கிழங்குகளையும் மட்டுமா இழந்துவிட்டு இல்லாத இடம் தேடி அலைகின்றோம். உணவாய் உண்ணும் எல்லாப் பொருள் களுக்கும் இப்படியான ஒரு மாய ஓட்டமும் - தேடலும் துவங்கி வெகு காலம் ஆகிவிட்டது. காய்கறிகளைத் தொலைத்ததைவிட அம்மாதிரியான ஓடைகளையும், நீர் நிலைகளையும், நீர் வழிப் பாதைகளையும் நாம் தொடர்ந்து தொடர்ந்து இழந்து கொண்டேயிருக்கிறோம் அல்லது தொலைக்கச் செய்கிறோம். நாம் மரணிக்கச் செய்துவிட்டோம் என்பதுதான் இதிலிருக்கும் சுடும் உண்மை.

கடைசியாக எப்போது ஒரு ஓடையைப் பார்த்தீர்கள்? அந்தத் தண்ணீர் எங்கிருந்து வருகின்றது எனும் யோசனை இருந்த துண்டா. மெல்ல நம் பாதங்களை நழுவச் செய்யும் பாறையின் வழுக்குத் தன்மை பிடித்த பாறைகளை ஸ்பரிசித்த துண்டா? ஓரமாகப் பாசி பிடித்துக் கிடக்கும் உதிர்ந்த இலைகளைக் கண்டதுண்டா? கால் வைத்தவுடன் ஓடி வந்து கடிக்கும் மீன் குஞ்சுகளையும், வெடுக் வெடுக்கென ஓடும் தலைப்பிரட்டைகளையும் கடைசியாக எப்போது தான் கண்டீர்கள்?

ஆழ்துளைக் குழாயிலிருந்து மேல் நிலைத் தொட்டிக்கு ஏற்றி, அங்கிருந்து குழாய்கள் வழியே வீடுகளுக்குள் பாய்ந்துவரும் நீரோடு மட்டுமே தொடர்பு கொண்டவர்களாக மாறிப் போய், வெகு காலம் ஆனவர்களிடம் கால்வாய்கள், ஆறுகள், கடல் ஆகியவற்றைவிடுத்து ஓடை, ஏரி, குளம் என்று - கேட்கும் போது, எந்த விதமான பதில்களும் கிடைப்பதேயில்லை. அப்படி தெரியாத, இல்லாத பதில்கள் குறித்து கிஞ்சித்தும் கவலையும் இருப்பதில்லை. ஏனெனில் நீர் நிலைகளுக்கும் நமக்கும் தொடர்பேதுமில்லையென்றும் நாம் நம்பிக் கொண்டிருக்கலாம்.

மனிதர்களற்ற வனத்தில் பயணித்து - நீருக்கரன புனிதத்தில் பிறழ்வேதும் கொள்ளாமல் வரும் ஓடை நீரை வாழ்நாளில் ஒருமுறை கூட ருசித்திடாதவர்களும் இங்குண்டு. அந்தமாதிரியான இடத்தை நோக்கிச் செல்லும் போதெல்லாம்கூட சுகாதாரம் என்ற பெயரில் இங்கிருந்தே போத்தல் தண்ணீர் கொண்டு செல்பவர்களும் இங்குண்டு.

"எதை நோக்கி இந்த ஓட்டம்" என்ற கேள்விக்கு, ஒவ்வொருவரும் அவசர அவசரமாக தனக்கேற்ப ஒரு இலக்கு, கனவு, ஆசை அல்லது நிர்ப்பந்தம் என ஏதேனும் ஒன்றை வைத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் அந்த ஆசை, தேவை, நிர்ப்பந்தம், கனவு, இலக்கு என எதிலும் அவர்கள் இயற்கையை விட்டு தொடர்ந்து விலகுகிறார்கள். அது குறிப்பு அடிக்கோடிடப் பட்டிருப்பதில்லை. அது குறித்த அறிதலும் - தெளிதலும்கூட இல்லை.

மரத்தின் உச்சியிலோ, பாறைகளின் இடுக்கிலோ கட்டப்பட்டிருந்த தேன் கூட்டிலிருந்து, தேனெடுத்துச் சாப்பிட்ட அனுபவத்துக்கும், சாலையோரங்களில் ஆங்காங்க வியாபாரிகளால் உருவாக்கி - விற்கப்படும் பெட்டித் தேனீக்களின் தேனுக்கும் இருக்கும் வித்தியாசம் ருசி மட்டுமில்லை, ஆரோக்கியமும் தான். இது போல் பட்டியலிட்டால், அதை வாசித்து யோசிக்கவே நமக்கு பல நாள்கள் பிடிக்கும்.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கைக்கும், இயற்கையோடு முரண்பட்ட வாழ்க்கைக்கும் இடையே இருக்கும் இடைவெளிகளை நிரப்புதல் என்பது பேராசைதான். ஆனால், அந்தப் பேராசைக் கனவோடு காத்திருத்தல் அப்படியொன்றும் பெரிய குற்றமுமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
கலங்கா நிலை. வாணிப நேயம். பணிமுடக்கம். பிரயாணம். கல்வி.

**ரிஷபம்**
பிரயாணம். ஆலய தரிசனம். ஈகை நாட்டம். பொருள் செலவு.

**மிதுனம்**
நல்வழி. கடின உழைப்பு, பொருள் தேடல். சமூக சிந்தனை.

**கடகம்**
பண வரவு. பாராட்டு. பிணி நீக்கம். புதிய வரவு தனித்த யாத்திரை.

**சிம்மம்**
கலையார்வம். காரியக் கேடு. மானிட நேயம். புதிய சிந்தனை.

**கன்னி**
ஈகைச் சிறப்பு. மக்களால் கவலை. பாகப் பிரிவு. பணிச் சோர்வு.

**துலாம்**
நூதனப் பொருள் சேர்க்கை. வெறுமை உணர்வு. வணிக விருத்தி.

**விருச்சிகம்**
மக்கள் கல்விச் சிறப்பு. காரிய மேன்மை. மனை மாட்சி. லாபம்.

**தனுசு**
சமூகப் பணி. பயிர் பலிதம். வேலையாள் கள் சகாயம். சிவ சிந்தனை

**மகரம்**
மன வருத்தம். வாகன விருத்தி., நிலைமாற்றம். புதிய சிந்தனை.

**கும்பம்**
பொருள் விருத்தி. ஆலய தரிசனம் வாய்மை. உறவால் பெருமை.

**மீனம்**
இறை அருள். அமைதி. ஆலய வழிபாடு. தன்னிலை மாற்றம். தாக மிகுதி.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஏழாயிரத்துக்கும் மேற் பட்ட இலங்கை யாத்திரிகர்கள் கலந்து கொண்டனர். கடந்த வாரம் தமிழக மீனவர் ஒருவர் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து, தமிழக மக்கள் இந்த திருவிழாவை புறக்கணித்திருந்தனர்.






வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம் பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வு.

கேப்பாப்பிலவில் விடுவிக்கப்பட்ட பிலக்குடியிருப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலய அதிபர் தலைமையில், வலயக்கல்விப் பணிப்பாளர் முன்னிலையில் 16 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு புலம்பெயர் வாழ் தமிழர்களும் உள்ளூர் ஆர்வலர்களும் நிதிப் பங்களிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோஷலிஸப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் "ஒக்ரோபர் புரட்சியும் தேசிய இன விடுதலையும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற மூன்றாவது ஆய்வரங்கின் காட்சிகள் சில...



"வெளிச்சம்" அறக்கட்டளை மூலம் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு.

யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற "செயற்பட்டு மகிழ்வோம்" விளையாட்டுப் போட்டியின் நிகழ்வுகளின் பதிவுகள்...





ஒளிப்படங்கள் - வடலியூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்...!

puthuvithi@gmail.com

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



ம.டிஷாளினி
தரம் - 07
மிருசுவில் றோ.க.த.க.



## இரண்டு மான்களும் சிறுத்தையும்

காட்டில், ஒருநாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அது ஒரு கறுப்பு மானையும் ஒரு புள்ளி மானையும் கண்டது.

அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரம் அருகே சென்றது. ஆனால், எதனைத் தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

இதேநேரத்தில் சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஒரு இடத்தில் இடது, வலது பாதைகளில் ஓடின.

சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. "எதைத் துரத்தலாம்" என்று சற்றுத் தயங்கி நின்றது.

பிறகு, சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான் சுவையாக இருக்கும்' என்று முடிவு செய்து, கறுப்பு மானைத் துரத்தப் பார்த்தது. ஆனால், அதற்குள் அது தொலைதூரம் ஓடிப்போய் விட்டது.

உடனே சிறுத்தை "அது வேகமாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. சரி... புள்ளி மானைப் பிடிக்கலாம்" என்று தீர்மானித்து மற்ற பாதையில் ஓடியது.

ஆனால் புள்ளிமான் எப்போதோ பஞ்சாய்ப் பறந்து விட்டிருந்தது.

தருணத்தின் முக்கியம் அறிந்து முடிவை விரைவாக எடுக்க வேண்டும்.

பெரியாரின் வாழ்வில்

## சமயோசித புத்தி



அறிவியலாளர் ஐன்ஸ்டீன் கல்லூரி ஒன்றில் உரையாற்றுவதற்காக காரில் சென்று கொண்டிருந்தார். திடீரென அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு விட்டது.

"உரை நிகழ்வை நிறுத்தி விடலாம்" என அவரின் கார் சாரதி ஐன்ஸ்டீனுக்குக் கூறினார். "ஏராளமான மாணவர்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள் எனவே அது முடியாது" என ஐன்ஸ்டீன் மறுத்து விட்டார்.

"ஐயா...! அப்படியானால் உங்களுக்காக இன்று நான் உரையாற்றுகிறேன், நீங்கள் ஓய்வெடுங்கள்" என்றார் கார்ச்சாரதி. (ஐன்ஸ்டீனின் அனைத்துக் கூட்டங்களிலும் அவரின் சாரதி இறுதி வரிசையில் உட்கார்ந்திருந்து கேட்பது வழமை)

உடனே ஐன்ஸ்டீன் "உன்னை யாராவது கேள்வி கேட்டால் என்ன செய்வாய்?" - என்றார்.

அதற்கு சாரதி, "உங்கள் அனைத்துக் கூட்டங்களிலும் ஒரே மாதிரியான கேள்விகளையே கேட்கின்றனர். எனவே அவற்றுக்கு நான் பதில் கூறிவிடுவேன்" - என்றார்.

ஐன்ஸ்டீனும் சம்மதித்து விட்டார். கல்லூரியை அடைந்ததும் ஐன்ஸ்டீனுக்குப் பதிலாக கார்ச்சாரதி உரையாற்ற ஆரம்பித்தார். ஐன்ஸ்டீனை எவரும் பார்த்ததில்லை என்பதால் சிக்கலில்லாமல் உரை முடிந்தது.

உரை முடிந்ததும் மாணவர்கள் கேள்விகளை எழுப்பினர். வழமையான கேள்விகளே. அவற்றை சாரதி சமாளித்து விட்டார். ஆனால், ஒரு மாணவன் எழுப்பிய கேள்விக்கு அவரால் விடையளிக்க முடியவில்லை. ஆனால் சற்றும் தயங்காத சாரதியோ "இந்த இலகுவான கேள்விக்கு எனது சாரதியே பதிலளித்து விடுவார்" என்று பின்னிருக்கையில் இருந்த ஐன்ஸ்டீனைப் பார்த்தார்.

ஐன்ஸ்டீனும் சாரதியின் புத்திசாலித் தனத்தை எண்ணி மனதில் பாராட்டியவாறு அந்தக் கேள்விக்குப் பதிலளித்தார்.

## விடுகதைகள்

★ இதயம் போலத் துடிப்பிருக்கும். இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன?

**கடிகாரம்**

★ காவி உடை அணியாத கள்ளத் தவசி கரையோரம் கடும் தவம் செய்கிறான் அவன் யார்?

**கொக்கு**

★ காண உருவம் உண்டு. கட்டிப்பிடிக்கத்தான் உடல் இல்லை. அது என்ன?

**புகை**

★ வீதியெல்லாம் சேர்ந்து வந்தாலும் வீட்டுக்குள் இவனைச் சேர்ப்பதில்லை. அவன் யார்?

**செருப்பு**

★ காய் காய்த்தும் பழம் பழக்காத மரம் இது. அது என்ன?

**முருங்கை மரம்**

★ மண்ணுக்குள் முளைக்கும் மங்கையருக்கு மட்டும் அழகு தரும். அது என்ன?

**மஞ்சள்**

★ விதையில்லாத செடி மழையில் பிறந்து வெயிலில் காயுது. அது என்ன?

**காளான்**

★ இரவில் கிடைக்காதது இரவில் மட்டும் தான் வரும். அது என்ன?

**தூக்கம்**

★ பறந்து போகும் விமானம் அல்ல படீரென வெடிக்கும் பட்டாசும் அல்ல. அது என்ன?

**பலூன்**

★ குழந்தைக்கு பலமான கையே இந்த கைதான். அது என்ன?

**அழுகை**

இ. [illegible], தரம் - 08
மிருசுவில் றோ.க.த.க.

## குட்டீஸ் பரிசுப் போட்டி - 36

★ யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் யார்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**புதுவிதி, 107, இராசவீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**குட்டீஸ் பரிசுப்போட்டி - 36**

முடிவுத்திகதி: 24.05.2017

### குட்டீஸ் பரிசுப் போட்டி - 34 முடிவுகள்

**விடை: கேசிஅப்லெக்- எம்மா ஸ்டோன்**

**சரியான விடை எவரும் அனுப்பவில்லை.**

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம்.
(தபால் அட்டையில் பாடசாலை, தரம் குறிப்பிடவேண்டும்)

## தாய்

அம்மா உன்னை காணும் வரை
சொர்க்கத்தை கண்டதில்லை
உன்னை கண்ட பின்
சொர்க்கமே தேவையில்லை
உன் அன்பு மட்டும் போதும் அம்மா
நான் உயிர் வாழும் வரை

ஆறுதல் கூறுவதற்கு
ஆயிரம் பேர் இருந்தாலும் - உன்
ஒரு வார்த்தை இல்லாமல்
எப்படி அம்மா
நான் ஆறுதல் அடைய முடியும்
பத்து மாதம் என்னை சுமந்து வந்தாய்
ஒரு பத்தே நிமிடம் நான் உனக்காகத்தான்

நான் இன்றும் உயிர் வாழ்கிறேன் - என்று
கூறிய தாயே உன்னை எப்படி மறப்பேன்
உமது அரவணைப்பும் அன்பும் போதும்
அம்மா நான் உயிர் வாழும் வரைக்கும்
ஏழேழு ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உன் மகளாகவே பிறக்க வேண்டும்
அம்மா...



[illegible]
தரம் - 08
மிருசுவில் றோ.க.த.க.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொங்கு வழக்குச்சொல் களஞ்சியம்

முனைவர் ஜெ.அரங்கராஜ்
(ஆய்வறிஞர், யாழ்ப்பாணம்)

**வே**ங்கடம் முதலாய் குமரி உட்பட்ட பண்டைத் தமிழகத்தை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். அவை பாண்டி நாடு, சேர நாடு, சோழ நாடு, தொண்டைநாடு, கொங்குநாடு என்பனவாகும். இவற்றுள் கொங்கு நாடு மலை சூழ்ந்த பெரிதும் முல்லை நிலத்தினைப் பெற்ற நாடாகும். இக் கொங்கு நாடு பண்டு 24 உட்பிரிவு களைக் உடையதாக விளங்கியது. இன்றைக்கு இப் பிரிவுகள் இல்லை. ஆயினும் அப்பிரிவுகளுக்குரிய சில வேறுபாடுகள் காணப்படவே செய்கின்றன. முல்லை நிலத் தன்மைக்கேற்பவே இம் மக்களின் மொழிநிலைகளும், அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். முல்லை நிலத்துக்கான காடுகள் அழிக்கப்பட்டு, வேளாண்மை நிலங்களாக மாற்றப்பெற்ற பின்பும், இக்காலத்திலும் இந் நிலப்பகுதிகளை அழைக்க இம்மக்கள் 'காடு' எனும் சொல்லையே பயன்படுத்துகின்றனர். பயிர்வேறுபாடு கருதியவிடத்தும் வயக்காடு, மஞ்சக்காடு, கடலைக் காடு, கொட்டக்காடு என அப்பயிரையும் சேர்த்து அழைக்கின்றனர். இவையே முல்லைநிலம் வேளாண்மைப் பயன்பாட்டிற்கு வந்தமையை உணர்த்தும்.

இவர்களின் மொழி உச்சரிப்பு சற்று நீண்டும், வெற்றோசைச் சொற்கள் நிறைந்து காணப்படுவதாகவும் அமையும். இதற்கு "மடமடன்று செயி, சட்டுனுபோ" மடக்குன்னுவா, மலாருன்றுபோ முதலாய சொற்கள் ஓசை நிலையிலேயே நின்று பொருள் உணர்த்தலைச் சான்றாகக் காட்டலாம். இவை, இம் மக்களின் நில அமைவியலை ஒட்டியே அமைந்தமையை உணரலாம். கீழ்க்கரைப்பூந்துறை (திருச்செங்கோடு) நாட்டுப்பகுதிக்கும், மேற் கரைப்பூந்துறை(ஈரோடு) நாட்டுப் பகுதிக்கும் ஆற்றுப்பிரிவால் பேச்சுமுறையில் ஒலிப்பு முறை வேறுபாட்டை நன்கு காணலாம். ஆயினும், 24 நாடுகளுக்கும் பேச்சு முறையில் பல பொதுப் பண்புகள் மிகுந்து காணப்படுகின்றன. இச் சொல் அமைவுகள் தமிழகத்தின் பிற பகுதிகளில் இருந்து வேறுபட்ட அமைவினைக் கொண்டுள்ளன. இவற்றில் சில மிகவும் செம்மையுற்ற வழக்காகவும், சில மிகவும் திரிபுற்ற வழக்காகவும் வழங்குகின்றன.

தமிழகத்தின் மற்றைய பகுதிகளிலும், யாழ்குடா நாட்டின் வழக்குகளிலும் இல்லாத ஒரு சிறப்பு கொங்கு வழக்கிற்கு உண்டெனில், அது வடமொழிச் சொற் கலப்பம் பன்னாட்டும் (மேலாண்மை) குறைந்த வழக்காக, கொங்கு வழக்காக் காணப்படுவதே ஆகும்.

இதற்கு, இம் மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டியல் கூறுகளில் ஆரிய மயமாக்கல் உட்புகுந்து, தங்க இயலாமல் வலுவற்றுப்போனதே ஒரு காரணமாக இருக்கலாம். இனக்குழு சமூகத்தின் பல்வேறு கூறுகளை இன்றும் கொண்டு விளங்கும் இக் கொங்கு மண்டலம், அயலவர்களை ஏற்றுக் கொள்ளாமல், அயலவர்களாகவே பார்க்கும் பாங்கும் வலுவான சமூக உட்கட்டமைப்பும், குலதெய்வ மூதாதையர் வழிபாட்டு முறைகளும், மேட்டுப்பாங்கான வறண்ட நில அமைவும் கொங்கு நாட்டின் சமூக மற்றும் மொழியமைவின் தனித்தன்மையை 20 ஆம் நூற்றாண்டின் மையப்பகுதி வரை பாதுகாத்து வந்தன எனலாம்.

சமூக நிலையில் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் இலங்கையின் வட கிழக்கிலும் தமிழர்களிடையே ஏற்பட்ட மதமாற்றத்தைக் காட்டிலும், இப் பகுதியில் ஏற்பட்ட மதமாற்றம் சாலக் குறைவானதாகும். மற்றப் பகுதிகளில் தமிழர்களின் பெயர்கள் வடமொழிப் பெயர்களாய் மிகுந்தபோதும் இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரை இம் மக்களின் இயற்பெயர்கள் யாவும் நூற்றிற்கு தொண்ணூற்றெட்டு விழுக்காடு தூயதமிழே. இதனை பண்டை ஆவணங்கள் வழி தெளிவாக இன்றும் அறியலாம்.

## தவசம்

"தனியம்" எனும் வட சொல்லுக்கு இணையாகப் பண்டைய தமிழகத்தில் கூலம், தவசம் எனும் இரு சொற்கள் பயன்படுத்தப்பட்டன. "கூலம்" எனும் சொல் பொதுவாக இலக்கியப் பயன்பாட்டில் விளங்கியது. "தவசம்" எனும் சொல் பொதுவழக்காக மக்களிடம் விளங்கியது. இத் "தவசம்" எனும் சொல் கல்வெட்டுக்களில் இடைக்காலத்தில் வழங்கியமையை பின்வரும் சான்றுகளின் வழி அறியலாம்.

1) தவசம் - (*1550*) சாலையிலும் தவசம் விடுவித்துக் கொள்கிள்கின்ற பேற்கு வருஸம் ஃக்கு ரேகை பொன்ஃ

2) தவசபொதி (பொ) தானிய மூட்டை (*1330*) உப்புபொதி ஒன்றுக்கு ஆழாக்கும் தவசபொதி

மேற்கண்ட கல்வெட்டுக்கள் தவசம் எனும் சொல் தானியம் என்று இன்று வழங்கும் இடத்தில் இருந்தமையை சுட்டுவனவாக அமைவதைக் காணலாம். ஒரு காலத்தில் தமிழகம் முழுவதும் சிறப்பு நிலையில் வழங்கிய இச் சொல் இன்று பெரும்பாலான பகுதிகளில் வழக்கிழந்து கொங்கு வழக்கில் சற்றே வழக்கில் உள்ளது. கொங்கு மக்கள் ஒரு மரபுத் தொடர்ச்சியாகவே இச் சொல்லினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

"பொங்கலுக்கு ஆளுங்களுக்கு தவசம் போடணும்" என்பனவாகவும், "தவசம் நல்லா வௌஞ்சுதா" என்பனவாகவும் பலவாறாக கொங்கு மக்களால் இச் சொல் பயன்பாட்டில் உள்ளது. "தவசம்" எனும் சொல் புன்செய் பயிரை மட்டுமே குறிக்கும் எனச் சிலர் கூறுவர் ஆனால் தவசத்தில் நெல்லும் அடங்குவதால் இக்கருத்து ஏற்புடையதல்ல.

## மதியம்

இன்றைய தமிழகத்தில் முழு நிலவினைக் குறிக்கப் பௌர்ணமி (பூர்ணம்) எனும் வட சொல்லையே பெருவழக்காகக் காட்டி நிற்க இலக்கியவியலாளர் நிறைமதி எனும் சொல்லாட்சியையே கடைப்பிடிக்கின்றனர். ஆனால் கொங்கு வழக்குத் தமிழில் "மதியம்" எனும் சொல்லின் பயன்பாட்டை இன்றளவும் காணலாம். இதனை

"மதியத்தன்னைக்கு நான் ஊருக்குப் போவோணும்"

"வாற மதியம் வந்தா அவன் வந்து இரண்டு மாசமாச்சு"

- என்பதான வழக்குகளின் வழியறியலாம்.

இம் "மதியம்" எனும் சொல் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் எங்கும் விரவிக் காணப்படுகின்றது.

"பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக

நற்றிணை கடவுள் வாழ்த்துப் பாடல் — *அடி - 4*

தென்கடலமுவத்துத் திரைநீக்கா எழுதரூஉந்

தண்கதிர் மதியத் தணிநிலா நிறைத்தரப்" — *கலி-121:2-3*

மேற்கண்ட கலித் தொகையடியில் முழு நிலவினை "மதியம்" என்றும், மதியத்தின் ஒளி நிலவு என்றும் சுட்டப்பட்டுள்ளமையை விளங்கலாம்.

இரவு புலரும் காலத்தில் மதியம் (முழுநிலா) ஒளிகுன்றும் இதனை

வைகுநிலை மதியம் போலப் பெயெனப் — *அகம் - 299:11*

மேற்கண்ட பாடலடிகளுக்கு உரை கூறும் உரையாசிரியர்கள் பொதுவாகவே "மதியம்" என்பதற்கு நிறைமதி, திங்கள், என்பனவாகவே பெரும்பாலும் கூறினர். ஆனால் சிலப்பதிகாரத்திற்கு உரைசெய்த அடியார்க்கு நல்லார் இதில் சற்றே மாறு பட்டுள்ளார். இதனை

1) வானூர் மதியஞ் சகடணைய வானத்துச் — சிலம்பு *1:50*

உரை மதியம் சகடணைந்த நாளினிலே எனவும்,

2) வானூர் மதியமும் பாடிப் பின்னர்ச் — - சிலம்பு *-6:37*

உரை - பல்லுயிர்களும் தன்கலையால் நன்மைபெறும் தன்மையுடைய வானில் ஊர்ந்து செல்லும் மதியமும் பாடியென்க.

3) புயல் சுமந்துவந்திப் பொழி கதிர் மதியத்துக் — சிலம்பு *8:78*

உரை- புயல் சுமந்து வருந்திக் கதிரைப் பொழியும் மதியிடத்தே கயல்கள்

மேற்கண்ட பாடலடிகளுக்கான அடி யார்க்கு நல்லார் உரையிலும் "மதியம்" என்பதற்கு திங்களோ நிறைமதியோ பொருளாகக் கூறாமல் "மதியம்" என்பதனையும் "மதி" என்பதனையுமே கொடுத்துள்ளார். பின் வரும் பாடலடி ஒன்றில் "மதியம்" என்பதற்கு திங்கள் என பொருள் கூறிய மையைக் காணலாம்.

"உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்

பன்னிரு மதியம் படர்நோ யுழந்தபின்

முன்னை யுருவம் டிபறுகலீங் கீவரெனச்" — சிலம்பு *10:242 244*

மேற்கண்ட பாடலடிகள் "போன மதியத்திற்கு முந்தினம் வந்தவன்" என்பதான கொங்கு வழக்கினை ஒத்திருப்பதினை அறியலாம். இது சிலம்பு எழுந்த காலத்தில் மதியம் எனும் சொல் மேலாண்மை பெற்றிருந்தமையினை அறியலாம்.



(அடுத்த வாரமும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பாகுபலியை கட்டப்பா ஏன் கொன்றார்? ஒரு வருடமாகக் கேட்கப்படும் இக்கேள்விக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை.

இந்நிலையில்தான் கட்டப்பா பதில் சொல்லியிருக்கிறார். கட்டப்பா என்றதும் யோசிக்காதீங்க கட்டப்பாவாக நடித்த சத்யராஜ்தான் பதில் சொல்லியிருக்கிறார்.

அவர் சொன்ன பதில் இதுதான் "இயக்குநர் கொல்லச் சொன்னதால் கொன்றேன்" என்று நக்கலாக சொல்லியிருக்கிறார்.

மேலும், "இக்கேள்விக்கான பதிலை என் குடும்பத்தவர்களுக்குக் கூட சொல்லவில்லை" என்றும் 'கூலா'கத் தெரிவித்திருக்கிறார்.





அஜீத்
ரசிகர்களி
எப்போது
உள்ளது. த
இரட்டை
இவர்களி
ஒற்றுமை

இருவ
படப்பிடி
ஒருபோது
செல்வதில்
தங்களின்
முடிந்தாலு
ஏனையவர்
நடிப்பைய
பார்ப்பார்

படப்பி
செல்லும்
அனைவரி
விட்டே இ
செல்வார்

படப்பிடிப்பின்போது எவரையாவது சந்தித்துப் பேசுவதையோ அல்லது வேறு நபரின் விடயத்தில் தலையிடுவதையோ அஜீத் தவிர்த்துவிடுவார்.

விவேகம் படப்பிடிப்புத் தளத்தில் இருந்த அஜீத், நடிகரும் இயக்குநருமான விஜய் சேதுபதியை அழைத்துப் பாராட்டியுள்ளார்.

அஜீத்தின் பரம ரசிகையான விஜய் சேதுபதியின் மனைவி தன்னை அழைத்துச் செல்லாததால் சேதுபதியின் மீது கடும் கோபத்தில் உள்ளாராம்.





அட்லி இயக்கத்தில் விஜய் 61 படத்தில் நடித்து வருகிறார். தந்தை இரு மகன்கள் 3 வேடங்களில் விஜய் நடிக்கும் இந்தப் படத்தில், அவருக்கு ஜோடியாக சமந்தா, காஜல் அகர்வால், நித்யா மேனன் நடிக்கின்றனர்.

இப்படத்துக்கு ரஜினியின் வெற்றிப்படங்களில் ஒன்றான "மூன்றுமுகம்" தலைப்பை வைக்கவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

படத்தின் பெர்ஸ்ட் லுக் தமிழ்ப் புத்தாண்டான ஏப்ரல் 14 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. இதில்தான் படத்தின் பெயர் உறுதியாகத் தெரியும்.

படத்தின் ஒரு பகுதி 1980களில் நடப்பது போன்று உள்ளது. இதற்காக விஜய் முறுக்கு மீசையுடன் கிராமத்து தலைவர் வேடத்தில் நடிக்கிறாராம்.



நடி
தயாரிப்
திகதி தி
பெற்றது

நடி
சென்ற
புறுத்த

வி
அவர் ந
தனது நீ
கைப்பி
மனத்
நடி

"டிக் டிக் டிக்" படம் மூலம் மிருதன் படக் கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது. இதில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக நிவேதா பெத்துராஜ் நடித்து வருகிறார்.

விண்வெளியை மையப்படுத்திய கதையாக உருவாகும் இப் படத்தின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது.

இப்படத்தில் சிங்கப்பூரின் பிரபல நாயகனான அரோன் அஸிஸ் வில்லனாக நடிக்கிறார்.

"கே.எல்.கேங்ஸ்டர்" உட்பட பல வெற்றிப்படங்களை கொடுத்த அஸிஸை தமிழில் நடிக்க வைக்க பலரும் அழைத்தபோது அவர் மறுத்துவிட்டார். டிக் டிக் டிக் படத்தின் கதை ரொம்பப் பிடித்துப்போனதுதான் அவர் நடிக்கக் காரணமாம்.



அருண் விஜயின் "குற்றம் 23" படத்துக்கு ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

படத்தைப் பார்த்த திரையுலகினர் படக்குழுவினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்தப் படத்தை வீட்டில் பிரத்தியேகமாகப் பார்த்த ரஜினிகாந்தும் அருண்விஜயை தொலைபேசியில் அழைத்து "நீங்கள் நிருபித்து விட்டீர்கள்" என்று பாராட்டியுள்ளார். இதனை அருண் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். ரஜினியின் பாராட்டால் படக்குழு மகிழ்ச்சியில் உள்ளது.



நடிகை சாவித்திரியின் வாழ்க்கை வரலாறு "மகாநதி" என்ற பெயரில் திரைப்படமாகி வருவது அறிந்ததே.

இந்நிலையில், படத்தின் பெர்ஸ்ட் லுக் மகளிர் தினத்தன்று வெளியிடப்பட்டது. இந்தப் படத்திலிருந்து நடிகை சமந்தா விலகி விட்டார் எனக் கூறப்பட்டது. ஆனால் அவர் விலகவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் படத்தில் சமந்தா நாயகியாக - அதாவது சாவித்திரியாக நடிக்கவில்லையாம். கீர்த்தி சுரேஸ்தான் நடிக்கிறாராம். அப்படியானால் சமந்தாவுக்கு என்ன வேடம் என்று கேட்கிறீர்களா? அவர் இதில் பத்திரிகையாளராக நடிக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விஜய்
டையே
ம் மோதல்
தமிழ் திரையுலகின்
நட்சத்திரங்களான
டம் பல
கள் உள்ளனவாம்.

ரும்
ப்புக்கு
ம் தாமதமாக
ல்லையாம்.
காட்சி
ம்
ர்களின்
ம் இருந்து
களாம்.

பிடிப்பு முடிந்து
ஒவ்வொருநாளும்
டமும் பேசி
இருவரும்
களாம்.



நடிகை சமந்தாவும் நாகர்ஜுனின் மகனும் நடிகருமான நாகசைதன்யாவும் காதலித்து வருகின்றனர். இருவரும் விரைவில் திருமண பந்தத்தில் இணையவுள்ளனர் என சமந்தா தெரிவித்துள்ளார்.

திருமணத்தின் பின்னரும் சினிமாவில் நடிப்பேன் என இந்தியாவின் பிரபல பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.



மணிரத்தினம் இயக்கத்தில் விஜய், விக்ரம் இணைந்து நடிக்கவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மணிரத்தினத்தின் இயக்கத்தில் ரஜினி -மம்முட்டி நண்பர்களாக நடித்த "தளபதி" பெரும் வெற்றி பெற்றது. இதன் 2 ஆம் பாகமாகவே இப்படம் அமையவுள்ளது.

இதில் ரஜினியின் வேடத்தில் விஜயும், மம்முட்டியின் வேடத்தில் விக்ரமும் நடிக்கவுள்ளனர். தளபதி -2 இல் நடிக்க இருவரும் சம்மதித்து விட்டனர். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விஜயின் பிறந்தநாளான ஜூன் 22 இல் வெளியாகும் எனத் தெரிகிறது.

கை பாவனாவுக்கும் கன்னட படத்
ாளர் நவீனுக்கும் கடந்த 10 ஆம்
திருமண நிச்சயதார்த்தம் இடம்
து.

கை பாவனா கடந்த மாதம் காரில்
போது, கடத்தப்பட்டு பாலியல் துன்
லுக்கு ஆளாகியிருந்தார்.

ரவாக இதிலிருந்து மீண்ட
நடிக்கத் தொடங்கியதுடன்,
நீண்டநாள் காதலரையும்
டித்துள்ளார். இந்நிலையில் திரு
தின் பின்னரும் தான் சினிமாவில்
டப்பேன் என அவர் கூறியுள்ளார்.



"மொட்ட சிவா கெட்ட சிவா" படத்தில் ராகவா லாரன்ஸுக்கு "மக்கள் சூப்பர் ஸ்டார்" பட்டம் வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பட்டத்தை அப்படத்தின் இயக்குநர் சாய் ரமணியே வழங்கியிருந்தார்.

இப்பட்டத்தை லாரன்ஸ் ஏற்க மறுத்துவிட்டார். இதனிடையே இந்தப் பட்டத்தை யார் வழங்கினார்கள் எனப் பலரும் கேள்வி எழுப்பினர். சமூக வலைத் தளங்களிலும் கேலிக்குள்ளானது.

இந்நிலையில் இப்பட்டம் போட்டது தனக்குத் தெரியாது என்றும், அதனை ஒருபோதும் தான் பயன்படுத்த மாட்டேன் என்றும் லாரன்ஸ் அறிவித்துள்ளார். தன் பெயருக்கு முன்பாக அடைமொழி தேவை என ரசிகர்கள் விரும்புவதால் தாயாரின் பெயரை முன்னால் சேர்த்து "கண்மணி" ராகவா லாரன்ஸ் எனப் பயன்படுத்துமாறு அவர் அறிவித்துள்ளார்.








பொலிவூட் தம்பதியரான அபிஷேக் - ஐஸ்வர்யாராய் உறவில் பெரும் விரிசல் விழுந்துள்ளதாக அண்மைக்காலமாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் மகள் ஆராத்யாவை நடிக்க வைக்க அபிஷேக் பச்சன் விரும்புகிறார் என்றும் - இதற்கு ஐஸ்வர்யா ராய் தடை போட்டதால் ஏற்கனவே இருந்த விரிசல் பெரிதாகியுள்ளது என ஹிந்தியுலகில் பிரபலமான இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அபிஷேக்கும் ஐஸ்வர்யாராயும் 'குலாப் ஜாமூன்' என்ற படத்தில் நடித்து வருகின்றனர் என அதிகாரபூர்வமற்ற தகவல்கள் வெளியாகி வருகின்றன.

ஜல்லிக்கட்டுக்காக எழுந்த இளைஞர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக "இது கொம்பு வைச்ச சிங்கமடா" பாடலை இசையமைத்து பாடி வெளியிட்டவர் ஜி.வி. பிரகாஷ்.

இப்போது "நெடுவாசல்" போராட்டத்துக்காக இணைந்துள்ள விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்களுக்கு ஆதரவாக பாடல் ஒன்றுக்கு இசையமைத்து வருகிறார்.

"தியாகம் செய்வோம் வா

உறங்காதே தமிழா

இறங்காதே தமிழா

கலங்காதே தமிழா

கசங்காதே தமிழா!"

என்று தொடங்கும் இந்தப் பாடல் விரைவில் வெளியாகவுள்ளது.



பாகுபலியின் 2 ஆம் பாகமான 'பாகுபலி தி கோன்குளுசன்' எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி வெளிவரவுள்ளது.

பிரபாஸ், ராணா, அனுஷ்கா, தமன்னா, சத்யராஜ், ரம்யா கிருஷ்ணன் ஆகியோரின் நடிப்பில் வெளியாகி 600 கோடி இந்திய ரூபா வரை வசூலித்திருந்தது.

இந்நிலையில் படத்தின் இயக்குநர் ராஜமௌலி கூறுகையில், "முதல் பாகத்தில் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தினோம். அதனால் கதைக்குள் புகமுடியவில்லை. அது ஆரம்பம்தான். இரண்டாம் பாகம் ரசிகர்களுக்கு பெரு விருந்தளிக்கும்" - என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி நிலம் உண்டு

மெலிஞ்சிமுனையின் முக்கியமான கூத்துக்கலைஞர் அந்தோனி சவரிமுத்து அண்ணாவியாருடைய இறுதி நிகழ்வுக்காக அங்கே போயிருந்தேன். கூடவே தேவதாசனும் ஓசை மனோவும் வந்திருந்தார்கள். ஊர்காவற்றுறைக்குப் போய், அங்கேயிருந்து ஓட்டோவில் பயணமாகினோம். எங்களை முந்திக்கொண்டு, மெலிஞ்சிமுனை பஸ் போனது. "மெலிஞ்சிமுனைக்குத் தானே போறீங்கள். பஸ்ஸிலே போயிருக்கலாமே" என்று ஓட்டோச் சாரதி கேட்டார். தேவதாசன் மெல்லிதாகத் திரும்பி என்னைப் பார்த்தார். "தன்னுடைய உழைப்பைப்பற்றிக் கவலைப் படாமல், எங்களுடைய நன்மையைப் பற்றிச் சிந்திக்கும் பையனாக இருக்கிறானே!" என்று தேவதாசனுக்குத் தோன்றியிருக்கும். எனக்கும் அப்படியே பட்டது.

"ஓட்டோவில் போனால், நாங்கள் போகவேண்டிய இடத்துக்கு நேரே போகலாம். பஸ்ஸில் என்றால், அது நிற்குமிடத்தில் இறங்கி நாங்கள் போகவேண்டிய இடத்தைத் தேடி நடக்கவேணும் என்றேன்" அவருக்கு அது நியாயமாகத் தோன்றியிருக்க வேணும். மறு பேச்சில்லை.

ஓட்டோ போய்க்கொண்டிருந்தது. ஊர்காவற்றுறையிலிருந்து புறப்பட்ட ஓட்டோ, கரம்பனுக்கூடாகப் போனது. ஆனால் "கரம்பனுக்குகூடாகப்போனது" என்று சொல்வதை விட "அது காட்டு வழியால்தான் போனது" என்று சொல்வதே சரி. 'கரம்பன்' என்ற இடத்தையே அடையாளம் காணமுடியில்லை. முன்பு 'கரம்பன்' என்றால் என்ன மாதிரி இருக்கும்? கலகலப்பும், கொண்டாட்டமும், சனப்புழக்கமுமாக இருக்கும். எல்லாமே பெரிய வீடுகள். தீவுப்பகுதியில் கரம்பனுக்குத் தனியிடமிருந்தது. காரணம், கொழும்பின் பிரபலமான வணிகப் புள்ளிகளில் பலர் கரம்பன் ஆட்கள்தான். ஏன், யாழ் மறைமாவட்ட ஆயர்களில் பெரும்பாலானவர்கள் கரம்பன் பேர்வழிகளே. இப்படி முன்னொரு காலம் செழித்துக் களித்த இடம் இப்போது காடு மண்டிக்கிறது. எங்கும் பத்தையும் புதருமாக.

## பாம்பு ஊரும் நிலங்கள்

வீதிக்குக் குறுக்காகப் பாம்பொன்று கடந்தது. தேவதாசன் திரும்பி என்னையும் மனோவையும் பார்த்தார். "சனங்களில்லாத வளவுகளில் வேறு என்ன தான் மிஞ்சியிருக்கும்?" சத்யஜித்ரேயின் பதேர் பாஞ்சாலியின் இறுதிக் காட்சியில், அந்தக் குடும்பம் புயலினால் பாதிக்கப்பட்ட அந்த வீட்டையும், ஊரையும் விட்டுப்போகும்போது, வீட்டுக்குள்ளே பாம்பொன்று நுழையும். எனக்கு அந்தக் காட்சியே நினைவில் வந்தது.

"ஒரு ஒதுக்குப் புறமாகப் பார்த்து வண்டியை நிறுத்துங்கள் சிறுநீர் கழிக்க வேணும்" என்றேன். ஓட்டோச் சாரதி சிரித்தார். "எந்த இடத்தில நிறுத்தினாலும் அது ஒதுக்குப்புறம்தான். இங்க ஆர்தான் நிற்கினம்? நீங்கள் வெட்கப் படாமல் இறங்கிப்போங்கோ" என்று சொல்லிக்கொண்டு வண்டியை ஒரு இடத்தில் நிறுத்தினார்.

## தொலைந்த மகிழ்வின் குரல்கள்

வண்டியிலிருந்து இறங்கி அவரவருக்கு வாய்ப்பான இடத்தில் ஒதுங்கினோம். ஊன்றிக்கவனித்தேன். காடு வளர்ந்த வளவு. பத்தைகளுக்குள்ளால் பாசி படர்ந்த ஒரு பழைய கட்டிடத்தின் இடிபாடுகள் தெரிந்தன.

கொஞ்சம் நெருங்க ஒரு மரத்தில் ஏறிப்பார்க்க வேணும் போலிருந்தது. ஏறிப்பார்த்தேன். பெரிய வீடொன்று இடிந்து சிதைந்து கிடந்தது. இரண்டு மூன்று சோடைத்தென்னைகள். தொலைவில் மாமரமொன்றின் முதிர்ந்த கிளைகள், பத்தைக்குள்ளால் தலைநீட்டி யாரையோ தேடுவதைப் போலிருந்தது. மனதில் மெல்லிய துயரம் எழுந்து படர்ந்தது. இந்த வளவில் எத்தனை கொண்டாட்டமும், குதூகலமும் நிகழ்ந்திருக்கும்! குழந்தைகளின் குரல். பெண்களின் சிரிப்பொலி. நெல்லுக்குத்தும் அல்லது மாவிடிக்கும் உரல் சத்தம். கெந்திக்கோடோ, கிளித்தட்டோ விளையாடியோரின் மகிழ்ச்சிக் கூச்சல்கள். சமையல் வாசனை. பூத்துக் குலுங்கும் பூக்களின் அழகும் வாசனையும். கிணற்றடியில் இரவும், பகலுமாகக் கேட்கும் துலாக்கோலின் அசைவொலி. விழாக்காலக் கொண்டாட்டங்களின் குதூகலம். "இரவெல்லாம் ஒளிர்ந்து கொண்டிருக்கும் வெளிச்சம்" என எத்தனை இனிய களமமாக இருந்த வளவு இப்போது?

## இனி யார் வருவார்?

இப்படிக் காடு மண்டிப்போயிருப்பது தனியே ஒரு வளவுதான் என்றில்லை. கரம்பனில் ஏறக்குறைய தொண்ணு வீதத்துக்கும் அதிகமானவை காடாகிய நிலமே. போர் முற்றத் தொடங்க எல்லோரும் வெளியேறிப்போய் விட்டார்கள். கொழும்புடன் தொழில் ரீதியான தொடர்பில் அங்கே இருந்தவர்கள், அப்படியே நிரந்தரமாக அங்கே குடியேறி விட்டனர். ஏராளமானவர்கள் புலம்பெயர்ந்து போய்விட்டார்கள். மிஞ்சியவர்கள், யாழ்ப்பாண நகரத்தில் குடியேறியுள்ளனர். ஊருக்குத் திரும்பி வரும் எண்ணமோ, விருப்பமோ யாருக்குமில்லை. அப்படி விருப்பமிருந்தாலும் "அங்கே போய் என்ன செய்வது?" என்ற எண்ணம். எனவே கரம்பன் காடாகி விட்டது.

ஆனால் கரம்பனுக்கு அடுத்திருக்கிற மெலிஞ்சிமுனையில் சனங்கள் நிறைந்து போயிருக்கிறார்கள். அங்கே பாடசாலை இயங்குகிறது. தேவாலயத்தில் பூசை நடக்கிறது. ஆண்டுதோறும் கூத்து அரங்கேறுகிறது. தொழிலும், வாழ்வும் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. சனங்களின் போக்கும், வரத்துமாக ஊர் எப்பவும் களைகட்டியிருக்கிறது.

இவ்வளவுக்கும் கரம்பனோடு ஒப்பிடும் போது, மெலிஞ்சிமுனை மிகவும் வளம் குறைந்த நிலப்பகுதி. குடிக்கும் தண்ணீருக்கே பிரச்சினை. போதிய நிலமில்லை. உண்மையில் அது ஒரு ஒதுக்குப் புற நிலம். அதனால் தான் அங்கே முன்னர் யாருமே குடியேறியிருக்கவில்லை. தீவுப்பகுதிக் குடியிருப்புகளில் மிகப் பிந்தியது.

ஒரு காலம் அநேகமாக 1960 களில் நாவாந்துறையில் நடந்த ஒரு கூத்துப் பிரச்சினையினால், அங்கேயிருந்த பத்துப் பதினைந்து குடும்பங்கள் வெளியேறி வந்து குடியேறிய இடமே மெலிஞ்சிமுனை. ஆனால் அத்தனை பேரும் கடற்றொழில் செய்தே வாழ்கின்றவர்கள். தின உழைப்பாளிகள். அதனால், அவர்கள் அந்த இடத்தை ஒட்டியே வாழ்கின்றனர். இடப்பெயர்வுகளால் ஊரைவிட்டுப் போயிருந்தாலும், மீண்டும் வந்துவிட்டனர். மீண்டு வந்தவர்களால் ஊர் பொலிந்து கொண்டிருக்கிறது.

## நெருக்கடிகளில் தப்பித்தல்

ஆனால், கரம்பனின் கதை அப்படியல்ல. கரம்பனின் மனிதர்கள் மத்தியதர வர்க்கத்தினர். அல்லது அதற்கு மேலானவர்கள். ஆகவே அவர்கள் கீழே இறங்கி நெருக்கடிகளை எதிர்கொண்டு வாழ விரும்பவில்லை. நெருக்கடிகள் வர வர அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத் தூர விலகி விலகித் தொலைவுக்குப் போய்விட்டனர். கரம்பனைச் சேர்ந்த மிகக் குறைந்த ஏழைக் குடும்பங்கள்தான் இப்போது மீண்டும் வந்து அங்கங்கே தோட்டம் செய்கின்றன. மிகச் சில குடும்பங்களே வீடுகளைத் துப்புரவு செய்து குடியேறியிருக்கின்றன.

இது ஒன்றும் கரம்பனுக்கு நேர்ந்த கதியோ அழிவோ தலைகீழ் விதியோ என்றில்லை. எங்களூரிலும் இதுதான் கதை. வசதியானவர்கள் பறந்து விட்டார்கள். அவர்களுக்குத்தான் எப்போதும் சிறகுகள் முளைக்கின்றன. அவர்களுக்கே வானமும் இசைந்து கொடுக்கிறது. ஆனால் அப்படிப் போனவர்கள் தாங்கள் பிறந்த வளர்ந்த, வாழ்ந்த நிலத்தை, இடங்களை, வீட்டை, விளையாடிக் குதூகலித்த முற்றங்களை, கொண்டாடிய களங்களைக் காடுறைய அல்லவா விட்டுவிடுகிறார்கள்.

## நிலமுண்டு ஆளில்லை

இதனால், காணிகள் இருக்கிற இடத்தில் ஆட்கள் இல்லை. இதேவேளை ஆட்கள் இருக்கிற இடத்தில் காணிகள் இல்லை. இதுதான் இப்ப வடக்குக் கிழக்கில் பெரும்பாலான இடங்களில் உள்ள நிலைமை. தீவுப்பகுதிகளிலும் வட்டுக்கோட்டை, காரைநகர், மாவிட்டபுரம், மயிலிட்டி, தெல்லிப்பழை, கட்டுவன், குரும்பசிட்டி, புன்னாலைக் கட்டுவன், இயக்கச்சி, ஒட்டுவெளி, எழுதுமட்டுவாள், கிளாலி, ஆழியவளை எனப் பல இடங்களில் நிலம் தாராளமாக உண்டு. ஆனால், இங்கெல்லாம் இருப்பதற்கு ஆட்கள்தா னில்லை. தங்கள் காணிகளைக் காடுறைய விடுகின்றவர்கள், அவற்றை காணில்லாதவர்களுக்குக் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தால், காணியில்லாத மக்கள் அந்தக் காணிகளை வளப்படுத்தி, மீண்டும் அந்த வளவுகளில் விளக்கேற்றுவார்கள். அந்த வளவுகளை மீளவும் கலகலப்பாக்குவார்கள். அந்த வளவுகள் இருளடர்ந்து போகாமல் வாழ்வின் ஒளி வீசும்.

இந்தக் காணிகளுக்குரியவர்களில் எவரும் ஒரு போதும் மீண்டும் இந்தக் காணிகளுக்கு வரப்போவதில்லை. இவர்கள் வர விரும்பினாலும் அதற்கான சூழல் அமையாது. மட்டுமல்ல, இவர்களுக்கு அடுத்த தலைமுறை நிச்சயமாகப் புலம் பெயர் நாட்டை விட்டு இங்கே வரவே மாட்டாது. ஆகவே அப்படியான நிலையில் தங்கள் முன்னோர் வாழ்ந்த, தாயும் தந்தையும் பாட்டனும் பாட்டியும் கூடிக் களித்த இந்த இடங்களை அழிய விடாமல் பார்த்துக் கொள்ள இவற்றை யாருக்காவது கொடுக்கலாம்.



சிக்மலிங்கம் றெஜினோல்ட்

(20 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதினப்பூங்கா

ராஜேஷ்மணாளன்

# விலைபோகாத விவகாரம்



பிரபல்ய பொப் பாடகர் மைக்கல் ஜாக்சனை நிச்சயம் பலர் மறந்திருக்கமாட்டார்கள். அந்த அளவுக்கு இசை உலகில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தது அவர் புகழ்! இவர் இருந்த காலத்தில் இவருக்குச் சொந்தமாக இருந்த நெவர்லான்ட் பண்ணை சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்தது. 50 ஏக்கர் விஸ்தீரணமான இந்தப் பெரிய சிறுவர் பொழுதுபோக்குப் பூங்காவை இந்தப் பாடகர் பிழையான வழியில் பயன்படுத்தி வந்தார் என்ற சர்ச்சையில் அப்பொழுது இவர் சிக்கி இருந்தார்.

இது ஒருபுறம் இருக்க, இவர் கடனை அடைக்க இதை சுவீகரித்துக் கொண்ட ஒரு நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களாக இதைவிற்க முயன்று வருகின்றது. இதனை 100 மில்லியன் டொலருக்கு விற்க முயன்று அது இது வரையில் சாத்தியப்படாமையினால் இப்பொழுது 67 மில்லியனுக்கு இறங்கி வந்திருப்பது பிந்திய புதினம். அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ளது இந்த அழகிய பண்ணை. நெவர்லான்ட் பண்ணை என்ற பெயர் இப்பொழுது Sycamore Valley Ranch என்று மாற்றம் பெற்றுள்ளது. எண்பதுகளில் ஜாக்சன் இதை வாங்குமுன்பு இந்தப் பெயர்தான் இருந்துள்ளது. இ... இதை 1987 இல் 19.5 மில்லியன் டொலருக்கு வாங்கி இருந்தார். இரண்டு ஏரிகளுக்கு நடுவே ஆறு படுக்கை அறைகளுடனும் பணியா... கள் விடுதியும் கொண்டிருப்பதுதான் பிரதான வீட்டின் அமைப்பாகும். 50 பேர் உட்கார்ந்து திரைப்படம் பார்க்கும் திரை அரங்கு, ரெனிஸ் விளையாட்டு திடல், கூடைப் பந்தாட்டத்திடல், நீச்சல் குளம் என்று இங்கே எல்லா வசதிகளுமே இருக்கின்றன.

இன்னும் சில மாதங்கள் இதை எவருமே வாங்காதிருந்தால், மேலும் இதன் பெறுமதி கீழ் இறங்குமோ? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

# அவசியப்படும் அன்னாசி



தற்போது நிறைய மக்கள் எலும்புப் பிரச்சினையால் அவஸ்தைப் படுகிறார்கள். இதற்கு தற்போதைய ஊட்டச்சத்துக்கள் இல்லாத உணவுப் பழக்கமும், உடல் உழைப்பு இல்லாத வாழ்க்கை முறையும் தான் காரணம். எலும்புகளின் வலிமையை அதிகரிக்க பாற் பொருள்கள் மட்டும்தான் உதவும் என்று நினைக்க வேண்டாம். பழங்களும் உதவி புரியும்.

அதில் எலும்புகளை வலிமையாக்க உதவும் ஓர் பழம் தான் அன்னாசி. அன்னாசியில் விற்ற மின் 'சி' அதிகம் உள்ளது.

இது மூட்டுக்களின் ஆரோக்கியத்தை மேம் படுத்த உதவுவதோடு, எலும்புகள் மற்றும் மூட்டுக்களின் வலிமைக்கு தேவையான கொலாஜன் உற்பத்தியையும் அதிகரிக்க உதவுகிறது.

# சில்லறைகளும் சில்மிஷமும்



செயற்கையாக ஒரு தடாகத்தை உருவாக்கி, நிலத்திற்கு அடியில் உள்ள நீரூற்றில் இருந்து தண்ணீரை குழாய் வழியாக வரவழைத்து - தொடர்ந்து தடாகத்திற் குள் கொட்டும் நீர் ஜாலங்களை நகர் மத்திகளில் அமைத்திருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். இது நல்ல சுத்தமான குடி தண்ணீர். பாதசாரிகள் இதனைக் கடந்து போகும்போது குழாய் அடியில் குனிந்து தாகசாந்தி செய்து கொள்வதுண்டு. இப்படி செயற்கையாக உருவாக்கப்பட்ட தாய்லாந்து நாட்டு தடாகம் ஒன்றின் கதைதான் இன்றைய புதினமாகப் பூக்கின்றது.

இந்தத் தடாகத்தில் ஒரு பச்சை ஆமையும் இருந்துள்ளது. இந்தத் தடாகத்தினுள் நாணயங்களைப்போட்டால் அதிர்ஷ்டம் வரும் என்று உலக நாட்டவர்கள் பலர் நம்புகின்றார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இத் தடாகத்தினுள்ளும் பலர் நாணயங்களை போட்டு விட்டுச் சென்றுள்ளார்கள்.

இங்கே வசித்து வந்த ஆமைக்கு, இந்த நாணயங்களின் சுவை பிடித்துப் போய் விட்டதால் ஆசையோடு ஒவ்வொன்றாக விழுங்க ஆரம்பித்து விட்டது. வயிற்றுக்குள் சென்ற செப்பு நாணயங்கள் சமிபாடு அடையாததால், ஆமைக்கு சமிபாட்டுக் கோளாறு. ஆமை அங்கிருந்து அகற்றப்பட்டு, சத்திர சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த ஆமைக்கு வங்கி என்ற செல்லப்பெயரும் இடப்பட்டுள்ளது

இந்த 25 வயது ஆமையின் வயிறு பிளக்கப்பட்ட போது, உள்ளே இருந்தவை 915 நாணயங்கள்! இங்கு வரும் உல்லாசப் பயணிகள் போட்டு விட்டுச்சென்ற நாணயங்கள் தான் இவை. ஆமை இருந்த இடத்தில் நாணயங்களைப் போட்டால் ஆயுள் அதிகரிக்கும் என்பது தாய்லாந்து நாட்டவர்களின் நம்பிக்கை.

இவர்கள் நம்பிக்கை எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் நடந்ததோ ஆமையின் ஆயுளை முடிக்கும் சங்கதியாக இருந்துள்ளது. விழுங்கிய அனைத்து நாணயங்களும் திரண்டு 5 கிலோ பந்தாகி ஆமையின் உயிருக்கு எமனாக மாறி விட்டிருந்தது. பத்திரிகைகள் இந்தச் செய்தியை பெரிதுபடுத்த, மக்கள் மூலம் பணம் திரட்டப்பட்டு ஆமைக்கு சத்திரசிகிச்சை இடம் பெற்றுள்ளது. பொதுவாக இந்த இன ஆமைகள் 80 வயது வரை உயிர் வாழுமாம். சில்லறைகள் செய்த சில்மிஷத்தைப் பார்த்தீர்களா?

# கொம்பும் கொலையும்

பாவம் இந்தக் காட்டு விலங்குகள் , இவற்றின் உடல் அவயவங்களே இவற்றிற்கு எமனாக வாய்த்துள்ளன. தந்தம் இருக்கின்ற காரணத்தால் இன்று உயிரிழக்கின்ற யானைகள் ஏராளம். அதேபோல கொம்பு உள்ளதால் கொல்லப்படும் காண்டாமிருகங்களும் ஏராளம். பாரிஸ் நகரின் மிருகக்காட்சிசாலை ஒன்றில் இருந்த காண்டாமிருகம் சுட்டுக் கொல்லப்பட்டு அதன் கொம்பு அறுத்துச் செல்லப்பட்டிருப்பது கொடுமையான புதினம். அடிமடியில் கை வைக்க ஆரம்பித்து விட்டது போல காடுகளில் தமது கைவரிசையை காட்டி வந்தவர்கள் இப்பொழுது முதற் தடவையாக ஐரோப்பாவில் அடைக்கப்பட்ட நிலையில் அப்பாவி மிருகம் ஒன்றுடன் தமது கைவரிசையை காட்டி இருக்கின்றார்கள் இந்த இரண்டு கால் மிருகங்கள்,

'வின்ஸ்' என்று பெயரிடப்பட்ட இந்த மிருகம் நெதர்லாந்தில் 2012 இல் பிறந்துள்ளது. 2015 மார்ச் மாதம் இந்த மிருகம் பாரிஸ் நகருக்கு கொண்டு செல்லப்பட்டது.

இப்படியொரு சம்பவம் இடம் பெற்றிருப்பது தன்னால் நம்ப முடியாத ஒன்றென வன விலங்குகள் காப்பக இயக்குநர் கூறி இருக்கின்றார்.

இங்கேயுள்ள ஏனைய இரண்டு காண்டா மிருகங்களும் இந்தக் கொள்ளையர்களிடமிருந்து தப்பியது பெரு விந்தை என்கிறார்கள்.

ஒரு கிலோகிராம் காண்டாமிருகக் கொம்பின் சந்தை மதிப்பு 60,000 டொலர் வரை இருகின்றது. இப்பொழுது கெடுபிடிகள் அதிகரித்துள்ளதால், அடைக்கப்பட்ட மிருகங்களில் குறிவைக்க ஆரம்பித்துள்ளார்கள். பாவம் இந்த வன விலங்குகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போரில் சிக்கி மீண்டெழும் மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை

## வரலாறு

தொகுப்பு : **அ.றொக்ஷன்**



அதிபர் எப்.தோமஸ் எடிசன்







யாழ்ப்பாணத்தின் தென்மராட்சியின் மிருசுவில் கிராமத்தில் அமைந்துள்ளது யா/மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையாகும்.

இப்பாடசாலை அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி லமோடி அடிகளால் தனியார் பாடசாலையாக 01.09.1894 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. புனித நீக்கிலார் ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக சுமார் 8 பரப்பு நிலத்தில் முதலாவது வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டு, அப்போதைய கத்தோலிக்க குருக்களால் கற்பிக்கப்பட்டது. பத்து ஆண்டுகளின் பின்னர் இரண்டாவது வகுப்பறைக் கட்டடமும் அமைக்கப்பட்டது.

சுமார் அரைநூற்றாண்டுக்கும் மேலாக இவ்விரு கட்டடங்களிலும் கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெற்றன. மேலும் அப்போதைய க.பொ.த. சாதாரண தரம் வரை இடம்பெற்ற இப்பாடசாலையில் அயல் கிரமங்களான உசன், கரம்பகம், தவசிகுளம், மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், எழுது மட்டுவாழ், விடத்தற்பளை, கெற்பேலி போன்ற பகுதி வாழ் மாணவர்கள் கல்வி கற்றனர்.

1968 ஆம் ஆண்டு தனியார் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்த போது, இப்பாடசாலையும் சுவீகரிக்கப்பட்டது. இப்பாடசாலையை முழுமையாக அரசுடைமையாக்க அப்போது எதிர்ப்புக்கள் எழுந்தன. இதனால் புதிதாகப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இதனால் இங்கு தரம் 1 தொடக்கம் 8 வரையான வகுப்புக்களே இயங்க அனுமதிக்கப்பட்டது. பின்னர் இது தரம் 1 தொடக்கம் 5 வரையுள்ள ஆரம்பப் பாடசாலையாக மட்டுப்படுத்தப்பட்டது.

எனினும் பின்னர் பொறுப்பேற்ற அதிபர்களின் முயற்சியால் தரம் 01 - 08 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக தரமுயர்ந்தது. 1997 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அதிபர் எப்.எக்ஸ். அன்ரன் 2006 ஆம் ஆண்டு தரம் 9 வகுப்பை ஆரம்பித்தார். அந்த ஆண்டில் நாட்டில் மீண்டும் போர் வெடித்தது. இதனால் மக்களுடன் பாடசாலையும் இடப்பெயர்வுக்கு உள்ளானது.

போர்ச் சூழலால் பாடசாலைச் சமூகத்துடன் மிருசுவில் மக்களும் இடம்பெயர்வுகளையும், இழப்புக் களையும் சந்தித்து, வறுமைக் கோட்டின் கீழ் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் 01.01.2009 ஆம் ஆண்டு எப்.தோமஸ் எடிசன் புதிய அதிபராகப் பொறுப் பேற்றார்.

இந்நிலையில் போரால் இடம் பெயர்ந்த மக்கள் இப்பாடசாலை யில் தஞ்சம் புகுந்தனர். இதனால் 18.05.2009 இன் பின்னர் சொந்த இடத்தில் இப்பாடசாலையை இயக்க முடியவில்லை. இந்நிலையில் யுனிசெவ் அமைப்பின் உதவியுடன் தற்காலிக வகுப்பறைகள் அமைக்கப் பட்டு, முகாம் மாணவர்களையும் இணைத்து கற்பித்தல் நடவடிக்கை கள் தொடர்ந்தன.

2010 ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் பாடசாலை சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க, கற்றல் - கற்பித்தல் செயற்பாடு சிறப்பாக ஆரம்பமானது. அதிபர் எவ். தோமஸ் எடிசனின் விடா முயற்சியால், 2011 ஆம் ஆண்டு தரம் 10 -11 வரையான வகுப்புக்களைக் கொண்டதாக தரமுயர்த்தப்பட்டு தற்போது 86 மாணவர்கள், 14 ஆசியர்களுடன் இயங்கி வருகின்றது.

## சாதனைகள்

- 2014 இல் நடைபெற்ற மறைக் கல்விப் பரீட்சையில் தரம் 5 மாணவி இ.அனற் ஜென்சிகாவும், தரம் 7 ஐ சேர்ந்த யு.நோறிக்கா யுஜி, கொ.அலெக்சனா, தரம் 8 ஐ சேர்ந்த பா.எப்சிபா, அ.ஜெயந்தினி தரம் 9 ஐ சேர்ந்த க.அனிஸ்ரலா செ. மேரி சுலோசனா, அ.அமலநாயகி, ப.பவுஸ்ரினா தரம் 10 ஐ சேர்ந்த கெ.யுடிற் றஜித்தா, வி.ஜென்சியா, றொ. கௌதமி, பா.சோபிக்காகிறிஸ்ரிக்கா, ம.மேரிகில்டா தரம் 11 ஐ சோர்ந்த சூ.துர்க்காதேவி ஆகியோர் "ஏ" தரச் சித்தி பெற்றனர்.
- 2015 இல் மறைக்கல்விப் பரீட்சையில் தரம் 5ஐ சேர்ந்த இ.நிதுசியா, தரம் 6 ஐ சேர்ந்த இ.அனற்ஜென்சி, தரம் 7 ஐ சேர்ந்த த.தனுசா, உ.கஜேந்தினி தரம் 10 ஐ சோர்ந்த ப.மேரிபவுஜ்ரினா, க.அனிஸ்ரலா தரம் 11 ஐ சோர்ந்த பா.கோபிக்கா, இ.அனற்சுதர்சிகா, ம.மேரிகில்டா் ஆகியோர் "ஏ" தரச் சித்தி பெற்றனர்.
- 2014 இல் நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் இராஜகுமார் அனற் ஜென்சிகா 182 புள்ளிகளைப் பெற்றார்.

அத்துடன் 5 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். 2015 இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 3 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தனர். இதேபோல் 2016 இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 4 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். அத்துடன் இப்பாடசாலையில் கல்வி கற்ற அனைவரும் 70க்கு மேல் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை திருவிவிலிய அறிவுப் போட்டியில் அ.ஜெயந்தினி வலய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றார்.

இதே ஆண்டில் நடைபெற்ற சைவ சமய கண்காட்சிப் போட்டியில் பா.அனோஜன் வலய மட்டத்தில் தேர்ச்சி பெற்றார். அத்துடன் 2015 இல் நடைபெற்ற சைவசமய பண்ணிசைப்போட்டியில் வலயமட்ட தனிநிகழ்ச்சிப் போட்டியில் த.டிலக்சனா தேர்ச்சியடைந்தார்.

- 2016 இல் மாணவர் நாடாளு மன்றம் அமைக்கப்பட்டது. அதே ஆண்டிலே பாடசாலை வரலாற்றில் பரிசில் தின நிகழ்வும் இடம்பெற்றது. இதில் இப்பாடசாலையின் சிறந்த சாதனையாளராக இ.அனற் ஜென்சிகாவும் தெரிவுசெய்யப்பட்டார்.

## சவால்கள்

பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளை நாடுகின்றனர். அயலிலுள்ள பாடசாலைகளும் இப்பாடசாலையின் மாணவர்களை உள்வாங்குகின்றன. இதனால் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

வகுப்பறை, ஆய்வுகூடம், செயற்பாட்டறை, நூலகம் போன்ற பௌதிக வளத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. விளையாட்டு மைதானம் இல்லை.

பொருளாதார ரீதியில் பின்னடைவான குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளே கல்வி கற்கின்றனர்.

இப்பாடசாலையில் 160 அடி நீளம் கொண்ட மதில் பூர்த்தியாக்கப்படாமல் உள்ளது.

அனைத்து கற்றல், கற்பித்தல் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதான இரண்டு மாடிக்கட்டடம் தேவை.

ஓடியோ, வீடியோ கூடத்துக்கு தேவையான மல்ரி மீடியா உள்ளிட்ட உபகரணங்கள் தேவை.

பாடசாலையின் தேவைகளை அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனிக்கும் என்ற மனநிலையில் பெற்றோர் உள்ளனர்.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஒரு ரகசியக்காதலி

ஆதி பார்த்திபன்

மாலை நேரம் மழைநாள், கொஞ்சம் மழை பெய்ய ஆரம்பிக்கும் மந்த காலநிலை, பஸ் சுமார் ஆறு மணியளவில் புறப்பட்டது. ஏற்கனவே மழையில் கொஞ்சம் நனைந்திருந்த தால் ஜீன்ஸ் பின்புறம் தொடைப் பகுதியெல்லாம் லேசான கடி ஏதோ எறும்பு ஊருவதைப்போல் தொற்றிக் கொள்ள மெல்ல சுதாகரித்து உட்கார்ந்து கொண்டேன். பலர் மெல்ல மெல்ல ஏறி பஸ்ஸை நிரப்பிக் கொண்டிருந் தார்கள். அதிகமாக கடைகளில் வேலை செய்யும் பெண்கள் ஒவ்வொருவரும் எனது சீற்றைக் கடக்கும் போதும் எனது சீற்றின் மறுபகுதி வெற்றிடமாக இருந்ததை அவர்களை நோக்கிய ஒருவித அங்கலாய்ப்பு கலந்த பார்வையில் தெரியப்படுத்திக் கொண்டிருந்தேன்.

கொஞ்சம் அழகான பெண்கள் கடக்கும்போதுதான் அந்த ஏக்கம் ஒரு நூறு டிகிரியாக அதிகரித்தது. பஸ்ஸில் டிரைவர் மஞ்சள் ஒளியை படரவிட்டு பஸ்ஸை மெல்ல நகர்த்த ஆரம்பித்தார். எனது மறுபகுதி மாத்திரம் வெற்றிடமாக இருந்த அதேவேளை, முற்று முழுதாக பஸ்ஸின் சீற்றுக்கள் நிரப்பப்பட்டிருந்தன என்னவோ உண்மைதான். ஒருவித விரக்தியுடன் ஜன்னல் பக்கத்தில் தலை சாய்த்துக் கொள்ள டிரைவர் பாடலை முடுக்கி விட்டார் "அந்திமழை பொழிகிறது ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிறது" குளிர்காற்று முகத்தில் விளாச கறுத்த கண்ணாடியுடன் கமலின் இடத்தில் என்னையும், மாதவியின் இடத்தில் அவளையும் நினைத்துக்கொண்டேன். பிகினியுடையுடன் அல்ல என்பது மேலதிக தகவல், அடுத்ததாக "ஒரு ஜீவன் அழைத்தது"...

அப்படியே மழையும் மெல்லப் பொழிய வெளிக்கிட அந்தப் பாடலிலும் முரளியின் இடத்தில் முகத்தில் கொஞ்சம் கரி பூசியபடி என்னைக் காட்சிப்படுத்திக் கொண்டிருந்தேன். இவ்வாறாக இளையராஜாவின் பாடல்களில் பிரபு, மோகன், முரளி, கார்த்திக் என நானும் ரேவதி, அமலா, ராதா என அவளும் கலர் மாறிக் கொள்ள, மழையும் ஒருவித இதமான குளிர்ச்சியுடன் பெய்து கொண்டிருந்தது. அடுத்து கொஞ்சம் எம்.ஜி.ஆர். பாடல்கள், "ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலே தான்" பாடல் முடியுவும் அவள் பஸ்ஸில் ஏறவும் சரியாக இருந்தது. இன்று அவளை நான்காவது நாள் கண்டு கொண்டிருக்கிறேன். இதற்கு முதல் நான்கு நாள்களின் தொடக்கத்தில் அவளை முதன் முதலாக சந்தித்தித்த போது "ஒரு தடவை சொல்வாயா" பாடல் பஸ்ஸில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு சந்திப்பிலும் ஏதோவொரு இசை என்றபடி அவளைப் பார்த்தேன். அவள் ஏதோவொரு கடையில் வேலை செய்ய வேண்டும். அது புடைவைக் கடையாக இருக்கலாம் என்று யோசித்துக் கொண்டேன். அவளைப் பார்க்கும் போது அவளைக் காதலிக்க நினைப்பதற்கு எந்த சாத்தியக்கூறும் கிடையாது. ஆனால் அவள் ஒவ்வொரு நாள் ஏறிய போதும் ஒவ்வொரு பாடல் இரண்டாம் நாள் "தேவதை வந்துவிட்டாள் என்னைத் தேடி..."

மூன்றாம் நாள் "சின்னச் சின்ன காதல்" அந்தப் பாடல்களுக்குள்ளால் அவள் பொருந்திப்போய் அழகாக உருமாறினாள். இன்றும் ஏறிக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு மனித சந்திப்பும் அற்புதமானது என்றே எனக்குத் தோன்றியது.

நீல நிற சல்வார் - உருண்டை விழிகள் - தலையில் திருநீறு கலந்த குங்குமகுறி - கறுத்தச் சாந்துப்பொட்டு சின்னதாக. "ஓடம் நதியினிலே ஒருத்தி மட்டும் கரையினிலே" துரோகம் செய்து விட்ட டிரைவரை கடிந்து கொண்டேன். எப்படியும் அவள் என் பக்கத்தில்தான் இருக்க வேண்டும் எனக் காத்திருந்தேன். எனக்கு அருகில் வந்து மெல்லிய புன்னகையுடன் அமர்ந்து கொண்டாள். "சட்டி சுட்டதடா கைவிட்டதடா" மீண்டும் அதே எறும்பு ஊர்வதை போன்ற உணர்வு. ஆனாலும் கொஞ்சம் அசௌகரிய மனநிலை மற்றும் அற்புத எண்ணங்களில் கலவையால் நிரம்பிக்கொண்டிருந்தேன். "வீடு வரை உறவு வீதி வரை மனைவி" கொஞ்சம் கைகளால் தாளம் போட்டுக் கொண்டேன்.

அவளோ முகத்தில் இந்த பாடலினால் வெறுப்படைந்தவளாக காணப்பட்டதால் தாளம் போட்ட கைகளில் நெட்டிமுறித்துக் கொண்டேன். கொட்டாவி வந்துவிட அதை வாய்க்குள் அமுக்கிக் கொண்டேன். சளியை விழுங்கிய மறுநொடி மூச்சு விடுவதை மெல்ல குறைத்துக் கொண்டேன். ஏதாவது மோசமான வாடை சளியினால் ஏற்பட்டு விடக்கூடாது என, இன்னும் சொல்லப் போனால் மூச்சு விடுவதை தவணை முறையில் செயற்படுத்திக் கொண்டிருந்தேன். "உன்னை நான் சந்தித்தேன் நீ ஆயிரத்தில் ஒருவன்" கொஞ்சம் என்னை நேராக்கி கொண்டிருந்தேன். பஸ் பாடல்களின் கதியில் சென்று கொண்டிருக்க ஜீன்ஸ் இசையின் கதியில் கடிக்க ஆரம்பித்தது. நேராக இருப்பதுபோல் கொஞ்சம் சீற்றில் உரஞ்சிக் கொண்டேன்.

அவளிடம் ஏதாவது பேசிவிட வேண்டும் என்பதை கொஞ்சம் மனதிற்குள் கேட்டுப் பார்த்துக்கொண்டேன். முதல் கேள்வியில் தான் அவள் என்னை அடையாளம் காணப் போகிறாள். அது என்ன மாதிரியான கேள்வி என்பதில் பலர் கோட்டைவிட்டு விடுகின்றனர். பெயர் என்ன என கேட்பது பழைய பஷனாக இருந்தால் நேரடியாக "நீ எங்கே இருக்கிறாய் எங்கிருந்து வருகிறாய்" என கேட்பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தேன். எங்கள் பலருக்கு யாழ்ப்பாண தமிழில் ஒரு பெண்ணிடம் முதல் வார்த்தையாக பேசிவிடுவதில் தயக்கம், எங்கே பட்டிக் காட்டான் என்று நினைத்துவிடுவாளோ என்று. அதனால் நீங்க என்று ஆரம்பிப்பார்கள். நான் குரல் தடுமாற "பார்த்த விழி பார்த்தபடி பூத்து இருக்க" பாடல் ஆரம்பிக்க நீங்கள்" என்றேன். சொறி சொல்லி கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து கொண்டாள். நான் ஏதோ சிரமப்படுவதை புரிந்தவளாக.

நான் மீண்டும் திரும்ப அந்த பார்வையை ஒரு புன்னகையுடன் அவள் நிராகரித்தாள். இப்போது தலையிலும் காதுப்பக்கமும் கொஞ்சம் கடி. உலகத்திலேயே கொடூரமான விசயம் என்னவென்று கேட்டால், தெரியாத பெண் அருகில் இருக்கும்போது காது மற்றும் மூக்கில் சொறிஞ்சே ஆகவேண்டிய கடி ஆரம்பிப்பது என்று தான் கூறுவேன். இந்த மோசமான நிலை அந்த மழை நாளில் ஆரம்பித்தது அதுவும் அவளுக்கு அருகில் என்பது எவ்வளவு பெரிய யுகத் துயரம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த நேரத்தில் பஸ் இன்னொரு பஸ் ஸ்ராண்டில் நிற்க, மெல்ல ஒரு அழுக்கு வேட்டி கட்டிய பற்களில் வெற்றிலை குதப்பிய ஒரு வயதான கிழவர் ஏறினார். சின்ன வயசில் நல்ல ஆசிரியர்களிடம் நல்ல அறிவுரைகள் கேட்டு வளர்ந்தவள்போல எழுந்து நின்று கொண்டு அந்த வயதான கிழவருக்கு இடம் கொடுத்தாள். ஆனாலும் இடத்தை விட்டு கொஞ்சம்தான் தள்ளி நின்றாள். தம்பி எங்கடாப்பாபோறாய்? என்று அழுக்கு வேட்டியின் மேல் கை வைத்து பெரிதாக இடுப்புப் பகுதியை சொறிந்து கொண்டார். அடுத்த ஒவ்வொரு தத்துவப் பாடலுக்கும் தாளம் தட்டியபடி வந்தார். "ஆறு மனமே ஆறு" அந்த கையில் அவள் ஒரு பெரிய பையை வைத்திருந்து அதனுடன் பஸ்ஸின் வேகத்திற்கு சிரமப் படவும், நான் அவளை நிமிர்ந்து பார்க்கவும் சரியாக இருந்தது. அவள் அதைப் புரிந்து கொண்டவளாக பையை என்னிடம் தந்தாள்.

கிழவர் மெல்ல என்னைத்தாண்டி ஜன்னல்களினூடாக 'பிளீச் பிளீச்' என்று எச்சிலை துப்ப, எச்சில் மழைத்துளியின் குருதி போல வடிய, அதில் ஒரு துளி என்னிலும் பட்டது. அது துளியா துமியா என சந்தேகம் வந்தால் என்னை மன்னித்து விடுங்கள். அதை விவரிப்பது கொஞ்சம் சிரமம்தான். "தம்பி என்ன படிக்கிறியள். நான் படிக்கவில்லை" என்றேன். "பாலூட்டி வளர்த்த கிளி கொஞ்சம்" சென்ரிமெண்டுடன் பாடலுக்கு ஏற்றதுபோல என்னை பார்த்து அமைதியானார். அவரது ஈரஉடை என் தோள் பகுதியில்பட்டு உரச, கடி தோளிலும் ஆரம்பித்தது. என்னை விட்டால் எவருமில்லை. இப்போது அவர் பழைய கால காதல் நினைவுகளில் மூழ்கி இருக்க வேண்டும் கொதப்பிய வாயில் ஹம்மிங்கை முணுமுணுத்தார்.

நான் அவளை இன்னொரு தடவை பார்த்துக்கொள்ள, அவளும் என்னைப் பார்க்க நீங்கள், அவள் திரும்பிக்கொள்ள.

பஸ் ஒரு சாப்பாட்டு கடையடியில் தரித்து நின்றது. பஸ்ஸின் பாடலை மறைப்பதாக கடையில் "ஜிங்கினமணி" பாடலை பெரிதாக ஒலிக்கவிட கடுப்பான கிழவர், "என்னடா இது ஜிங்கின மணி தொங்கின மணி எண்டு இதில்லாம் பாட்டே தூ" வெத்திலையை துப்பிக்கொண்டு, "அப்ப இருந்த பாட்டுகளிட்ட இப்ப இருக்கிறவ பிச்ச வாங்கோணும்", ம்ம் என்றேன் எரிச்சல் மேலிட மழை கொஞ்சம் ஓய்ந்திருக்க. "புதிய வானம் புதிய பூமி" பாடல் ஒலிக்க மறுபடியும் கிழவர் கொண்டாட்ட மனநிலைக்கு சென்றார். காதைக் குடைந்து கொண்டார், மூக்கை சொறிந்து கொண்டார். வேறு ஒரு பாடல் ஒலிக்க இது பட்டுக் கோட்டை எழுதின பாட்டு என்று புகழ்ந்தார். நான் கிழவரின் கதையை அவதானிக்க திரும்பும் சாட்டில் அவளையும் பார்த்துக் கொண்டேன்.

கிழவரில் ஒருவித கெட்ட வாடையும் அடிக்கடி வரத்தவறவில்லை. அவள் என்னை அவதானிப்பதாக உள்மனதில் தோன்ற, அவளை பார்த்தேன். "அண்ணா நான் இறங்கபோறன் பாக்" என்றாள். ஒரு நொடியில் உடைந்துதான் போய்விட்டேன். "ம்ம்" எதுவும் பேசவில்லை பையை கொடுத்தேன் "நெஞ்சம் மறப்பதில்லை" பாடல் இடையில் அவள் இறங்கி கொண்டாள். கிழவர் பாட்டில் மெய் மறந்து இருந்து விட்டு, பாடல் முடிய என்னை நோக்கி திரும்பி "அருமையான பாடல் தம்பி இதுவும் ஒரு வகைல தத்துவபாடல் தான்" என்றார். வெறுப்பு மேலிட திரும்பிக் கொண்டு சொன்னேன். "ஓ.. தத்துவமும் பாட்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 05 உன்னை நீயே அறிவாய்!

## பொருளின் பயன்பாடு

நம்முடைய பொருள் தினசரி பயன்படக்கூடிய பொருளா, வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை, மாதத்துக்கு ஒரு முறை பயன்படுத்தப்படும் பொருளா என்பதைப் பொறுத்து அதற்கேற்ப திட்டமிட்டு கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் செய்த பொருளை அதன் பயன்பாட்டுக்கேற்ப விற்பனையும் செய்துவிட வேண்டும். அப்படி செய்தால் நல்ல லாபத்தை பார்க்க முடியும்.

## முதலீடு

நாம் செய்யப் போகும் தொழிலுக்கான செலவைப் பட்டியலிட்டு எவ்வளவு முதலீடு தேவை என்பதைப் பார்க்க வேண்டும். சொந்த இடத்தில் வைக்கப் போகிறோமா அல்லது வாடகைக்கு எடுக்கப் போகிறோமா, பொருள் கொள்முதல் செய்ய எவ்வளவு தேவை என்று பார்ப்பது அவசியம்.

உதாரணமாக: 20 அடி கன்டெய்னரில் உப்பு வாங்கி வர்த்தகம் செய்ய ஒரு லட்சம் ரூபா போதும். ஆனால், அதே ஒரு கன்டெய்னர் அளவுக்கு முந்திரி வாங்கி வர்த்தகம் செய்ய ஒரு கோடி ரூபா தேவை. மேலும், நம்முடைய தொழிலுக்குத் தேவையான மனிதவளம், தொழில்நுட்பம் போன்றவற்றுக்கு எவ்வளவு தேவை என்பது போன்ற விடயங்களையும் பட்டியலிட்டுப் பார்த்து, மொத்த தொகையில் நம்மிடம் கையில் இருப்பது எவ்வளவு, எவ்வளவு கடன் வாங்க வேண்டும் என்பதை திட்டமிட்ட பிறகே தொழிலில் இறங்க வேண்டும். இருக்கிற பணத்தில் பொருளைக் கொள்முதல் செய்துவிட்டு வேலைக்கு ஆள் பிடிக்க பணமில்லாமல் திண்டாடக்கூடாது.

## விலை நிர்ணயம்

பொருளை விற்கும்போது விலையைக் குறைத்து விற்பது, அல்லது அளவைக் குறைத்து விற்பது என்று இரண்டு வகை உள்ளன. எவற்றையெல்லாம் குறைந்த அளவில் கொடுத்தால் வாங்குவதற்கு தயாராக இருப்பார்களோ, அதை அளவு குறைத்து விற்கலாம். உதாரணம் ஷம்போ, மிளகாய்த்தூள் மற்றும் மளிகைப் பொருள்கள்.

எதில் விலையைக் குறைத்து விற்றால் மற்றவர்களைக் காட்டிலும் அதிக வாடிக்கையாளர்களைப் பெற முடியுமோ, அவற்றில் விலையைச் சற்று குறைத்து விற்கலாம்.

ஆனால், நம் இலாபத்தைச் சற்றுக் குறைக்கலாமே தவிர, இலாபமே இல்லாமற் போகுமளவு விலையைக் குறைக்கக் கூடாது.

எனவே, ஒரு பொருளை உற்பத்தி செய்யும் செலவு, அதை விளம்பரம் செய்யும் செலவு மற்றும் வாடிக்கையாளரிடம் கொண்டு சேர்ப்பது வரையிலான செலவுகள் அனைத்தையும் பட்டியலிட்டு, நம்முடைய இலாப சதவீதம் எவ்வளவு இருக்கலாம் என்பதையும் முடிவு செய்து, பின்னர் விற்பனை விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

★ ★ ★

குழந்தை பிறப்பதற்கு முன்பே என்ன பெயர் வைக்கலாம். அழகு தமிழில் வைக்கலாமா, நவநாகரிகமாக ஆங்கிலத்தில் வைக்கலாமா அல்லது முன்னோர்கள் பெயரை வைக்கலாமா என்று யோசிக்கத் தொடங்கி விடுகிறோம். அதேநேரம், நாம் வைக்கும் பெயர் அந்தக் குழந்தைக்குப் பிரகாசமான எதிர்காலத்தைத் தருமா என்பதையும் பார்க்கிறோம். ஒரு குழந்தையின் பெயர், அந்தக் குழந்தையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறதோ இல்லையோ, உங்களுடைய நிறுவனத்துக்கு நீங்கள் வைக்கும் பெயர்தான் உங்கள் தலையெழுத்தை நிர்ணயிக்கும்.

ஒரு தொழில், மக்களின் மனதில் பதிய வேண்டும். நிறுவனமாக வளர வேண்டும். பின்பு ஒரு சாம்ராஜ்ஜியமாக வளர்ந்து காலத்துக்கும் நிலைத்து நிற்க வேண்டும். அப்படி ஒரு வளர்ச்சியை நம் தொழில் அடைய நாம் கவனிக்க வேண்டிய மூன்று முக்கியமான விடயங்கள்:

1. பெயர், 2. இலச்சினை,

3. இவற்றில் பயன்படுத்தப்படும் நிறம்.

தொழில் என்பது வேலை பார்ப்பது போல அல்ல, அடிக்கடி மாறிக்கொண்டே இருக்க, அது பரம்பரை பரம்பரையாக வளரக்கூடிய வகையில் கட்டமைக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு தொழிலுக்கு அதன் பெயர், இலச்சினை போன்றவை எத்தனை தலைமுறை கடந்தாலும், மக்கள் மறக்க முடியாத வகையில் உருவாக்க வேண்டும்.

ஏனெனில் தொழிலைப் பொறுத்த வரை, பெயர் என்பது வெறும் பெயர் மட்டுமல்ல. அப்பிள், டயலொக், எயார்ரெல் போல, நாம் நம் தொழிலுக்கு வைக்கும் பெயர் நம் தொழிலின் வளர்ச்சிக்கு காலத்துக்கும் உதவும் வகையில் அமைய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு பெயரை உங்கள் தொழிலுக்கு எப்படி வைப்பது, உங்கள் நிறுவனத்துக்கான இலட்சினையை (logo) எப்படி உருவாக்குவது என்பதை இப்போது பார்ப்போம்.

## பெயர்

தொழிலுக்குப் பெயர் வைப்பது ஒரு கலை என்றே சொல்லலாம். ஏனெனில் அந்தப் பெயரில் பல விடயங்கள் அடங்கியிருக்கிறது. நீங்கள் வைக்கும் பெயர், வெறும் [illegible] இருந்துவிடாமல் [illegible] வளர வேண்டும்.

1. நீங்கள் வைக்கும் பெயரானது மக்கள் எளிதாக உச்சரிக்கும் வகையில் இருக்க வேண்டும். ஒருவர் பிறரிடம் சொல்லும் வகையில் எளிதாக இருக்க வேண்டும். சர்வதேச சந்தையில் உங்கள் பொருளை விற்பதாக இருந்தால், பொதுவாக உள்ள பெயர்களை கொஞ்சம் வித்தியாசப்படுத்தி வைக்கலாம். உதாரணத்துக்கு ப்ளூ மூன், கேன்டி க்ரஷ்.

2. நீங்கள் வைக்கும் பெயர் கிரியேட்டிவாக இருக்க வேண்டும். மக்களை எளிதில் கவரும் வகையில் இருக்க வேண்டும். ஏற்கெனவே அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட பெயரை நீங்களும் பயன்படுத்தக் கூடாது. என் உற்பத்தி ஒன்றுக்கு நான் ப்ளூ அப்பிள் என்று பெயர் வைத்திருக்கிறேன். ப்ளூ அப்பிள் என்று ஒன்று இல்லைதான். ஆனால் இந்தப் பெயர் வித்தியாசமாக இருப்பதால், மக்களை அது எளிதில் கவர்கிறது. சில உதாரணங்கள்: கிட்சன் குக், மேஜிக் சிம்னி.

3. உங்கள் நிறுவனத்துக்குப் பெயர் வைக்கும்போது, பழங்களின் பெயர்களையோ, நிறங்களின் பெயர்களையோ வைக்கலாம். ஏனெனில் பலருக்கு பிடித்த நிறங்கள், பழங்கள் எளிதில் ஞாபகத்தில் இருக்கும். பிறருக்குச் சொல்வதற்கும் அவை எளிமையாக இருக்கும். உதாரணத்துக்கு: ப்ளூ அப்பிள், பிங்கி இன்னர்வேர்ஸ், கிரீன் லேபிள் டீ, ரெட் லேபிள் டீ, கிரீன் ட்ரென்ட்ஸ் போன்றவை நிறங்களை அடிப்படையாகக் கொண்ட பெயர்கள்.

4. பெரும்பாலானோர் தங்கள் குடும்பப் பெயர்களை அல்லது நபரின் பெயர்களை வைப்பார்கள். உதாரணமாக, டாடா குழுமம். குடும்பப் பெயர்களை அல்லது முன்னோர்களின் பெயர்களை வைத்தால் தவறில்லை. ஆனால், அந்தப் பெயர் அடிக்கடி பயன்படுத்தப்படும் பெயராக இருக்கக்கூடாது. அப்படி இருந்தால், அவை பத்தோடு பதினொன்றாக மக்களின் கவனத்தைப் பெறத்தவறிவிடும். எனவே, தனிநபரின் பெயரை வைப்பதைத் தவிர்ப்பது நல்லது.

5. பிற பெயர்களை கொப்பி அடிக்கக் கூடாது. தமிழகத்தில் பல இடங்களில் சரவணபவன், சங்கீதா, தலைப்பாகட்டு போன்ற பெயர்களைக் கொப்பி அடித்து சிறு மாற்றம் செய்து வைக்கிறார்கள். கொப்பி அடிக்கும் பழக்கம் ஒருபோதும் நம்மை உயர்த்தாது. உண்மையான வளர்ச்சியை அடைய ஒவ்வொன்றிலும் நாம் தனித்துவம் காட்ட வேண்டியது அவசியம்.

6. எம் நிறுவனத்துக்கு நாம் வைக்கும் பெயர் நாம் விற்கும் பொருளுக்கு அல்லது செய்யும் தொழிலுக்கு தொடர்புடையதாக இருந்தால் அதையும் பெயரோடு சேர்த்துக் கொள்ளலாம்.

7. அதேபோல், குழந்தைகள், பெண்களுக்கான தொழிலை நீங்கள் செய்வதாக இருந்தால், அவர்களுக்குப் பிடிக்கின்ற, பார்பி, டோரா போன்றவை குழந்தைகளுக்குப் பிடித்த பெயர்கள். குழந்தைகளுக்குப் பிடித்தமான விளையாட்டுக்களையும் பெயராக்கலாம்.

8. நாம் விற்கும் பொருளுக்கு தொடர்பான விடயங்களை இணைக்கும் வகையிலும் பெயர்களை வைக்கலாம். உதாரணத்துக்கு, மம்மிஸ் கிட்சன், மம்மிபோகோ பேன்ட்ஸ் போன்றவை.

காபி டே போல, மிக நேரடியாகவும் தொழிலுடன் சம்பந்தப்பட்ட பெயர்களையும் வைக்கலாம். ஆனால், நாம் வைக்கும் பெயரை ஏற்கெனவே எவராவது வைத்திருக்கிறார்களா என்பதை ஒருமுறைக்கு இரண்டு முறை பார்த்துவிடுவது நல்லது.

9. தற்போது பழைமையைக் கொண்டாடும் ட்ரெண்ட் மக்களிடையே இருக்கிறது. எனவே, பலரும் பழைமையான, மக்கள் மறந்துபோன விடயங்களை, பொருள்களை எல்லாம் தங்களுடைய வியாபாரத்துக்காக பெயராக வைக்கிறார்கள்.

10. மூன்று எழுத்துகளில் சுருக்கமாக வைக்கும் பெயர்களும் மக்களிடையே சீக்கிரம் பிரபலமாகும். கே.பி.என், எஸ்.ஆர்.எம், எம்.டி.ஆர் போன்றவற்றை உதாரணமாகச் சொல்லலாம்.

இப்படி உங்கள் நிறுவனத்துக்கு நீங்கள் என்ன பெயர் வைத்தாலும், நீங்கள் வைக்கப் போகும் பெயரை வேறுயாரேனும் பதிவு செய்திருக்கிறார்களா என்பதையும் இணையம் மூலம் தேடித் தெரிந்து கொள்வது அவசியம். இதற்கு கூகுள் தேடுபொறியில் நீங்கள் தேடிப் பார்ப்பது அவசியம். ஜஸ்ட் டயல் இணையத் தளத்திலும் பெயரைத்தேடினால், ஏதேனும் ஒரு நிறுவனம் அந்தப் பெயரில் இருக்கிறதா என்பதையும் எளிதில் கண்டறிய முடியும்.

## இலச்சினை

உங்கள் நிறுவனத்துக்கான லோகோ, உங்கள் நிறுவனத்தின் பெயரைப் போல முக்கியமானது. அது உங்கள் நிறுவனத்தின் பெயராகக்கூட இருக்கலாம் அல்லது ஒரு வரையப்பட்ட படமாகவும் (Illustrated Image) இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அது பார்ப்பதற்கு தெளிவாக, கண்ணை உறுத்தாமல் இருக்க வேண்டும்.

நல்ல லோகோ வேண்டுமென்றால், ஒரு டிசைனரை வைத்து உங்களுக்கான லோகோவை தயார் செய்ய வேண்டும். இதற்கு கொஞ்சம் செலவு செய்யத்தான் வேண்டும். இதற்கு செலவு செய்ய முடியாத பட்சத்தில் logogarden.com என்ற இணையத்தளத்தில் இலவசமாகவே உங்களுக்கான லோகோவை தயார் செய்து கொள்ளலாம். மேலும், உங்கள் லோகோவை பதிவுசெய்து கொண்டால், எவராலும் மாற்றி அடிக்க முடியாது. www.ipindia.nic.in என்ற இணையத்தளத்தில் உங்கள் லோகோவை டிரேட் மார்க்காகவோ (TM) அல்லது ரெஜிஸ்டர்ட் (R) என்றோ பதிவு செய்யலாம். லோகோவில் பெரும்பாலும் ஸ்டைலான எழுத்துருக்களை (Font) தவிர்க்க வேண்டும். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தெரியும் வகையில் தெளிவாக எழுத்துக்கள் இருக்க வேண்டும்.



(இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(06 ஆம் பக்க தொடர்ச்சி...)

## தமிழ் சிறப்பு பல்கலைக்கழகம்

போதாதா? என்று கேட்டால் போதாது என்பதுதான் விடை. ஏனெனில் இப் பல்கலைக் கழகங்கள் தமிழுக்கு உயர் மட்டத்தில் செய்த ஆய்வுகளும், வெளியீடுகளும் எத்தனை என்பதனை ஈழ நாடே அறியும். ஆதலால் இலங்கைத் தமிழரின் ஆய்வுக்களத்தை நிறைவு செய்ய இப் பல்கலைக் கழகங்களால் இயலாது.

பொதுப் பல்கலைக் கழகங்களின் நோக்கமும் வேறு. பொதுப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தராக பொறியியல், கணிதம் போன்ற பல்துறை சார்ந்த அறிஞர்களே அதிகம் அமர்வர். இவர்களால் தமிழியல் சார்ந்து முழுமையாகச் சிந்திக்கவியலாது. அதுபோலவே பொதுப் பல்கலைக் கழகங்களின் பேரவை, மூதவை, பீடவை முதலான உயர்முடிவு நிலைக் களங்களிலும் பெரிதும் தமிழியல் சாராத அறிஞர்களே குழுமுவர். இப்பல்கலைக்கழகங்களின் தமிழ்த் தொண்டை 40 ஆண்டுகளாக இந்நாடே அறியும். மேலும், கொழும்புப் பல்கலைக் கழகம் சப்ரகமுவ பல்கலைக் கழகம் முதலானவை அலுவல் நிர்வாக நிலைகளில் சிங்கள மொழியின் பயன்பாட்டைச் சிறப்பாகக் கொண்டிருக்க, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும், கிழக்குப் பல்கலைக் கழகமும், கருமமொழிகளில் ஒன்றான தமிழைப் புறக்கணித்து அலுவல் நிர்வாக நிலையில் பெரிதும் ஆங்கிலப் பயன்பாட்டையே கொண்டுள்ளன. இதற்குத் தாய் மொழியாம் தமிழ்மொழிமேல் இவர்களுக்கிருக்கும் தாழ் சிந்தனையே காரணமாகலாம். இச் சிந்தனையுடைய பொதுப் பல்கலைக் கழகங்களால் தமிழரின் மொழி, கலை, பண்பாடு முதலானவற்றில் யாதொரு ஆக்கமும் ஏற்படும் என எதிர்பார்க்கவியலாது. எனவே, தமிழியற்கலை நாகரிகம், முதலானவற்றை ஆராயும், சிறப்புப் பல்கலைக் கழகம் இன்றியமையாதது என்பதை உணர்தல் வேண்டும். பௌத்த மக்களின் பாலி பௌத்த பல்கலைக் கழகத்தினையும் போற்றுவோம். அதேவேளை தமிழர்களுக்கான தமிழியல் பல்கலைக்கழகத்தினையும் அமைப்பதற்கு அரசிடம் முன்னெடுப்புக்களைத் தொடங்க வேண்டும். இல்லையேல் மிக வரலாற்றுப் பிழையை தம்முன்னோர்கள் செய்தார்கள் என எதிர்காலத் தமிழ் சமூகம் ஏசுதலைப் பதிவு செய்யும்.

"விழித்துக் கொண்டோர் எல்லாம் பிழைத்துக் கொண்டார். வீணில் குறட்டை விட்டோரேல்லாம் கோட்டை விட்டார்" ■



# தத்தெடுத்த தாத்தா



பார்வை நயம் 14

■ கணபதி சர்வானந்தா

மாமா இருக்கும் வரை வீட்டில் எல்லாம் ஒழுங்காக இருந்தது. இப்போ எல்லாம் தலை கீழாக மாறிப்போக புஷ்பாதான் கஷ்டப்பட்டுக்கொண்டாள். புஷ்பாவை கட்டிய நாள் தொட்டு அவள் தகப்பனாரும் அதாவது எனது மாமானாரும் எங்கள் கூடவே இருக்கிறார். மாமி இல்லாமலே புஷ்பாவைப் பல காலம் வளர்த்தவர் மாமா. அவர் இருக்கும் வரைக்கும் வீட்டு வேலை தொட்டு கடைக்குப்போய் சாமான்கள் வாங்கிவருவது வரை அவரது பணியாக எடுத்துக் கொண்டவர்.

வீட்டிலும் வளவிலும் எந்த குப்பை கூழமும் இல்லாது பராமரித்தவர். மகள் சியாமாவுக்கு எல்லாமே அவர்தான். நான் ஒரு மருத்துவர், புஷ்பா பிரதேச செயலகம் ஒன்றில் ஒரு உள வள நல மேம்பாட்டாளர். இருவரும் வேலைக்குச் செல்வதனால் மாமா எமக்கு அத்தனை முக்கியமாக இருந்தார். அவர் இல்லாத வெறுமை எல்லா நிலைகளிலும் உணரப்பட்டது.

சியாமாவை அவர் பிரிவு வெகுவாக வாட்டியது. சியாமாவைப் பொறுத்தவரை அவளுக்குத் தாத்தா தான் எல்லாமே. அவளுக்கென்று தாத்தாவால் இயற்றப்பட்ட பல கதைகளை ஸ்மாட் போனில் பதித்து வைத்திருந்தோம். அவற்றை இன்னும் அவள் கேட்டுக் கொண்டே இருக்கிறாள். அவள் உளவியல் ரீதியாகவும் சந்தோசமில்லாது இருப்பதைப் பல வழிகளிலும் நாம் உணர்ந்து கொண்டோம். இன்னும் சில நாள்களில் வரப்போகும் சியாமாவின் பிறந்த தினத்தைத்தான் சமாளிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும் என்று எண்ணினோம். அவளுக்குத் தாத்தா இல்லாத முதல் பிறந்த தினம் அது.

திருமண நாள் தொட்டு இன்றுவரை எமது குடும்பத்தில் நடக்கும் எந்த விசேடங்களானாலும் இது அந்த முதியோர் இல்லத்தில் கொண்டாடுவது வழக்கம். அதுவும் எமது குடும்ப பிறந்த நாள்களிலும் எமது பெற்றோரின் நினைவு நாள்களிலும் அந்த முதியோர் இல்லத்திற்குத் தவறாது சென்றுவிடுவோம். அது புஷ்பாவின் ஏற்பாடு. அவள் இயல்புக்குப் பிடித்ததொன்று. அவள் வழியில் சியாமாவும் பழகிக்கொண்டாள். சியாமாவுக்கு அங்கு செல்வது, அவர்களுடன் பேசுவது, அவர்களுடன் இருந்து உண்ணுவது எல்லாமே பிடித்ததாகக் கண்டபோது, புஷ்பா அதை வெகுவாக ஊக்குவித்தாள்.

முதியோர் இல்லத்தில் சியாமாவை அதிகம் கவர்ந்தவர் மயில்வாகனம்.

அதனால் அவரைப் பற்றி அதிகம் தெரிந்து வைத்திருந்தோம். சிறுவயது தொட்டு அவர் ஒரு அநாதை இல்லத்திலிருந்து வளர்ந்து - படித்து ஆசிரியர் பணியிலே இருந்தவர். தானிருந்த அநாதை இல்லத்திலுள்ள சிறுவர்களைப் பராமரிக்க வேண்டுமென்பதற்காகத் திருமணம் செய்துகொள்ளாமல் காலத்தைக் கழித்தவர். அப்போது இடையிடையே வந்து இந்த முதியோர் இல்லத்திலும் சேவை செய்தவர். பின்பு அவர் முதுமையடைய நிரந்தரமாக முதியோர் இல்லத்தில் தங்கிவிட்டார். இடையிடையே இல்லத்திற்குப் போகும் எங்கள் மீது அன்பாயிருந்தவரை சியாமாவின் ஈடுபாடு இன்னும் எங்களை அவர்பால் நெருங்கச் செய்தது. இடையிடையே சியாமாவின் அழைப்பின்பேரில் வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்தார்.

ஒரு முறை அவர் சுகவீனமாக இருந்தபோது அவரை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து பார்த்துப் பராமரித்துக் கொண்டோம். அப்போது அவரும் மாமாவும் நெருங்கிக் கொண்டனர். பின்பு மாமா சிலகாலம் படுக்கையாயிருந்தபோது மயில்வாகனத்தின் உதவி அளப்பரியதாக இருந்தது. மயில்வாகனத்தின் முதிர்வற்ற தோற்றமும், ஒழுக்கமும், பிறருக்கு உதவும் பண்பும் எம்மை வெகுவாகக் கவர்ந்தது. அப்படி வரும் போது அவர் எமக்கு சமைத்து தருகின்ற சிற்றுண்டிகள் அவ்வளவு அருமையாக இருக்கும்.

அன்று மாமாவின் நினைவு நாளன்று முதியோர் இல்லம் சென்று அவர்களுடனே மதிய உணவு அருந்துவதாக ஏற்பாடு. அங்கு வருவதற்காக சியாமா போட்ட நிபந்தனை எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நானோ, புஷ்பாவோ முன்பின் அது பற்றிச் சிந்திருக்கவில்லை, இந்த விடயத்தில். சியாமாவின் கோரிக்கையை உதாசீனம் செய்யமுடியாது என்பது எங்களுக்குத் தெரியும்.

சியாமாவின் விருப்பப்படி மயில்வாகனம் எங்களில் ஒருவராகிவிட்டார். இப்போது வீட்டில் ஒழுங்கு மாத்திரமல்ல நல்ல ஒளியும் தெரிகிறது. ஒவ்வொரு காலையும் இறைவணக்கத்துடன் விடிகிறது. சியாமா ஸ்மாட் போனில் இல்லாது நேரடியாகவே கதை கேட்கிறாள். அவளுக்கு இப்போ பல புதிய நல்வழிக் கதைகள் தெரியும். இன்னும் சில தினங்களில் வரப்போகும் அவள் பிறந்ததினத்தை மயில்வாகனத் தாத்தா சகிதம் கொண்டாடப் போகிறாள்.

"குழந்தையும் தெய்வமும்" ஒன்றெனப்பர். அவர்கள் சிந்தனையும் ஆன்மிகவயப்பட்டவை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி...)



# காணி நிலம்...

இப்படிக் காடும், புதரும் வளர்வது பெற்றோருக்கும், உற்றாருக்கும் இழைக் கின்ற அநீதியே. அதோடு இங்கே வந்து குடியேறியிருக்கும் அந்தச் சில குடும்பங் கள் காடுகளின் மத்தியில், பாம்பும் பூச்சியும் உலாவுகின்ற புதர்களுக்கு நடுவேயே வாழ வேண்டியுள்ளது. "பக்கத்துக் காணிகளை விற்கினமும் இல்லை. அதைத் திருத்துகினமும் இல்லை. இதால நாங்கள் நிம்மதியாக இருக்கவே ஏலாமல் இருக்கு" என்று பலவீனமான குரலில் தங்களுடைய ஆதங்கத்தைச் சொல்கிறார்கள். அக்கம் பக்கத்துக்கு, அயலுக்குத் தொல்லையோ தொந்தரவோ கொடுக்க விரும்பாமல் வாழ்ந்தவர்கள் உங்கள் முன்னோர். ஆகவே, அவர்களுக்காவது மரியாதை செய்யும் முகமாக, உங்கள் காணிகளைத் துப்புரவு செய்யுங்கள் அல்லது அவற்றை காணியற்றவர்களுக்கு உங்கள் முன்னோ ரின் நினைவாகக் கொடுங்கள். அல்லது குறைந்த விலைக்கு விற்க முயற்சியுங்கள்.

## மேதர் குடும்பத்தின் முன்மாதிரி

இப்படித்தான் மானிப்பாயைச் சேர்ந்த மேதர் குடும்பத்துக்கு இயக்கச்சியில் ஒரு தொகை காணி இருந்தது. அவர்கள் அதை நீண்டகாலமாகப் பராமரிக்க வில்லை. இதனால் அந்தப் பகுதியில் காணியில்லாதவர்கள் சுமார் 50 குடும்பங் களுக்கு மேல் அந்தக் காணிகளில் குடியேறிவிட்டனர். யுத்தம் முடிந்த கையோடு மேதரின் பேரப்பிள்ளைகள் வந்து காணிகளைப் பார்த்தனர். அதில் யாரோ எல்லாம் குடியிருந்தார்கள். அவர்களை அதிலிருந்து அவர்களால் எழுப்பி வெளியேற்றியிருக்க முடியும். காணிகளுக்குரிய உறுதி ஆவணம் மேதர்குடும்பத்திடம் இருந்தது. சட்டமும் அவர்களுக்குச் சார்பாகவே இருந்தது. ஆனால், அவர்கள் அதைச் செய்ய வில்லை. காணிகளில் குடியிருந்த சனங்களோடு கதைத்தனர். "குறைந்த விலைக்குக் காணிகளை வாங்க முடியுமா" என்று கேட்டனர். ஆனால், அங்கிருந்தவர்கள் காசு கொடுத்துக் காணிகளை வாங்கக்கூடிய வசதி, வளத்தைக் கொண்டவர்களில்லை.



இதனால் மேதர் குடும்பம் பதினைந்து ஏக்கர் காணியை இனாமாக அந்த மக்களுக்கு எழுதிக் கொடுத்தது. இப்போது அந்தக் காணிகளில் வீடுகள் எழுந் திருக்கின்றன. எல்லா வீடுகளிலும் வெளிச்சம் தெரிகிறது. அந்தப் பிரதேசம் ஒளிமயமாகியிருக்கிறது. அங்கே ஒரு விளையாட்டு மைதானம், முன்பள்ளி என எல்லாம் வந்து விட்டன. மேதர் குடும்பத்தின் முகம் அங்கே அழகாகத் தெரிகிறது. பலரை மகிழ்ந்து வாழ வைக்கும் காரியம் எத்தனை அழகானது! எவ்வளவு சிறப்பானது!!

## ஒரு பக்கம் போராட்டம் மறுபக்கம் கைவிடுதல்

இதைப்போல மனதைத் திறந் தால் ஏராளம் நல்ல காரியங்கள் நம்முடைய மண்ணில் நம்முடைய காலத்திலேயே நிகழும். ஒரு பக்கம், "தங்கள் காணிகளைப் படையினர் கையகப்படுத்தியிருக்கின்றனர் என்று போராட்டம் நடக்கிறது" ஒவ்வொரு துண்டு நிலமும் எங் களுக்கு வேணும். அவை எங்களுக் குரியவை, என்ற உணர்வோடு மக்கள் போராடுகிறார்கள். இன்னொரு பக்கத்தில் காணிகளைக் கைவிட்டுச் சென்றவர்களால் காடுறையும் நிலங்கள் பெருகிக் கொண்டிருக் கின்றன. இவற்றையும் இங்கே, இந்த மண்ணோடு வாழும் மக்க ளுக்குக் கொடுக்கின்ற காலம் வரவேணும்.

ஏனென்றால், "மீண்டும் இந்த வளவுகளில் ஒரு சிறிய வெளிச்சம் ஒளிராதா? குழந்தைகளின் குரல் கேட்காதா? பெண்களின் சிரிப் பொலி ஒலிக்காதா? ஆட்டு மணமும், மாட்டு வாசனையும் வராதா" என்று மனம் ஏங்குகிறது.

ஆகவேதான், மீண்டும் சொல் கிறோம் இந்தக் காணிகளுக்குரியவர் களாகிய நீங்கள், உங்கள் முன்னோர் களின் மகிழ்ச்சிக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்தக் காணி களை காணியற்றவர்களுக்குக் கொடுங்கள். அது ஒரு பெருந் தொண்டாகும். அதனால், மீண்டும் இங்கே வெளிச்சம் துலங்கும். சிரிப்பொலி கேட்கும். உங்கள் வளவுகள் சிரித்துக் களித்திருக்கும். உங்கள் நினைவுகள் வாழும்.

# அலம்பல் ஆச்சி



செல்வி

உங்கை யாழ்ப்பாண கம்பசுக்குள்ளை என்ன நடக்குதுபிள்ளையள்? அடிபிடி எண்டுறாங்கள். கலைப்பாடம் படிக்கிற பிள்ளையளை நிப்பாட்டி கிடக்கு எண்டுறாங்கள். பிள்ளையள் என்ன சோத்தி பிள்ளையளே. மடிப்புக் குலையாமை கிலையாமை வந்து இருந்து வாத்திமார் கக்குறதை சிதம்பரசக்கரத்தை பார்த்தபேயள் போலை பார்த்துட்டு போறதுக்கு? கேள்விப் பட்டனியள் தானே உந்த கம்பசிலை நடக்கிற கூத்துக்களை. அதுகள் பெடிபெட் டையள் கையைக் காலை வைச்சிருக்காமல் குழப்படி செய்து போட்டுதுகள். யன்னலையும் உடைச்சுபோட்டுதுகளாம். ஆய்வுகூடத்தின்ரை கண்ணாடியை உடைச்சது படுபிழைதான். அதுக்காக ஆர் உடைச்சதெண்டு விசாரிக்காமை அதுகள் நடத்த இருந்த விழாவை நிப்பாட்டினது மொக்குத்தனமான வேலை கண்டியளோ. அதைவிட கம்பசுக்குள்ளை பொலிசைக் கொண்டுவாறது எந்த வகையிலையும் சரியில்லை. இதிலை இன்னொரு விசர்க்கூத்து ஆடுறாக்கள் ஆரெண்டா என்ன பிரச்சினை நடந்தாலும் ஊடகங்களிலை வகுப்பெடுக்கிறவை தான். கலைப்பீடத்திலை பிரச்சினை ஒண்டு நடந்துட்டா, அந்த பிரச்சனையை பற்றிகதைக்கிறேல்லை. கண்டபாட்டுக்கு பாடத்தை பற்றிதான் கதைக்கிறது. "அதுகள் அப்பிடித்தான்" எண்டு அறிக்கைவிடுறது. உண்ணானைகேக்கிறன். கஸ்ரமான பாடம். சுக மான பாடம் எண்டு என்னவிழல் கதையள்? அவனவன் தன்ரை தன்ரை விருப்பத்துக்கும் இயலுமைக்கும் தான் பாடம் படிக்கிறது. சரியடாப்பா. பிரச்சினை எண்டா பிரச்சினையை பற்றி கதையுங்கோவன். ஏன் பாடத்தையும் நடத்தையையும் உங்கடை முன் முடிவுகளை வைச்சுக்கொண்டு விமர்சிக்கிறியள்? கம்பசிலை இதுக்கு முந்தி ஒரு பீடத்திலையும் கண்ணாடி உடைக்கப்படேல்லையோ? அதுக்கு என்ன முடிவுகண்டவை? கொஞ்ச நாளுக்கு முதல் சிங்களப்பெடியள் உடைச்ச கண்ணாடி மைத்திரியின்ரை நெற்றிக் கண்ணிலை இருந்து வந்த ஒளியாலைதானாக பொருந்தியிட்டுதோ? சரி. பெடியள் தான் பிழைசெய்துபோட்டாங்கள் எண்டு வைச்சாலும் தண்ணியை, கரண்டை நிப்பாட்டினதுமனுசர் செய்யிறவேலையே? கதவைப்பூட்டி வைச்சதுக்கு என்ன காரணம் சொல்லப்போகினம்? படிச்ச மேதாவித்தனத்தை படிப்பிக்கிறதிலை காட்டு றதை விட்டுட்டு பயமறியாமை நிக்கிற இளங் கன்றுகளிட்டையே காட்டுறது?

மாணவர் ஒன்றியத்தை கலைச்சதுக்கு பின்னாலை இருக்கிற அரசியல் பெரிசு பிள்ளையள். இப்பத்தான் எங்கடை சனம் போராடுறதுக்கு முன்னுக்கு வந்திருக்கி துகள். மக்கள் போராட்டங்களை தவிர்க்கேலாமை அரசும் பின் வாங்கிக் கொண்டிருக்கிது. இந்த நேரத்திலை மாணவர்களின்ரை கையளை கட்டிப்போட தங்கடை அதிகாரங்களை பாவிச்சதுன்ரை உளவியல் எல்லாருக்கும் விளங்கும். அதிகாரம் கையுக்கை வந்தநாள் முதலாய் ஒன்றியத்திலை இருந்த காழ்ப்பு இப்ப வெடிச்சிருக்கிது.

ஒன்றியம் மக்களுக்கு அது செய்தனாங்கள். இது செய்தனாங்கள் எண்டு பழம் பெருமையை கதைச்சுக் கொண்டு தேசியம் எண்ட போர்வைக்குள்ளை செய்த பிழையளை மறைக்கப் பாக்கினம் எண்ட குற்றச்சாட்டும் பெடியளுக்கு வந்திருக்கிது. தம்பியவை. அதிகாரம் செய்ததுபிழைதான். ஆனா இப்ப பொறுப்புக்கூற வேண்டிய கட்டத்திலை நிக்கிறியள். ஒரு சில ஆக்களின்ரை அடாவடியாலை இப்ப எத்தினை பிள்ளையள் பாதிக்கப்பட்டிருக்கினம்? கலைப்பீடம் எண்டா உப்பிடித்தான் எண்டு கண்டவனும் வந்துகதைக்கிற அளவுக்கு ஏன்ராப்பா நடக்கிறியள்? ஒரு காலத்திலை கலைப்பீடம் எண்டா எப்பிடி இருந்தது? கம்பசெண்டாலே கலைப்பீடம் தான். விடுதலைப் போராட் டத்திலையும் சரி.. மக்களோட மக்களா நிக்கிறதிலையும் சரி. பிரச்சினை எண்டா முன்னுக்கு நிண்டது நீங்கள் தானே.. இண்டைக்கு குடிச்சிட்டு நாலு தூசணம் கதைச்சிட்டா காணும் என்ற அளவிலை வந்து நிக்கிறியள். என்ன தான் நடந்தாலும் உங்கடை வாத்தியார்களுக்கு நீங்கள் தூசணம் பேசலாமோ? அதுவோ எங்கடை பண்பு? இண்டைக்கு எங்கடை மக்கள் நிலத்துக்காகவும் காணாமல் போன ஆக்களுக்காகவும் றோட்டிலை நிக்கிதுகள். அதுகளுக்கு நீங்கள் நினைச்சா எவ்வளவு பெரிய பலத்தை குடுக்கலாம். சமூகப் பொறுப்பு இல்லாமை நடக்கிறியள். விருந்து நடத்துறேக்கு மட்டுமில்லை ஒன்றியம்.

விருந்துபசாரமெண்ட பேரிலை குடிக்கிறதுக்கு காசுஒதுக்கிறதை எப்பிடி நியாயப்படுத்தப் போறிங்கள்? எத்தினை பிள்ளையளின்ரை அப்பாமாரின்ரை ஒரு நாள் கூலிக்காசு. அதுகள் வேர்வை சிந்துறது நீங்கள் ஆட்டம் போடுற துக்கே? எங்களின்ரை மக்கள் உண்ணா விரதம் இருக்கிதுகள். உங்களுக்கு குடியும் கும்மாளமும். குடிக்கிறதும் குடிக்காததும் உங்கடை விருப்பம். அங்காலை பாருங்கோ. நேற்று உங்கடை சீனியர்களா இருந்தவங்கள் இண் டைக்கு வேலை வேணுமெண்டு போராடுகினம். அவையளுக்கு உங்கடை ஆதரவை குடுத்திருக்கோணும். இல்லாட்டி நாளைக்கு உங்களுக்கும் உது தான் நிலை. கம்பசெண்டுறது பள்ளிக்கூடம் இல்லை பிள்ளையள். நீங்களா படிக்க வேண்டியகனக்க இருக்கு. புத்தகங்கள் வித்தியானந்தன் நூலகத்திலை நித்திரை கொள்ளுது. போங் கோடாப்பா. உருப்படியா ஏதும் செய்யுங்கோ. இல்லாட்டி நாளைக்கு நீங்கள் அதிகாரங்களிலை வரேக்கை மொக்குத்தனமா தான் நடப்பியள்.

உது ஒரு பக்கம் கிடக்கட்டும். ஐ.நாவிலை இலங்கை வென்றிட்டுதாம். கால அவகாசம் குடுத்தது பிழை எண்டு துள்ளிகுதிக்கிறியள். அவ்காசம் குடுக்காட்டி என்ன நடந்திருக்கும்?? ஒண்டும் நடக்கபோறதில்லை. எல்லாம் புத்தன் செயல்.

கதைச்சு என்ன செய்யிறது. வாறன் போட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோப்பாய் சங்கிலியன் கோட்டை

வரலாற்றுப் பழைமை வாய்ந்த கோப்பாய் சங்கிலியன் கோட்டை கோப்பாய் சந்தியில் இருந்து வடக்காக சில யார் தூரத்தில் வலப்பக்கமாக சற்று உள்நோக்கி அமைந்துள்ளது. யாழ்ப்பாண அரசு காலத்தில் குறிப்பாக சங்கிலியமன்னன் ஆட்சியில் இது ஒரு முக்கிய பாது காப்பு அரணாகவும் அரச மையமா கவும் திகழ்ந்ததெனக் கூறலாம்.

எனினும் அண்மைக் காலங்களில் இடிக்கப்பட்டு அவ் இடங்களில் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியிருந்த கட்டடப் பகுதிகள் கூட இடிக்கப்பட்டு வேறு தேவை களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் அரணின் சுற்றாடலில் கிணறு வெட்டியபோதும் வீடு கட்ட அத்திபாரம் வெட்டிய போதும் பழைமையான கலைச்சின்னங்கள் வெளிவந்தன என அறிய முடிகின்றது. அண்மையில் இவ் இடத்தில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட கலாநிதி இரகுபதி இங்கு பரவலாகக் கிடைத்த மட்பாண்டங்களை ஆய்வு செய்து, அவற்றின் காலம் யாழ்ப்பாணம் அரசு தோன்றுவதற்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித் திருந்தார். இக் காலக்கணிப்பு யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னரே இவ் இடத்தில் செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந்தன எனக் காட்டுகிறது.

கோப்பாயை யாழ்ப்பாண மன்னர் கள் தமது நடவடிக்கைகளுக்கான முக்கிய ஒரு மையமாக தெரிவு செய் ததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். நல்லூர் இராசதானியின் கடற்கரைப் பட்டினமாக யாழ்ப்பாணம் விளங்கி னாலும் இதன் பாதுகாப்புக்காகப் பண்ணைத்துறை, கொழும்புத்துறை, கோப்பாய், செம்மணி போன்ற இடங்களில் அரண்களை அமைத்த னர் எனக் கூறப்படுகிறது. 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண மன்னர்களுக்கும் இடையே நடந்த போர்களின்போது யாழ்ப்பாண மன்னர்கள் கோப்பாய் கோட்டையைத் தமது முக்கிய பாது காப்பு அரணாகப் பயன்படுத்தினர் எனக்கூறப்படுகிறது. குறிப்பாக சங்கிலிய மன்னன் போர்த்துக்கேயர் மீண்டும் படையெடுக்கலாம் என அஞ்சி, தனது படையின் ஒரு பிரிவை நல்லூரிலும் இன்னொரு பிரிவை கோப்பாயிலும் வைத்திருந்தான் எனத் தெரிகிறது.

அவன் கோப்பாயை பாதுகாப்பு மையமாகத் தெரிவு செய்தமைக்கு அதன் அமைவிடமே முக்கிய காரணமாகும். தற்போது கோட்டையின் அழிபாடுகள் காணப்படும் இடம் பெரு நிலப் பரப்பிலிருந்து தென்மராட்சி ஊடாக யாழ்ப்பாண அரசின் மீது மேற் கொள்ளப்படும் படையெடுப்புக்களைத் தடுப்பதற்கு முக்கிய மையமாகக் காணப் படுகிறது. இதற்கு கோப்பாய்க்கும் தென்மராட்சிக்கும் இடைப்பட்ட சிறு கடல் பெருந்துணையாக இருந்தது. (இராசநாயகம் 1926) 12 ஆம் நூற்றாண் டில் பொலன்னறுவையில் ஆட்சி செய்த முதலாம் பராக்கிரமபாகு கோப்பாய்க்கு எதிரேயுள்ள மட்டுவில் என்னும் இடத் தில் தன் படைகளை நிறுத்தி வைத்தி ருந்தான். இதே கால சோழர் கல்வெட் டுக்கள் கோப்பாய்க்கு நேரெதிரே அமைந்த மட்டுவில் என்னும் இடத் தைக் கைப்பற்றி அங்கிருந்த படை வீரர்களையும் யானைகளையும் சிறைப்பிடித்தனர் எனக் கூறுகின்றன.

கி.பி -16 ஆம் நூற் றாண்டில் போர்த்துக் கேயரிடம் தோல்விய டைந்த சங்கிலியன் கோப்பாயில் தங்கி யிருந்து அங்கிருந்து தென்மராட்சி ஊடாக மந்துவிலில் உள்ள இன்னொரு கோட் டைக்குச் சென்றான் எனக் கூறப்படுகிறது. யாழ்ப்பாண அரசுகால தென்னிந்திய வணிகம் பருத்தித்துறை, கச்சாய், கோப்பாய் வழியாக நடந்தது எனப் பிற்கால இலக்கியங்கள் கூறுகின்றன.

இவ்வாறு பல வழிகளில் கோப்பாய் சிறப்புற்றிருந்தமையா லேயே யாழ்ப்பாண அரசர் காலத்தில் கோட்டை அமைக்கப் படக் காரணமாகும். இதனால் யாழ்ப்பாண அரசு காலத்தில் நல்லூரை அடுத்து மக்கள் அதிகமாக வாழ்ந்த இடமாக கோப்பாய் இருந் திருக்கலாம். இங்கு பரவ லாகக் கிடைத்த யாழ்ப்பாண அரசு கால நாணயங்களும் அதனை உறுதிப் படுத்து கின்றன.

# உளுத்தம் சுவாலை

உளுத்தம் சுவாலை எனப்படுவது ஈழத்து உணவுகளில் ஒன்றாக இடம்பெறும் ஒரு இனிப்புச் சிற்றுண்டி ஆகும். இந்தச் சிற்றுண்டி ஆனது காலை நேரங்களில் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்கோ அல்லது வேலைக்குப் போகும் குடும்ப உறுப்பினர்களுக்காக அதி உச்ச புரதச் சத்துக்களை கொண்ட உணவாகும். அதேவேளை குறுகிய நேரத்தில் தயாரிக்க கூடியதாகவும் இது அமைந்துள்ளது.

உளுத்தம்மா, அரிசிமா, சீனி, போன்றவற்றை கலந்து சிறிதளவு தண்ணீர் விட்டுக் குழைப்பர் அல்லது பிசைவர்.

பின்னர் இடியப்ப உரலினால், இடியப்ப தட்டில் பிழிந்து அவற்றை ஆவியில் அவித்து எடுப்பர். பெரும்பாலான ஈழத் தமிழர்கள் விரும்பி உண்ணும் உணவாகும்.



# கோழிப்புக்கை

கோழிப்புக்கை என்பது ஈழத்தின், குறிப்பாக வடமராட்சிப் பகுதியிலும், ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளிலும் உண்ணப்படும் ஒரு சிறப்பு உணவாகும்.

பச்சரிசி, ஊர்க்கோழி இறைச்சி, மரக்கறிகள், சுவைப் பொருள்கள் பாவித்து குழையச் செய்யப்படும் உணவு கோழிப் புக்கை ஆகும். இது ஒரு வகைப் பொங்கல் ஆகும்.

புக்கை என்பது பொங்கலைக் குறிக்கும், ஈழத்தில் வழங்கும் சொல் ஆகும்.

இது வட இந்திய உணவான பிரியாணியுடன் ஒப்பிடத்தக்க, ஆனால் சுவையிலும் செய் முறையிலும் கணிசமாக மாறுபட்ட உணவாகும்.



# கந்தரோடை

வட இலங்கையின் கலாசார மரபுரிமைச் சின்னங்களில் முக்கியமான தாக கந்தரோடை விளங்குகின்றது. இது மிகப் பழைமையான வரலாற்றைக் கொண்டுள்ளது.

கந்தரோடை யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் பிரிவில், உடுவில் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள ஒரு ஊர். இவ்வூரின் வடக்கு எல்லை யில் மாகியப்பிட்டி, மல்லாகம் ஆகிய ஊர்களும், கிழக்கு எல்லையில் சுன்னாகம், உடுவில் ஆகிய ஊர்களும், தெற்கில் சங்குவேலியும், மேற்கில் சண்டிலிப்பாயும் உள்ளன. சுன்னாகத்தில் இருந்து மாகியப்பிட்டிக்குச் செல்லும் வீதியில், சுன்னா கத்தில் இருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மிகப்பழைய குடியேற்றப் பகுதிகளில் இது முக்கியமானது. இது இலங்கையிலேயே நகராக்கம் இடம்பெற்ற மிகப்பழைய இடங்களில் ஒன்றாகவும் சொல்லப் படுகின்றது. தற்போது இது சிறிய ஊராக இருப்பினும், பழைய காலத்தில் யாழ்ப்பாணப்பகுதியின் தலைமையிடமாக இருந்ததாகக் கருதப்படுகிறது. அக்காலத்தில் 'கதிரமலை' என அழைக்கப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது. இவ்வூரில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம் பல பண்டையகால சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கந்தரோடைக் குடியேற்றம் புத்தசமயக்காலத்துக்கும் முற்பட்டது என்பதையும், பெருங்கற் காலப் பண்பாட்டுக்கு உரிய சான்றுகள் இங்கு காணப்படுவதையும் ஆய்வுகள் காட்டுவதுடன், இப் பகுதியில் அகழ்வாய்வுகளில் கிடைத்த பொருள்கள் சில கி.மு - இரண்டாவது ஆயிர ஆண்டைச் சேர்ந்தவை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்ணுக்குள் இன்னும் காத்திருக்கிறான்

# ஜொனி

இ.கவிமகன்



**லெப்.** கேணல் ஜொனி. இந்த பெயரை அறியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அதுவும் அமைதிப் படை என்று வந்து தமிழீழத்தில் இனவழிப்பு செய்த இந்திய வல்லாதிக்கப்படை அறியாமல் இருக்க முடியாது, அறிந்திருந்தவர்களால் இன்றும் மறந்திருக்க முடியாது.

மணலாற்றுக் காட்டுக்குள் கால் பதிக்கும் இடமெல்லாம் பாதங்கள் இல்லாமற் போனபோது, "பவான்" என்று அணி அணியாய் வந்த இந்திய அமைதிப்படை திகிலடைந்து நின்ற போது மண்ணுக்குள் புதைந்து கிடந்து இந்தியத்தின் துரோகத்துக்கு பதிலுரைத்துக் கொண்டிருந்தான் ஜொனி.

யார் இந்த ஜொனி? இவனுக்கும் இந்தியத்தின் துரோகத்துக்கும் என்ன தொடர்பு? இந்த வினாக்களுக்கான விடைகளை இந்தப் பத்தியூடாக தேடுவோம்.

தலைவர் பிரபாகரனும் மூத்த தளபதி கேணல் கிட்டுவும் மிகவும் நேசித்த மூத்த போராளியே ஜொனி. தனது பட்டப் படிப்பை தூக்கி எறிந்து விட்டு, தேச விடியல் கனவுடன் போர்க்களம் புகுந்த உயரியவன். இயக்கத்தில் இணைந்த நாள் முதல் கிட்டண்ணையால் புடமிடப் பட்ட போராளி, இறுதிவரை தேசத்தை நேசித்த வீரமகன்.

இப்படியான வேங்கையை தனது ஆயுதப்பயிற்சி என்ற பெயரில் இந்தியா தன் நிலத்தில் அரவணைத்துக் கொண்டது. தர அளவீட்டு ஒப்பீட்டில் மிக தாழ்நிலை பயிற்சிகளை வழங்கி புலிகளையும் ம்ற்ற அமைப்புக்களைப்போல தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நினைத்த இந்தியாவின் கபட நோக்கத்தை அறிந்திருந்த புலிகள், தரப்பட்ட அந்த தரமற்ற ஆயுதப் பயிற்சியில் பெற்ற அனுபவங்களோடு துரோகத்தனம் செய்த இந்தியப் படைகளின் கீழ்த்தரமான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளியிட முடிவெடுத்தனர்.

"அமைதிப்படை" என்ற பெயரில் ஈழத்துக்கு தன் இராணுவத்தை அனுப்பிய ராஜீவ்காந்தியின் செயற்பாடு விடுதலைப் புலிகளை இந்தியாவுக்கு எதிராக, சண்டைக்கு நாள் குறிக்க வைத்தது. புலிகள் போராடினர். புற்றீசல்களாய் தாயகம் முழுக்க பரவிக் கிடந்த இந்திய இராணுவத்தை பலியாக்கி கிலி கொள்ள வைத்துக் கொண்டி ருந்தார்கள். இந்த நேரத்தில் தான், கேணல் கிட்டு, லெப். கேணல் ஜொனி உட்பட்ட போராளிகளை வைத்து தலைவர் பிரபாகரன் தங்கி இருக்கும் இருப்பிடத்தை இனங்காணத் திட்டமிட்டது இந்திய புலனாய்வு அமைப்பான 'றோ'.

முதல் திட்டமாக இந்தியாவில் வீட்டுக்காவலில் சிறை வைக்கப் பட்டிருந்த போராளிகளுக்கான வெளித் தொடர்புகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு, திட்டமிட்ட புனைகதைகள் கூறப்பட்டன. இதனை நம்பும் அவர்கள் எப்படியாவது போராட்டத்தை காக்க வேண்டும் என்பதற்காக எதாவது செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்த்தது போலவே புலிகளும் போர் நிறுத்தம் ஒன்றை வேண்டினர். இதன் மூலமாக தலைவரை சந்தித்து பேசுவதற்கும் அனுமதி கோருவதற்கும் ஏற்பாடு செய்யுமாறு இந்திய அரசை கோரினர். அவர்களோ விருப்பமற்றவர்களைப் போல நடித்து, ஏற்கனவே திட்டமிட்ட படி நடந்தனர். நீண்ட கருத்து முரண்களுக்கு பிறகு அனுமதித்தனர்.

அனுமதி கிடைத்த பின், தலைவர் பிரபாகரனை சந்திக்க தளபதி கிட்டுவால் அனுப்பப்பட்டார் மூத்த போராளி ஜொனி. பல இடர்கள், கண்காணிப்புக்கள், தொடர்ந்து கொண்டிருந்த புலனாய்வாளர்கள், காட்டிக் கொடுப்பாளர்கள் என்று பல்வேறு தடைகளைத் தாண்டி அத்தனை விழிகளுக்குள்ளும் இருட்டைக் காண்பித்து விட்டு தலைவரை சந்தித்தார் ஜொனி. பிரச்சினைகளை ஆராய்ந்தார் - நிலைமைகளை அறிந்து கொண்டார். அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொண்டு, மீண்டும் இந்தியா திரும்ப காட்டை விட்டு வெளியில் வந்தார். ஆனால் தம்மை ஏமாற்றி விட்டு தலைவர் பிரபாகரனை சந்தித்து திரும்பிய ஜொனி மீது பயங்கர கோபத்தில் இருந்தது றோ.

இத்தனை ஏற்பாடுகளையும் மீறி எவ்வாறு ஜொனியால் சாதிக்க முடிந்தது என்ற கோபத்தில் இருந்த இந்திய இராணுவம், புதுக்குடியிருப்பில் உள்ள தேவிபுரம் பகுதியில் நிராயுதபாணியாக வந்துகொண்டிருந்த ஜொனி மீது 13.03.1988 இல் தாக்குதல் நடத்தியது. எந்தத் தேசத்தை விரும்பினானோ, எந்த மக்களுக்காக தன்னை அர்ப்பணிக்க துணிந்தானோ, அந்த மண்ணிலேயே தன் உயிரை விதையாக்கினான் லெப்.கேணல் ஜொனி.

இந்த துரோகத்தனத்தின் மூலம் தம்மை யார் என்று உலகுக்கு முத்திரையிட்ட இந்தியாவை கதிகலங்க வைக்க முடிவு செய்தார் தலைவர். இந்தத் தருணத்தில் தலைவரை அழிக்கும் எண்ணத்துடன் மணலாறு காடு மீது ஒப்ரேசன் 'செக்மேற்'றுக்கு தயாராகினர் இந்தியப் படைகள். இந்தத் தாக்குதலை வெற்றிகரமாக எதிர்கொள்ளவும் இந்தியப் படைக்கு நல்ல பாடம் கற்பிக்கவும் - ஜொனியின் சாவுக்கு பழி வாங்கவும் முடிவு செய்தார் தலைவர் பிரபாகரன்.

மணலாறு காட்டை கட்டுக்குள் வைத்திருந்து எதிரிக்கு பெரும் இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணிய தலைவர் மிதிவெடிகளைப் பயன்படுத்தத் திட்டமிட்டார். காட்டுக்குள் சுற்றி வளைப்புக்குள் இருந்தவர்களால் பெருந்தொகையான மிதிவெடிகளுக்கு எங்கேபோவது, அத்துடன் பெருந்தொகைப் பணத்தை மிதிவெடிகளுக்கு அச்சமயத்தில் செலவு செய்வது என்பதும் முடியாத காரியமாகவே இருந்தது. சிந்தித்த தலைவர் காட்டுக்கு உள்ளேயே கிடைக்கும் மரங்களையும், உணவு வரும் தகரப்பேணிகள், சைக்கிள் ரியூப்புக்கள், டெற்ற னேட்டர்கள், பெண்ரோஜ் பற்றரிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி மிதிவெடிகளை தயாரிக்கும் படி வெடிமருந்து பிரிவுக்கு கட்டளை பிறப்பித்தார்.

தயாரான மிதிவெடிகளைப் பார்த்த தலைவர் பிரபாகரனின் கண்ணில் தீப்பொறிகள் போல, எதிரிகளின் கண்ணுக்குள் தெரியாது காரியமாற்றி வெற்றிகளுக்கு வித்திட்ட வீரமறவன் லெப்.கேணல் ஜொனி நினைவுக்கு வந்தான். எனவே அவற்றுக்கு 'ஜொனி' மிதிவெடி என்று பெயரிட்டார். அந்த மிதிவெடிகள் மணலாற்று காடு எங்கும் விதைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கில் நுழைந்த இந்தியப் படைகள் அந்த வெடிகளில் சிக்கி கால்களை இழந்தனர். ஒப்ரேசன் செக்மேற்றை 1, 2, 3, 4 என நீடித்து, தலைவர் பிரபாகரனை அழிப்பது அல்லது பிடிப்பது என்ற அவர்களின் எண்ணம் ஈடேறவில்லை. மாறாக பல நூறு சிப்பாய்கள் போர்க்களத்தில் இருந்து அகற்றப்பட்டனர்.

வெற்றி புலிகள் வசமானது. உரம் கொண்ட விடுதலைப் பயணத்தின் வீச்சு நீண்டது - அந்தப் போரில் மட்டுமல்ல - பின் வந்த போர்கள் பலவற்றிலும் புலிகளின் பாதுகாப்பிலும் ஜொனி மிதிவெடியின் பங்களிப்பு அளப்பரியது - சொல்லற்கரியது. ஜொனி பெயரைக் கேட்டால் அதிரும் இந்திய - இலங்கை இராணுவங்கள். அன்று மட்டுமல்ல இன்றும்தான். அவர்களை பழிவாங்குவதற்காக இன்னமும் புதைந்திருந்து சிரித்துக் கொண்டேயிருக்கிறான் ஜொனி...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03 ஆம் பக்க தொடர்ச்சி...)

# மரபுவாழ்வில் செருகப்பட்ட கறள் கத்தி



இவை தவிர, போரின் பின்னர் இராணுவம் அரச மரங்களுக்கு கீழ் வடக்கு மக்களுக்கு ஒவ்வாத புத்தர் சிலைகளை ஓர் அடக்குமுறை வடிவங்களாக நிறுவுகின்றது. ஏ -9 வீதி தொடக்கம், வடக்கிலும், கிழக்கிலும் ஏராளமான புத்த படிமங்கள் முட்களைப்போல் மக்களிடையே முளைத்துள்ளன. புதிய ஒவ்வாத ஆக்கிரமிப்பு அடையாளமாக புத்தர் மாறிப்போயுள்ளார். நயினாதீவை 'நாகதீப'வாக மாற்றி பெரும் புத்தர் சிலையொன்றை கடலில் நிறுவும் வேலைகளும் நடக்கின்றன. இதற்கு பெரும் பக்க பலமாக இராணுவமே இருக்கின்றது. தேசத்தின் எல்லா இனங்களுக்கும் பொதுவானது என்று சொல்லப்படும் இராணுவம், குறித்த மத, இன அடையாளங்களை இன்னோர் நிலத்தில் புகுத்துவது மிகப்பெரும் வன்முறையாகும். இவற்றோடு புதிய விகாரைகளும் கொக்குதொடுவாய் போன்ற இடங்களில் முளைக்கின்றன. நிலங்களில் ஆக்கிரமிப்பு குடியேற்றங்கள் அமைக்கப்படுதலும் இராணுவத்தின் பெரும் துணையோடு நிகழ்த்தப்படும் மரபு இருப்பிற்கு எதிரான வன்முறையே ஆகும்.

இவை தவிர வடக்கில் இருக்கும் தொல்லியல் நிலையங்கள் பல இராணுவத்தின் நிலைகளுக்குள் அடைக்கப்படுகின்றன. ஊர்காவற்றுறையில் இருக்கும் ஹைமன்ஹில் கோட்டை உட்பட்ட கோட்டைகள் இராணுவ பாவனையில் மட்டும் இருக்கின்றன. அங்கிருக்கும் கல்வெட்டுகளையோ, தொல்லியல் சான்றுகளையோ அடைவதற்கும் அகழ்வாய்வு, மேலாய்வு செய்வதற்கும் இயலாமல் தொல்லியல், வரலாற்றாய்வாளர்கள் கைவிரிக்கின்றனர்.

ஏன் யாழ்ப்பாணம் கோட்டையில் கூட இன்னும் இராணுவம் நிலை கொண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி நெடுந்தீவு இராணிக் கோபுரம் உட்பட பல இடங்களில் இராணுவப் பிரசன்னம் உள்ளது.

இவைதவிர வலி.வடக்கு பிரதேசம் போன்ற இராணுவ நிலைகளாக உள்ள பிரதேசங்களில் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டதோடு, சமயம் சார்ந்த கோயில்கள், மடங்கள் என்பனவும் அழிக்கப்பட்டும், இராணுவ வலயத்துக்குள்ளும் உள்ளன. குறித்த பிரதேசத்தின் வரலாற்றை வாசிப்பதற்கான மூலங்கள் தொலைந்து போய்கொண்டேயிருக்கின்றன.

இயற்கை மரபுரிமைகளான காடுகள், மலைகள், கடற்கரைகள், குளங்கள் என்பவற்றில் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. இதனால் அவற்றின் மீதான வாழ்வியல் இருப்பு அழிக்கப்படுவதுடன், சுற்றுலாத் தளமாக அவற்றைத் தொடர்ச்சியாகப் பேணவும், இயற்கை மரபுரிமைகளாகப் பேணவும் முடியாதுள்ளது. கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டத்தில்லுள்ள குளங்கள், காடுகளில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. அதைப் போல் மட்டக்களப்பில் உள்ள மலைகளில் இராணுவ நிலைகள் தொடர்ச்சியாக உள்ளன.

எந்தக்காலத்திலும் எந்த இன, மக்களுக்கும் மத்தியில் இராணுவமோ ஆயுதக்குழுவோ இருத்தல் என்பது அவர்களின் வாழ்வை இயல்பிலேயே சிதைத்து விடும். அதுவும் வடக்கு கிழக்கில் போர் முடிந்து சிவில் நிர்வாகம் அமுலுக்கு வந்த பின்னரும், இராணுவம் நிலை கொண்டிருப்பது பெரும் வன்முறையாகவே சமூகத்தில் தாக்கத்தினை தருகின்றது. அதுவும் மரபுகள் மீதான இராணுவத்தில் நிலைப்பாடு என்பது நிலத்தின் சொந்த மக்களின் இருப்பை குழப்பி விடுகின்றது.

இதற்கு எதிராக குரல் கொடுக்கவும் அழுத்தம் கொடுக்கவும் வேண்டிய அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும் தொடர்ந்தும் சுயலாப அரசியல் தளத்தில் நின்று பிரதான அரசியல் கோசம் என்ற ஒன்றை கத்திக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான உப பிரச்சினைகள் பிரதான அரசியல், கோரிக்கையை அடியோடு சிதைப்பதை அவர்கள் உணரவில்லை.



இவைதவிர பல்கலைக்கழக மட்டத்திலும், முதுகெலும்பு அற்ற அமைப்பு முறையே நிலவுகின்றது. அதிகாரமும் குரலும் இருந்தும் கூட, சொந்த நிலத்தின் அடையாளங்கள், மரபுரிமைகள் பற்றிய, வாழ்நிலங்கள் பற்றிய எந்தக் கரிசனையோ முயற்சியோ தமிழ்ப் பிரதேச பல்கலைக் கழகங்களால் எழுப்பப் படவில்லை. ஒரு சிலர் அப்படி குரல் கொடுத்தாலும் அவர்களின் வாதங்கள் அங்கு எடுபடுவதேயில்லை.

பல்கலைக்கழகத்தில் இருக்கும் வரலாற்று, தொல்லியல் துறைகள் கூட இதன் பொருட்டு கள்ளமௌனத்தையே தொடர்ச்சியாக கொண்டுள்ளன. இராணுவமில்லாத பிரச்சினையில்லா இடத்தை கிண்டி, வரலாற்றை எழுதினால் போதும் என்ற நிலைப்பாடே பல்கலைக்கழகங்களில் உள்ளன.

ஊடகங்களும் பரபரப்புக்கும், பிரதான அரசியல் கோசங்களுக்கும் பின்னால் வாலை ஆட்டிக்கொண்டு பின் தொடர்கின்றன. ஊடகங்களில் அறிவார்ந்த, தளம் என்பது முழுவதுமாக அற்றுப் போய்விட்டது. மக்களை அறிவூட்டவும், விழிப்புணர்வூட்டவும் வேண்டிய ஊடகங்களும் சரி இலக்கியவாதிகளும் சரி சினிமா விமர்சனங்களையும், காதல் கவிதைகளையும் எழுதுவதோடு சுருங்கிப்போய் விடுகின்றனர்.

இவ்வாறு இருக்க தொடர்ச்சியாக மக்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டபடியே இருக்கின்றது ஆயினும் மக்களிடம் "சண்டை முடிஞ்சா பிறகு இஞ்ச ஆமி என்னத்துக்கு?" என்ற அடிப்படையான கேள்வியும் விசனமும் இருந்தாலும், அவர்களின் குரலை ஒன்று திரட்டக்கூடிய அரசியலோ, ஊடகமோ, செயற்பாடோ இங்கே குதிரைக்கொம்பாகவே இருக்கின் றது. தொடர்ச்சியாக மக்களின் மரபார்ந்த இருப்பின் மீதும் வாழ்வின் மீதும் இத்தகைய அழிக்கும் கறள்கத்திகள் துருத்திக் கொண்டே இருக்கின்றன.

**யாழ்ப்பாணம் கோட்டையில் கூட இன்னும் இராணுவம் நிலை கொண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி நெடுந்தீவு இராணிக் கோபுரம் உட்பட பல இடங்களில் இராணுவப் பிரசன்னம் உள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசிக மனோபாவம்



கடந்தவாரம் உதைபந்தாட்ட உலகின் பரபரப்பான விடயம் சம்பியன்ஸ் லீக் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப்போட்டியின் முதலாவது ஆட்டத்தில் பி.எஸ்.ஜி. அணியிடம் 4 : 0 என்று தோல்வி அடைந்த பார்ஸிலோனா இரண்டாவது ஆட்டத்தில் 6 : 1 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமைதான். சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் எந்தவொரு அணியும் நான்கு கோல்கள் பின்தங்கிய நிலையில் இருந்து காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்த செய்திகள் எல்லா ஊடகங்களிலும் வெளிவந்தாலும் போட்டிக்குப் பின்னர் நடைபெற்ற இரு அணி ரசிகர்களின் செயற்பாடுகள் குறித்த செய்திகள் அதிகம் வெளிவரவில்லை.

அந்தவகையில் பார்ஸிலோனா மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியின் முடிவில் பார்ஸிலோனாவின் சில ரசிகர்கள் வெற்றிக்களிப்பால் மைதானத்துக்குள் ஆர்ப்பரித்து ஓடி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனாலும் ரசிகர்கள் இவ்வாறு நடந்து கொள்வது விளையாட்டு விதிமுறைகளுக்கு முரணானதாகவே கருதப்படுகின்றது. அதனை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் தற்போது ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியம் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள ஒன்றியக் குழுக் கூட்டத்தில் ரசிகர்களின் இந்தச் செயலுக்காக பார்ஸிலோனா அணிக்கு அபராதமும் ரசிகர்களின் மீது ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படுமென அறிவித்துள்ளது.

அதேசமயம் பி.எஸ்.ஜி அணியின் ரசிகர்கள் சிலர் தோல்வியின் விரக்தியால் விமான நிலையத்தில் இருந்த பி.எஸ்.ஜி வீரர்களை அச்சுறுத்தியதோடு சில ரசிகர்கள் வீரர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் தாக்குவதற்கும் முயற்சித்துள்ளனர். அத்தோடு அங்கிருந்த வாகனங்கள் சிலவற்றையும் அடித்து நொறுக்கி உள்ளனர். இதையடுத்து பி.எஸ்.ஜி. அணி நிர்வாகம் பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ததைத் தொடர்ந்து விமானநிலையத்தில் வீரர்களுக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

# மாற்று யோசனை



2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சென்ற இலங்கை அணியின் வாகனம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப்பின் எந்தவொரு அணியும் பாகிஸ்தான் சென்று விளையாடுவதற்கு அஞ்சிய போது 2015ஆம் ஆண்டு சிம்பாப்வே அணியே சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பொருளாதார ரீதியான பின்னடைவைச் சந்தித்து வந்ததனால் பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரை பாகிஸ்தானில் நடத்தவே விரும்பியது. ஆனால் சென்ற மாதமும் பாகிஸ்தானில் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புக்கள் காரணமாக அரையிறுதிப் போட்டிவரை டுபாயில் நடத்தவும் இறுதிப்போட்டியை மட்டும் லாகூரில் நடத்தவும் முடிவுசெய்யப்பட்டிருந்தது. பாகிஸ்தானில் தொடரை முழுமையாக நடத்தி வெற்றி பெற்றால் ஏனைய நாடுகளையும் பாகிஸ்தானுக்கு வரவைப்பதற்கான மூலோபாயமாகவே அதனைப் பயன்படுத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எண்ணியிருந்தது. ஆனாலும் நினைத்தது ஒன்று நடந்தது இன்னொன்றாகவே இருந்தது.

இந்நிலையில் இறுதிப்போட்டியில் பாதுகாப்புக் காரணத்தை காட்டி கெவின் பீற்றர்சன், றிலி ரூசோவ், லுக் றைற் உள்ளிட்ட சில வெளிநாட்டு வீரர்கள் கலந்துகொள்ளவில்லை. ஆயினும் டரன் சமி, சாமுவேல்ஸ் உள்ளிட்ட சில வெளிநாட்டு வீரர்கள் கலந்துகொண்டார்கள். எனவே தமது உயிரையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்ட வெளிநாட்டு வீரர்கள் பாகிஸ்தான் ரசிகர்களின் மனதில் உயர்ந்து நிற்கிறார்கள். இந்தத் தொடரில் டரன் சமி தலைமையிலான பெஷாவர் சல்மி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

தற்போது இறுதிப்போட்டியை வெற்றிகரமாக நடத்தியதைப் பாராட்டும் விதமாக பாகிஸ்தானுக்கு நல்லதொரு சமிக்ஞை ஐ.சி.சியிடமிருந்து கிடைத்துள்ளது. அதுதான் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பாகிஸ்தானில் 4 'இருபதுக்கு 20' போட்டிகளைக் கொண்ட தொடர் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. எந்தவொரு அணியையும் பாகிஸ்தான் சென்று விளையாடத் தொடர்ந்து வற்புறுத்த முடியாது என்பதனால் மாற்று உபாயமாக அங்கு விளையாட விரும்பும் வீரர்களை உலகப் பதினொருவர் அணியாகத் தெரிவு செய்து போட்டியில் களமிறங்க ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது.

இந்தப் போட்டிகளுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து வழங்கப்படுமா? என்பது சந்தேகத்தை ஏற்படுத்தினாலும் பாகிஸ்தானுக்கு இவ்வாறான போட்டிகள் தூரநோக்கில் நல்ல விளைவுகளைப் பெற்றுத் தரும் என்பது உண்மையே. அந்தவகையில் இந்தப் போட்டிகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22, 23, 28, 29ஆம் திகதிகளில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தாலும் அதில் கலந்துகொள்ளும் வீரர்களின் விவரம் குறித்த எந்தத் தகவலும் இதுவரை வெளியிடப்படவில்லை.

**தொகுப்பு :**
**சி.விமலன்**



கடந்த வாரம் நடைபெற்ற WWE போட்டி ஒன்றில் வீழ்ந்து கிடக்கும் றோமன் றெயின்ஸைப் பார்த்து "நான் அடிச்சா தாங்க மாட்டாய் நாலு மாசம் தூங்கமாட்டாய்" என்று பாடுகிறாரோ அண்டர்ரேக்கர்

# அனுபவம் புதுமை

தற்போது நடைபெற்று வரும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறையில் விராட் கோலியால் கோரப்பட்ட பெரும்பாலான முடிவுகள் தோல்வியில் முடிந்ததன. இதனால் அவர் கடும் விமர்சனத்திற்கு ஆளாகி உள்ளார். ஏனைய நாடுகள் டி.ஆர்.எஸ் தொழில்நுட்பத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்த நிலையில் இந்தியா அதன் முடிவுகளின் துல்லியத்தில் நம்பிக்கை இல்லாததால் ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்து வந்தது. தற்போதுதான் டி.ஆர்.எஸ். தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

எனவே இத்தகைய நிலைக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஒரு காரணமாக விளங்கினாலும் முற்றுமுழுதாக அவர்களை மட்டும் குற்றஞ்சாட்ட முடியாது. ஏனென்றால் அணித்தலைவரின் அனுபவமே இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. கோலி இதுவரையில் 54 டெஸ்ட் போட்டிகளிலும் 179 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ள நிலையில் இந்த அனுபவத்தை ஒரு போதாமையாகக் கருத முடியாது. அந்தவகையில் டோனியோடு ஒப்பிடுகையில் கோலியின் மறுபரிசீலனை முடிவுகள் ஏன் தோல்வியில் முடிகின்றன என்பதற்கு கிரிக்கெட் விமர்சகர் ஒருவர் 4 காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

1. டோனியின் தலைமை நிதானத்துவமாகவும் கோலியின் தலைமைத்துவம் ஆக்ரோசமாகவும் விளங்குவதே இதற்குப் பிரதான காரணமாகும். எந்தவொரு சூழ்நிலையிலும் பதற்றமடையாத டோனி மறுபரிசீலனையை அரிதாகவே பயன்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர். ஆனால் கோலி எளிதில் உணர்ச்சி வசப்படுபவராகவே காணப்படுகின்றார். அவரது துடுப்பாட்டத்தில் அது தெரிவதில்லை என்றாலும் பெரும்பாலும் களத்தடுப்பில் ஈடுபடும்போது அவரையும் அறியாமல் அது வெளிப்படுகின்றது. ஆதலால் மறுபரிசீலனையில் கிடைக்கும் வெற்றியைவிட அந்தநேரத்தின் நெருக்கடியான சூழலில் ஒரு முடிவு கிடைக்காதா என்ற நப்பாசையிலேயே கோலியின் சில கோரிக்கைகள் அமைவதனால் வாய்ப்புக்களை அவர் வீணடிக்கின்றார்.




2. நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்வதில் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரமாக விளங்குபவர் விக்கெட் காப்பாளர் ஆவார். டோனி தலைவராகவும் விக்கெட் காப்பாளராகவும் விளங்குவதனால் அவரது முடிவு பெரும்பாலும் தவறாவதில்லை. ஆனால் கோலி அவ்வாறான சந்தர்ப்பத்தில் சகாவுடன் கலந்தாலோசித்தே முடிவெடுக்க வேண்டியுள்ளது. எனவே டோனியின் அனுபவத்தோடு சகாவை ஒப்பிட முடியாததால் கோலியின் முடிவுகள் தோல்வி அடைவதற்கு இதுவும் ஒரு காரணமாகின்றது.

3. பந்துவீச்சாளர்கள் மறுபரிசீலனை முடிவை அணுகவேண்டும் என்றவுடன் கோலி எதனையும் ஆராயாமல் முடிவெடுக்கின்றார். ஆனால் டோனி பந்துவீச்சாளர்கள் அவ்வாறு கோரினாலும் தனது உள்ளுணர்வின் அடிப்படையில் முடிவெடுப்பதனால் அவரது முடிவுகள் பெரும்பாலும் தவறாவதில்லை.

4. டோனி தன்னால் நடுவரின் தீர்ப்பை கணிப்பிட முடியாத பட்சத்தில் ஸ்லிப்பில் நிற்கும் வீரர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கின்றார். ஆனால் இத்தகைய அனுபவம் கோலிக்கு இன்னமும் ஏற்படவில்லை. ஏனென்றால் கோலி பந்துவீச்சாளர்களை நம்பும் அளவுக்கு ஸ்லிப்பில் நிற்கும் முரளி விஜய் மற்றும் ரகானே ஆகியோரின் கருத்துக்களைக் கேளாமல் தன்னிச்சையாகவே முடிவெடுக்கின்றார்.

எனவே மேற்படி காரணங்களை நோக்கும் பொழுது கோலி மறுபரிசீலனை விடயத்தில் டோனியிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் இன்னும் இருக்கின்றன என்றே தோன்றுகிறது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 18.03.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org